விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 06 திங்கட்கிழமை (20.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 184

# இரு சகோதரர்கள் உட்பட மூவர் கடலில் மூழ்கி பலி!


சாருஜன்


சஞ்சயன்


பகிரதன்

## நயினையில் நேற்று துயரச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவுக்கடலில் குளித்த இளைஞர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் உள்ளிட்ட மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். நயினாதீவு நாகபூஷணி அம்மனின் தேர்த்திருவிழாவான நேற்று இடம்பெற்ற இப் பரிதாப சம்பவம் பலரையும் துயரத்துக்குள்ளாக்கியுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

### 4,600 படையினர் சட்ட பூர்வமாக நீக்கம்

(கொழும்பு)

இராணுத்திலிருந்து தப்பிச் சென்ற 4 ஆயிரத்து 600 இராணுவ சிப்பாய்கள் பொது மன்னிப்பின் கீழ் இராணுவ சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதில், 4 ஆயிரத்து 229 இராணுவ சிப்

24ஆம் பக்கம் பார்க்க....

### போராட்டம் ஓயாது; கம்மன்பில சூளுரை

(கொழும்பு)

சிறையில் போட்டாலும் அரசாங்கத்துக்கு எதிரான தனது போராட்டம் ஓயாது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தனது பேஸ்புக் பக்கத்தில் நேற்று முன்தினம் பதிவு விட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


24ஆம் பக்கம் பார்க்க....

### ஊடகவியலாளர்களிடம் மன்னிப்பு கோரிக்கை

(கொழும்பு)

சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான பிரதி பொலிஸ்மா அதிபர் ரஞ்சித் பெரேரா ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய சம்பவம்

23ஆம் பக்கம் பார்க்க....



வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. காலை 7 மணியளவில் ஆரம்பமான வசந்த மண்டபபூஜையை அடுத்து பிள்ளையார், முருகன் சமேதராய் உள் வீதியுலா வந்த நாகபூஷணி அம்மன் காலை 8.30 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

### எதிரணியை முடக்கவே கம்மன்பில கைது

(கொழும்பு)

தூய்மையான நாளைக்கான ஹெலஉறுமய அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவை கைது செய்துள்ளமை கூட்டு எதிரணியை முடக்கும் சதி என தேசிய சுதந்திர முன்னணி

23ஆம் பக்கம் பார்க்க....

### 4 அமைச்சர்கள் பிரிட்டன் பயணம்

(லண்டன்)

பிரித்தானியாவில் நடைபெறவுள்ள கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு தொடர்பில் அந் நாட்டு பிரதமர் டேவிட் கமரூனுக்கு உதவுவதற்காக இலங்கையில் இருந்து நான்கு அமைச்சர்

23ஆம் பக்கம் பார்க்க....

### உதயங்க வீரதுங்க விவகாரம்; உக்ரைனுடன் இலங்கை ஒப்பந்தம்

(கொழும்பு)

உக்ரைனுடன் குற்றவாளிகளை பறிமாற்றிக் கொள்ளும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குற்றவாளிகளை பரிமாற்றிக்கொள்வது தொடர்பான இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அடுத்த வாரம் உக்ரைன் செல்லவுள்ளதாக தெரியவருகின்றது.

உக்ரைனுடனான இந்த உடன்படிக்கை கைச்

24ஆம் பக்கம் பார்க்க....

### "குற்றச்சாட்டை நிரூபித்தால் கழுத்தை அறுத்துக் கொள்வேன்"

(கொழும்பு)



தான் 18 பில்லியன் டொலர்களை கொள்ளையிட்டுள்ளதாக கூறப்படும குற்றச்சாட்டை நிரூபித்தால் தனது கழுத்தை தானே அறுத்து கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

24ஆம் பக்கம் பார்க்க....

### புதியகட்சி ஆரம்பித்தால் மகிந்த வெளியேற்றப்படுவார்

#### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ புதிய கட்சி ஆரம்பித்தால் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவார் என திட்டவட்டமாக தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான துமிந்த திஸாநாயக,

புதிய கட்சிகள் எத்தனை தலையெடுத்தாலும் அது சுதந்திரக் கட்சிக்கு சவாலாக அமையாது என்றும் அவர் தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

### தனியார் காணிகளிலுள்ள இராணுவத்தை விரைவில் வெளியேற்ற நடவடிக்கை!



#### ஜனாதிபதி மேற்கொள்வார் என விஜயகலா தகவல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கில் தனியார் காணிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளார் என சிறுவர் விவகார, ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புனரமைப்புச் செய்யப்பட்ட துரையப்பா விளையாட்டு மைதான திறப்பு விழாவுக்கு கடந்த சனிக்கிழமை வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்

24ஆம் பக்கம் பார்க்க....

# சிறுமி மீது துஷ்பிரயோகம்; 18 வயது இளைஞர் கைது

(கரணவாய்)

சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புனிதநகர் கற்கோவளத்தைச் சேர்ந்த (வயது 15) சிறுமியை கடந்த 17ஆம் திகதியன்று ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென்ற அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் சிறுமியின் தாயாரால் பருத்தித்துறைப் பொலிஸில செய்யப்பட்ட முறைப்பாட்டின்படி அன்று மாலை அவ் இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர். விரைவில் குறித்த இளைஞனை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர். (செ-60)

# சேதம் விளைவித்த நபரொருவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் அலுவலகத்திற்கு சேதம் ஏற்படுத்திய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் டுபாய் நோக்கி செல்ல வந்த அவர், அலுவலக அதிகாரிகளுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, அங்கிருந்த பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளார்.

இதேவேளை சந்தேகநபர் சேத விளைவிப்பின் போது காயமடைந்திருந்தமையால், அவரை பொலிஸார் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (செ-12)

# மத்திய வங்கி முறிகள் குறித்த விசாரணை அறிக்கை விரைவில்

## கோப் குழுவிடம் கையளிக்கப்படும்

மத்திய வங்கியின் முறிகள் தொடர்பான தனது விசாரணை அறிக்கையை எதிர்வரும 30 ஆம் திகதி கோப் குழுவிடம் கையளிக்கவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதற்கான பல ஆவணங்களை மத்திய வங்கி வழங்கியுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைக்கான மேலும் பல ஆவணங்கள் நேற்று முன்தினம் மத்திய வங்கியின் அதிகாரிகளால் தன்னிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மத்திய வங்கியின் முறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல் குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறு கோப் என அழைக்கப்படும் பொது முயற்சியாண்மைகளுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு, கணக்காய்வாள்ர் நாயகத்திற்கு பரிந்துரைத்திருந்தது.

அதற்கமைய, விசாரணைகளுக்கான ஆவணங்களை மத்திய வங்கியிடம் கணக்காய்வாளர் நாயகம் கோரியிருந்த போதிலும், அதனை வழங்குவதற்கு மத்திய வங்கி மறுப்பு தெரிவித்திருந்தது.

இந்தநிலையில் தேவையான ஆவணங்களை வழங்குமாறு கோப் குழு அறிவித்ததாக, அந்த குழுவின் தலைவர் சுனில் ஹந்துனநெத்தி தெரிவித்திருந்தார்.

அதற்கமைய மத்திய வங்கியின் ஆளுநர் கடந்த 8ஆம் திகதி கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டு, குறித்த ஆவணங்களை கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சின்னத்துரை

### (முன்னாள் இ.போ.ச சாரதி)



கோப்பாய் இராசவீதியை சேர்ந்த முன்னாள் CTB சாரதி கந்தையா சின்னத்துரை நேற்று 19.06.2016 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-மீனாட்சி தம்பதிகளின் அருமை புதல்வரும், சிவபாக்கியத்தின் அன்பு கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா, இராசம்மா, நல்லம்மா, தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜீவா (கோப்பாய்), கலா (ஜேர்மனி), சத்தியவாணி (ஜேர்மனி), மயூரன் (ஜேர்மனி), சுஜிந்தன் (ஜேர்மனி), லக்கி (பிரான்ஸ்), வ்தனி (பிரான்ஸ்), றூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜசெல்வம் (மீசாலை), யோகநாதன் (ஜேர்மனி), வேணுகுமார் (ஜேர்மனி), பாலசேகரம் (பிரான்ஸ்), பாலலேந்திரன் (பிரான்ஸ்), பாலிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், லதர்சன், லகிசன், லவீனா (கோப்பாய்), சுஜென்னொ, சுஜென், டெனி, சமந்தா, கியாரா, அரிஸ்ஸா (ஜேர்மனி), லுக்கி, அனுக்ஷி, அஞ்சலா, அனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:-இராஜ் செல்வம்
இராசவீதி, கோப்பாய் தெற்கு.

(4988)

## மரண அறிவித்தல்

### முத்துச்சாமி பாலசுப்பிரமணியம்

### (மீசை, ராசன்)



சித்தன்கேணி டச்சுவீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி பாலசுப்பிரமணியம் (மீசை, ராசன்) நேற்று 19.06.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி-வள்ளியம்மை தம்பதிகளின் இளையமகனும், காலஞ்சென்றவர்களான தவராசா-யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் பாசமிகு கணவரும், ராஜதயாளன் (பிரபல வர்த்தகர்), நாகரஜனி, தயாளினி (லண்டன்), நாகலோஜினி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலராணி, இதயகரன், விஜயதீபன் (லண்டன்), வினோத் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிருஜன், தக்ஷன், றிஸ்மியா, கௌசிகன், லக்ஷன் (லண்டன்), நிசானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.06.2016 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வட்டு வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிரு களஞ்சியம்
டச்சு வீதி, சித்தன்கேணி.

(சி-4965)

தகவல்:-குடும்பத்தினர்
0778332879

### பொன்னு-கந்தசாமி (நவம்)

### (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)



யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும், றக்காவீதி, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்து வந்தவருமான நவம் என்று அன்பாக அழைக்கப்படும் பொன்னு-கந்தசாமி அவர்கள் 18.06.2016 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு-சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராணி (கோமதி) அவர்களின் அன்புக் கணவரும், பிரான்ஸை வதிவிடமாகக் கொண்டவர்களான றமணன், றகுலன், ராஜு, ராஜி, றஜித்தன் (இலங்கை) ஆகியோரின் அன்பு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, குகதாசன் மற்றும் குமாரசாமி (திரவியம்-கொழும்பு), உமாபாலன் (France), காலஞ்சென்ற உதயபாலன் மற்றும் நகுலேஸ்வரி (வள்ளி-இத்தாலி), சிவபாலன் (குட்டி-France) ஆகியோரின் அன்பு சகோதரனும், சதானந்தம் (இந்தியா), நாகேஸ்வரி, உருத்திராணி (ஜேர்மனி), பரமேஸ்வரி, சற்குணேஸ்வரி, விஜயன், உதயகுமார் (கொலண்ட்), காலஞ்சென்ற ஜெயகுமார் மற்றும் ராஜன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரான்ஸை வதிவிடமாகக் கொண்டவர்களான கல்பனா, ரஸ்மினா, தர்சினி, உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

பிரான்ஸில் நடைபெறவிருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-ராஜு (மகன் France-0033651189299)
சுமித்திரன் (பெறாமகன்-077711305)
றக்கா வீதி, சுண்டிக்குளி.

(4991)

# கைது செய்யப்படுவோரை சித்திரவதை செய்யக்கூடாது

## ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு



(கொழும்பு)

**தீவிரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்படும் அல்லது தடுத்து வைக்கப்படும் எவரையேனும் சித்திரவதை செய்யக்கூடாது என் பது உள்ளிட்ட கண்டிப்பான உத்தரவுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கை ஆயுதப்ப டைகளுக்கும் பொலிஸாருக்கும் விடுத்துள்ளார்.**

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது கூட்டத் தொடர் நடந்து வரும் நிலையில், இந்த புதிய உத்தரவு கடந்த வெள்ளிக் கி ழமை பிறப்பிக்கப்பட்டுள் ளது.

எந்தவொரு நபரையும் கைது செய்பவர், தனது பெயர் மற்றும் பதவிநிலை தொடர் பான தகவல்களை அவரது உற வினர் அல்லது நண்பருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

கைது செய்யப்படும் அல்லது தடுத்து வைக்கப்ப டும் ஒவ்வொரு நபருக் கும் தாம் எதற்காக கைது செய்யப் பட்டோம் என்ற காரணம் தெரிவிக்கப்பட வேண்டும்.

பெண்களை, வேறு பெண் கள் மூலமே "சோதனையிட வேண்டும். அவர்களின் கௌரவம் மற்றும் உடல் ரீதியான இறைமை பாது காக்கப்பட வேண்டும்.

கைது செய்யப்படுபவர் மருத்துவ உதவி கோரும் போது உடனடி நடவடி க்கை எடுக்க வேண்டும்.கைது செய் யப்படும் நபரைச் சந் திப்பத ற்கு, சட்ட வாளரு க்கு அனுமதி அளிக்க வேண் டும்.

கைது செய்யப் பட்ட அல் லது தடுத்து வைத் திருக்கும் நபரை சித்திர வதை செய் யவோ அவமரியாதைக்குட் படுத் தவோ கூடாது.

எல்லா தடுப்பு முகாம் களிலும் தேவையான அடிப் படை வசதிகள் செய்யப்பட் டிருக்க வேண்டும் என்பன ஜனாதிபதி உத்தரவில் அடங் கியுள்ளன.

ஆயுதப்படைகளின் பிர தம தளபதி மற்றும் பாதுகா ப்பு அமைச்சர் என்ற வகை யில், ஆயுதப்படையினரும், பொலி ஸாரும் அவசியம் கடைப்பிடி க்க வேண்டிய விதி முறை கள்என்று குறிப்பிட்டு இந்த ஐந்து பக்க உத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார். (இ-5)

## ஐ.தே.க.தேவைக்கேற்ப உள்ளூராட்சித்தேர்தல் பிற்போடப்படுகிறதா?

### டிலான் சந்தேகம்



ஐக்கிய தேசிய கட்சியின் தேவைக்கேற்ப உள்ளூரா ட்சி தேர்தல் பிற்போடப்படுகி றதா என சந்தேகம் எழுவ தாக நெடுஞ்சாலைகள் இரா ஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை உறுப் பினர்கள் இல்லாமல் சில செயற்பாடுகளை முன்னெடு க்க முடியாது உள்ளது என தெரிவித்த அவர்,

மாகாண சபைகள் மற் றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா தேர்தலை நடத்த உரிய நட வடிக்கைகளை மேற்கொ ள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹாலிஎல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெ ற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## இந்திய உதவியுடன் திருகோணமலை எண்ணெய்க் களஞ்சிய அபிவிருத்தி

இந்தியாவின் உதவியு டன் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் களஞ்சி யத் தொகுதி அபிவிருத்தி செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

இதுதொடர்பாக பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்துக் கும், இந்திய அதிகாரிகளுக் கும் இடையில் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.இரண்டு தரப்புக் கும் பயனளிக்கும் வகையி லான உடன்பாடு ஒன்று விரை வில் எட்டப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே பிரத மர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

99 எண்ணெய்க் குதங்க ளைக் கொண்ட திருகோ ணமலை எண்ணெய்க் கள ஞ்சியத் தொகுதி பிரித்தா னியர்களால் கட்டப்பட்ட போதி லும், அது முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## யாழில் பொலிஸ்மா அதிபர் பூஜித சிவில் சமூகத்தினருடன் சந்திப்பு

### வடபகுதிக்கு தேவையான தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்துக்கு 2 நாட்கள் விஜயம் மேற்கொ ண்டிருந்த பொலிஸ்மா அதி பர் பூஜித ஜயசுந்தர நேற்று முன்தினம் யாழ் மாவட்டத் தில் உள்ள சிவில் சமூகத் தினரை யாழ்.நகரில் உள்ள தனியார் விடுதியொன்றில் சந்தித்து கலந்துரையாடி னார்.

குறித்த கலந்துரையாட லில் யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் ஆளணி பற்றாக்கு றைகளால் பொலிஸாரினால் சிறந்த சேவையை வழங்க முடியாமல் போவதாகவும் வடபகுதியில் கடமையாற்ற தேவையான அளவு தமிழ் பொலிஸார் இல்லை என்றும் சிவில்சமூகத்தினர் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதற்குபதிலளித்தபொலிஸ்மா அதிபர் விரைவில் தமிழ் பொலிஸார் நியமிக்கப்படவு ள்ளதாகவும் பொலிஸ் நிலை யங்களில் காணப்படும் குறை களை இலகுவான பொறி முறை ஒன்றின் ஊடாக நிவர்









த்தி செய்ய தற்போது நடவ டிக்கை எடுத்துள்ளதாகவும்

அதற்கான பயிற்சிகள் பொலி ஸாருக்கு ஆரம்பிக்கப்பட்டுள்

ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் தேசிய ரீதியில்

அனைத்து இனங்களும் ஒற் றுமையாக வாழ்வதற்கான

சூழ்நிலையை உருவாக்கி கொடுக்கும் பொறுப்பு பொலி ஸாருக்கு உள்ளது. அதற்கு பொதுமக்களின் ஒத்துழை ப்பும் அதிகமாக தேவை. சட்ட ரீதியான செயற்பாடு களை மாத்திரம் பொலிஸார் மேற்கொள்வது என்றில்லா மல் சமூக ரீதியான பொலிஸ் சேவையையும்வழங்க வேண் டும் என்பது எமது விருப்ப மாகும்.

உறுதியான பொலிஸ் புலனாய்வு தகவல் பொறி முறை எம்மிடம் உள்ளது. எனினும் அவற்றை சீரமை த்து மேலும் பலப்படுத்துவத ற்கு பொதுமக்களின் பங்களி ப்பு மிக மிக அவசியம். அவ் வாறான ஒரு பொறிமுறை சரியான முறையில் தொடர் ந்து நடைமுறைப்படுத்தப்ப டும் போது எமது சமூகத்தில் ஏற்படும் வன்முறைச்சம்ப வங்களை கட்டுப்படுத்த முடி யும் அவ்வாறான பொறிமுறை தொடர்பாக சிவில் சமூகத்தி னரிடையே அறியப்படுத்தி குறித்த பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


# இளம் இந்திய அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது சிம்பாப்வே

இந்தியாவுக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் சிம்பாப்வே 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

இந்திய அணி 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை முழுமையாக வென்றது.

தற்போது 2 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடர் நடைபெற்று வருகிறது. இதன் முதல் இருபது-20 போட்டி நேற்று முன்தினம் ஹராரேயில் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்



திய அணித்தலைவர் தோனி முதலில் பந்து வீசமுடிவு செய்தார். அதன்படி, சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

சிம்பாப்வே அணிக்கு மசகட்சா 25 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிபாபா 20 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ரிச்மண்ட் (0) 'ரிட்டயர்டு ஹர்ட்' முறையில் வெளியேறினார்.

இதனையடுத்து வந்த வாலர் 30 ஓட்டங்களிலும், சிக்கந்தர் 20 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

இதன் பின்னர் தனியாளாக அதிரடி காட்ட ஆரம்பித்தார் சிகும்புரா. சிக்சராக பறக்க விட்ட அவர் அரைசதம் கடந்தார்.


இதனால் சிம்பாப்வே அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்கு 170 ஓட்டங்கள் எடுத்தது. சிகும்புரா (54), மட்ஜிவா (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்திய அணி சார்பில், பும்ரா 2 விக்கெட் எடுத்தார்.

இதன் பின்னர் சற்று கடின இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு தொடக்க வீரர் ராகுல் முதல் பந்திலே டக்-அவுட்டாக வெளியேறினார்.


ராயுடு 19 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, நிதானமாக ஆடிய மந்தீப் சிங் 31 ஓட்டங்களும், அதிரடியாக ஆடிய மணீஷ் பாண்டே 48 ஓட்டங்களும் எடுத்து நடையை கட்டினர்.

பதற்றமான சூழ்நிலையில் தோனி, அக்சர் படேல் ஜோடி சிறப்பாக செயல்பட்டது. இந்த நேரத்தில் அக்சர் படேல் (18) ஆட்டமிழக்க மீண்டும் சிக்கல் ஏற்பட்டது.

கடைசி ஓவரில் ரிஷி தவான் பந்துகளை வீணடிக்க, இந்திய அணியால் 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 168 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் 2 ஓட்டங்களால் சிம்பாப்வே வெற்றி பெற்றது. தோனி (19), ரிஷி தவான் (1) களத்தில் இருந்தனர். (க)




# அயர்லாந்தை வீழ்த்தி தொடரை வென்றது இலங்கை அணி





அயர்லாந்து அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 136 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இலங்கை-அயர்லாந்து அணிகள் மோதிய 2ஆவது ஒரு நாள் போட்டி டப்ளின் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய இலங்கை அணி இமாலய ஓட்டங்களை குவித்தது. 50 ஓவரில் அந்த அணி 8 விக்கெட்



இழப்பிற்கு 377 ஓட்டங்களை குவித்தது.

தொடக்க வீரர் குஷல் பெரேரா சதம் விளாசினார். அவர் 128 பந்தில்16 பவுண்டரி, 2 சிக்சர்கள் உட்பட 135 ஓட்டங்கள் எடுத்தார், மற்றொரு தொடக்க வீரர் குணத்திலக (63) அரைசதம் எடுத்தார்.

அயர்லாந்து அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்த பிரசன்ன 46 பந்தில் 5 பவுண்டரி, 9 சிக்சர்கள் என 95 ஓட்டங்கள் குவித்து மிரட்டினார். மஹரூப் தன் பங்கிற்கு 29 ஓட்டங்களும், அணித்தலைவர் மத்யூஸ் 24 ஓட்டங்களும் குவித்தனர்.

378 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய அயர்லாந்து அணி இலங்கையின் அபார பந்துவீச்சில் திணற ஆரம்பித்தது.

இதனால் 45 ஓவர்களில் 241 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. மெக்பிரைன் அதிகபட்சமாக 79 ஓட்டங்கள் குவித்தார். இலங்கை அணி சார்பில், சுரங்க லக்மல் 4 விக்கெட் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் இலங்கை 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என கைப்பற்றியுள்ளது. (க)

# சர்வதேச போட்டிகளில் பந்து வீச எரங்கவுக்கு ஐ.சி.சி தடை விதிப்பு

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷமிந்த எரங்க. இவர் இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் இடம்பிடித்து விளையாடினார். அப்போது அவர் பந்து வீச்சு மீது சந்தேகம் இருப்பதாக நடுவர்கள் புகார் அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து அவரது பந்து வீச்சு பரிசோதனைக்கு உட்பட்டது. அப்போது அவர் ஐ.சி.சி விதிக்கு மாறாக அனைத்து பந்துகளையும் 15 டிகிரிக்கு மேல் கையை வளைத்து வீசியது தெரிய வந்தது. இதனால் ஐ.சி.சி அவரை சர்வதேச போட்டியில் பந்து வீச தடை விதித்துள்ளது. இதுகுறித்து இலங்கை கிரிக்கெட் சபைக்கும் தகவல் தெரிவித்துள்ளது. கடந்த 6ஆம் திகதி ஐ.சி.சி அங்கீகாரம் பெற்ற இடத்தில் தனது பந்து வீச்சை சோதனைக்கு உட்படுத்தினார். அதன்பின் பந்து வீச்சில் மாற்றம் செய்து மீண்டும் பரிசோதனை செய்ய அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இன்று அவர் மீண்டும் பரிசோதனைக்கு தயாரானார். இந் நிலையில் இதய நோய் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனால் இந்த தடை உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது. (க)




ஓம் நமசிவாய

சித்தன்கேணி அருள்மிகு
ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலயம்
ஆனிப் பூரணை தீ மிதிப்பும் தீர்த்தமும்



**20.06.2016 திங்கள் பகல் 11 மணி விசேட சொற்பொழிவு**

சைவ சித்தாந்த பண்டிதர் சைவ சித்தாந்த கலாநிதி
சைவப் புலவர் **செ.கந்தசத்தியதாசன்** M.A
சைவ சித்தாந்த பண்டிதர் செஞ்சொற்செல்வர்
சைவப் புலவர் **க.நித்தியதசீதரன்** M.A

**திங்கள் பகல் 1.00 மணி தீ மதிப்பும் தீர்த்தோற்சவமும்**

மஹோற்சவ குரு சித்த ஞானகுரு
சாமஸ்ரீ சமூகஜோதி சேவை நெறிச் செம்மல் **இந்திரன் ஐயா**

*அனைவரும் வருக, அம்பிகையின் அருள் பெறுக,*
*திருவாக்கு பெறுக, சுபம் பெறுக.*

**சோமசுந்தரம் சிவநேசன் குடும்பம், சாவகச்சேரி - கனடா உபயகாரர்கள்**

(4990)



பாராட்டி வாழ்த்துகின்றோம்





சித்தன்கேணி நாககன்னி அம்மன் ஆலய
பிரதம குரு

**சித்த ஞான குரு இந்திரன் ஐயா**


**அவர்களுக்கு**

கொழும்பு - 06 வெள்ளவத்தை
இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில்
அகில இன நல்லுறவு தேசிய ஒன்றியத்தால்
நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில்
**சாமஸ்ரீ சைவநெறி செம்மல் சமூகஜோதி**
எனும் சிறப்புப் பட்டம் வழங்கிக்
கௌரவிக்கப்பட்டமையையொட்டி எமது
பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வையகம் போற்ற வாழ்த்துபவர்கள்**

**சைவ சித்தாந்த பண்டிதர் சைவச் சொற்பொழிவாளர்**
**சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன்** J.P **கௌரவ செயலாளர்**
**கன்னியர் வைரவர் ஆலயம் புத்தூர் கிழக்கு, புத்தூர்.**

(4990)



சித்தன்கேணி ஞானரத்தினம் அமைப்பினர் வீணாகான குரு பீட அனுசரணையுடன் அண்மையில் நடத்திய ஆன்மீக வார்த்தைப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழாவில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவினருக்கு பதக்கம் அணிவித்து கேடயம் வழங்கப்பட்டது. இதன்போது ஞானரத்தினம் அமைப்பாளர் பிரம்மஸ்ரீ சபாரத்தின சர்மா மற்றும் முன்பள்ளி ஆசிரியை லீலாவதி மாரிமுத்து ஆகியோர் பதக்கம் அணிவித்து கேடயம் வழங்கி வைப்பதையும் விருந்தினர்களாக கலந்து கொண்ட ஸ்ரீமதி சாருலதா வாசுதேவக் குருக்கள். வீணாகான குரு பீட பொருளாளர் பிரம்மஸ்ரீ ஸ்ரீராம் சர்மா ஆகியோர் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:19சூரி செவ் 3 இல்<br>உயரம்: 161cm<br>தகைமை/தொழில்:HNDலண்டன் NOT PR எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/5958 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 78செவ் 7 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/5566 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 29<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/5959 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 32செவ் 12 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5567 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 14<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/5960 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 63சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BSc/ DEMO<br>தொ.இ: G/5571 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 50<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ வங்கியாளர்<br>தொ.இ: B/5963 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 25செவ் 12 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/5573 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.)


# தென்கொரிய அமைச்சர் உள்ளிட்ட 25 பேர் இலங்கைக்கு விஜயம்

தென்கொரியாவின் வர்த்தக அமைச்சர் உள்ளிட்ட 25 பேர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தனர்.

மேல் மாகாண மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினூடாக முன்னெடுக்கப்படும் திட்டங்களில் முதலீடு செய்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இந்த குழு நாட்டை வந்தடைந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க தெரிவித்தார்.

கைத்தொழில், கல்வி உள்ளிட்ட பல துறைகளில் இவர்கள் முதலீடு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த முதலீட்டாளர்களுடன் இரண்டு நாட்கள் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலூடாக நாட்டிற்கு பாரிய அளவிலான நிதியை பெற்றுக் கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் மேல் மாகாண மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கையில் இரு மாதங்களில் இலத்திரனியல் அ.அ. அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் திட்டம் இன்னும் இரண்டு மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எட்டு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த திட்டத்துக்கு, நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்படும் என்று ஆட்பதிவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் குமார தெரிவித்தார்.

புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள அடையாள அட்டையில், அனைத்து கைவிரல் அடையாளங்களையும் உள்ளடக்கிய உயிரியல் தகவல்கள் மற்றும் ஒளிப்படம் அடங்கிய இலத்திரனியல் அட்டை ஒன்று இருக்கும்.

65 வயது வரை, ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இது புதுப்பிக்கப்படும். 65 வயதுக்குப் பின்னர் புதுப்பிக்கத் தேவையில்லை.

இந்த அடையாள அட்டையில் ஏதேனும் மோசடிகள் செய்தால், அளிக்கப்படும் தண்டனையும் மூன்று மாதச் சிறைத் தண்டனையில் இருந்து ஒரு ஆண்டு சிறைத் தண்டனையாக அதிகரிக்கப்படும். அத்துடன் அபராதமும் 5 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

இந்த அடையாள அட்டையில் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விபரங்களும் பதிவு செய்யப்படும்.

எனினும் அது கட்டாயமானதல்ல.

இந்த தரவுகள், குடிவரவுத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம்ஆகியவற்றுடன் இணைக்கப்படும்.

இந்த அடையாள அட்டையில் உள்ள தரவுகள், அடையாள அட்டையின் உரிமையாளர் அல்லது நீதிமன்ற உத்தரவின் மூலம் கோரப்பட்டால் மட்டுமே வெளியிடப்படும்.

புதிய அடையாள அட்டைக்கு கிராம அதிகாரிகள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இதுதொடர்பாக பிரதேச செயலக அதிகாரிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## இராசி பலன்

20.06.2016

(ஆனி 06, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு

பூரணை பிற்பகல் 5.15 மணிக்கு

கேட்டை காலை 7.03 மணிவரை

சுபநேரம் 11.54-1.24மணிவரை

இராகுகாலம் 7.24-8.54 மணிவரை

பூரணை விரதம், உலக அகதிகள் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி சுக் புத |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி<br>காலை 7.14 இற்கு<br>தனு-சந் | | |
| | | | குரு ராகு |
| சந் | சனி | செவ் | |

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்களின் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மேடம்:** மனக்குறைகள் அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் அகலும், செய்தொழில் மேன்மையுண்டு, சேமிப்புக்களை ஈடுகட்டும் எண்ணம் உருவாகலாம்.

**இடபம்:** சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை, குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றினை வாங்கி மகிழ்வீர்கள், திருமண வாய்ப்புக்கள் தேடி வரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்:** சமயோசித புத்தியால் பலரையும் சமாளிப்பீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உடல் நலன் சீராகும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர் களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,சஞ்சலங்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்க நினைப்பீர்கள், திடீர் பயணம் தித்திக்க வைக்கும், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள்.

**கன்னி:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வாகன பழுது செலவுகள் குறையும்.

# சமூகத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் நிறுவனங்களாக பாடசாலைகள் விளங்குகின்றன



உலகின் எந்தவொரு உயிரினமும் தான் வாழும் சூழலுடன் இணைந்து வாழ்வதற்காகவே தொடர்ந்து முயன்று வருகின்றன. இது தான் மனித வாழ்க்கைத் தொழிற்பாடாகும். மனிதன் தான் வாழும் சூழலுக்கு இசைவாக வாழும் போது தான் சமூகங்களில் சமநிலையும் வளர்ச்சியும் பேணப்படுகிறது.

மக்கள் குழுவினர் பொதுவான கலாசாரத்துடனும் சமூக ஒழுங்கு முறையுடனும் வாழ்கின்றனர். இவர்களிடையே ஒற்றுமை உணர்வும், பொதுவான நடத்தைக் கோலங்களும் காணப்படும்.

சமூகங்களின் சமூகக் கட்டமைப்பிற்கு ஏற்பவே அங்குள்ள பாடசாலைகள் தொழிற்படும். பாடசாலைகளின் செயற்பாடுகள் , வினைத்திறன், விளைதிறன் என்பவையெல்லாம் சமூகக் கட்டமைப்பை பொறுத்தே அமையும்.

சமூகக் கட்டமைப்பு என்பது ஒரு சமுதாயத்தின் குடிசனவியல், சமூகவியல், பொருளாதாரம், அரசியல் நிலைமை, இலட்சியம், ஆன்மீகம் போன்ற பலவற்றினால் தீர்மானிக்கப்படுகின்றது.

சமூகம் என்பது தமது தேவைகளை நிறைவேற்றவும் தம்மைப் பாதுகாக்கவும் விரும்பிப் பல தனி நபர்களால் ஒழுங்கமைக்கப்பட்டது. இதனால் ஒவ்வொரு தனி நபரிடத்தும் தேவைகள் பற்றிய விழிப்புணர்வும் எண்ணங்களினையும் ஒழுங்கமைக்கும் ஆற்றல்களையும் வளர்ப்பது அவசியமாகின்றது. அதனை வளர்த்தெடுப்பதில் பாடசாலைகளின் பங்கு சிறப்பானதாகும்.

சமூகங்களின் ஒழுங்கிணைப்பு, ஒற்றுமை பலம் என்பவற்றை வளர்ப்பதிலும் அவைபற்றிய் நம்பிக்கை விழுமியங்களைக் கைமாற்றுவதிலும் பாடசாலைக் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றன.

வெவ்வேறு பிரிவு மக்கள் இணைந்து பல்வேறு பணிகளை ஆற்றிக்கொண்டு இணக்கமாக வாழும் குழு சமுதாயம் எனப்படும். சமுதாயம் தனக்கென பண்பாட்டினையும் பிற தன்மைகளையும் கொண்டுள்ளது. அது பல்வகைப்பட்ட விழுமியங்களையும் மரபுகளையும் கொண்டிருக்கும். அவற்றை அதன் உறுப்பினர்கள்மனத்தினுள் ஏற்கும்பொறுப்பினைக் கொண்டுள்ளன. ஒவ்வொருவரும் தம் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை இயல்புகளை தாம் வாழும் சமுதாயத்திலிருந்து பெறுகிறார்கள். சமுதாயத்திலுள்ள பல பொதுப்பயன் அமைப்புக்கள் தங்களுக்கான விழுமியங்களைக் கொண்டுள்ளன. எனவே சமுதாயம் அதன் உறுப்பினர்களிற்கு விழுமியங்களைப் பதிக் கின்றது.

இதற்கமைய பாடசாலைகள் சமுதாயப் பண்பாட்டை மாணவர்களிடத்தே நேரடியாகப் பதிக்கின்றன.

சமுதாயமும் அது கொண்டுள்ள பண்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை இரண்டுமே சமுதாயத் தேவையினை முதன்மையாகக் கருதுகின்றன. இவ்விரண்டின் வளர்ச்சியும் மேம்பாடும் கல்வியினாலும் ஏற்படக் கூடியன. ஆதலால் சமுதாயப் பண்பாட்டை மாணவர்களிடத்தே விளைவிக்கும் இடமாகப் பாடசாலை திகழ்கின்றது.

“ஒழுக்கத்துடன் இசைந்து வாழ்தலே பண்பாடு எனப்படும்” இத்தகைய பண்பாட்டை வளர்த்தலிலும் செம்மையாக்குதலிலும் கல்வி பெரும் பங்காற்றி வருகிறது. “செம்மையின் பால் சிந்தனையைச் செலுத்துவது பண்பாடு என்றால் அப்பண்பாட்டினை மேலும் வளர்த்தலில் கல்வியும், கல்வியினை வளர்த்தலில் பண்பாடும் உதவுகின்றது.” எனவே சமூகத்தின் பண்பாட்டை பிரதிபலிக்கும் இடங்கள் பாடசாலைகள் என்பது இதனூடு நிச்சயப்படுத்தப்படுகிறது.

பண்பாட்டு விழுமியங்களை பதிப்பதில் கல்வி முறைகளை கல்வித்திட்டத்தினூடாக அரசு நிலைநாட்ட முனைகின்றது. இவை பாடத்திட்டங்களினூடாக பாடசாலைகளில் போதிக்கப்பட வேண்டிய கடப்பாடு பாடசாலைகளிற்கு உண்டு.

சமூகத்திலிருந்தும் சமுதாய அமைப்புப்புகளிடத்திலிருந்தும் பதிக்கப்படுகின்ற எதிர்மறையான பண்பாட்டம்சங்களதும் உள்ளன. இவை எதிர் விளைவுகள்ளை ஏற்படுத்தும் சமுதாயத்திலும் இந்நிலை காணப்படுவதனால் சமுதாய உறுப்பினர்களிடமும் இந்நிலை காணப்படலாம். இவ் எதிர்மறை பண்பாட்டு அணுகுமுறைகளை ஆக்கத்தன்மையாக்க கல்வியினூடு மாணவர்களிடத்தே சில வழிமுறைகளை பின்பற்றலாம்.

- ♦ நடைமுறைப் பயன்பாட்டை எடுத்துக்காட்டல்
- ♦ பாடத்திலுள்ள பண்பாட்டு விழுமியங்களுக்குரிய பட்டறிவை வழுங்குதல்.
- ♦ மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கல்வித்திட்டச்செயல்களை மேற்கொள்ளல்.
- ♦ பண்பாட்டு விழுமியங்களைப்புரிந்து கொண்டு செயற்படத் தக்கவாறு அவர்களோடு இணைந்து கருத்தாடல்.
- ♦ வன்முறை தவிர்த்து மென் முறையை நாடுதல்.
- ♦ பண்பாட்டு விழுமியங்கள் சமுதாய முன்னேற்றம் நோக்கியதேஎனவலியுறுத்தல்.
- ♦ நடைமுறைப்படுத்தி உணரச் செய்தல்

சிறந்த கல்வியானது சிறந்த பண்பாட்டை வளர்க்கும் என்பதற்கமைய கல்வியும் பண்பாடும் பின்னிப்பிணைந்தவை. கல்வியானது பண்பாட்டின் விரும்பத்தகு கூறுகளைப் பாதுகாத்து, காப்பாற்றி, செம்மையுறச் செய்து வருகின்றது. அவ்வாறே சமூகத்தின் தேவைகள், அவாக்கள், மதிப்புக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கல்வி முறை உருவாக்கம் பெறுவதில் பண்பாட்டிற்கும் பங்குண்டு. எனவே கல்வி என்பது பண்பாட்டை உருவாக்குவதற்காகவும், இப் பண்பாட்டை கையளிப்பதனூடு சமூகத்தை வளப்படுத்துவதற்கான வழியாகவே பாடசாலைக் கல்வி திகழ்கின்றது.

இதனை உறுதி செய்வதாக “கல்வி என்பது சமூகத்தின் தொடர்பாடலை இலகுபடுத்தும் முகமாக அச் சமூகத்தின் விழுமியங்கள், நம்பிக்கைகள், அறிவு, திறன், குறிக்கோளுடனான கருத்துக்கள் ஆகியவற்றை சமுதாய அங்கத்தவர்களிற்கு கடத்துகின்ற செயன்முறை ஆகும்” என Romer குறிப்பிடுகின்றார்.

எனவே ஒரு சமூகத்தின் பண்பாட்டுப் பரவலுக்கு ஆசிரியரின் பங்களிப்பு மிகமிக அவசியமானதாகும். எனவே பண்பாட்டின் சிறப்பினை ஆசிரியர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். பாடசாலைகள் பண்பாட்டின் பரவலுக்கு ஆதாரமாக இருப்பதோடு அது தொடர்ந்து நிலை பெறுவதற்கும் உரிய இடமாக விளங்குவதனால் ஆசிரியர்கள் பண்பாட்டின் பிரதிபலிப்பாளர்களாக செயற்படுவது அவசியமாகும்.

ஒரு பண்பாட்டின் முழுமைக்கு மாணவர்களை வழிநடத்துவது ஆசிரியரின் பாரிய பணியாகும். ஒவ்வாரு மாணவரதும் செயற்பாடும் ஆசிரியர்களால் நன்கு அவதானிக்கப்படல் வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு மாணவரினதும் சமூக நடத்தைகளைப் பண்பாடுகளே தீர்மானிக்கின்றன. ஒரு குழு மாணவர்களிற்கு சரியாகப்படுகின்ற நடத்தை மற்றொரு குழுவிற்கு பிழையாகத் தோன்றக் கூடும். ஏனெனில் மாணவர்கள் வெவ்வேறு சமூகங்களில் இருந்து வருகின்றவர்களாவர். எனவே எதிர்மாறான பண்பாடுகளை எல்லாம் ஒன்று சேர்த்து நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டியது பாடசாலைச் சமூகத்தின் கடமையாகும். பாடசாலைகளில் ஒழுங்கமைக்கப்படும் நிகழ்வுகள், மன்றச் செயற்பாடுகள், நினைவு தினங்கள் என்பவற்றில் சமுதாயத்தினுடைய கலை, கலாசாரம், பண்பாட்டு அம்சங்களை, சமூகப் பெரியாரை முன்னிறுத்தி அவற்றைப் பகிர்ந்தளிக்கும் போது பாடசாலைச் சூழலில் சமூகத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

சமுதாயப் பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையினதான ஆசிரியர்களின் முன்மாதிரிச் செயற்பாடுகள் எப்போதும் முக்கியமானது. இதனூடு சமுதாயத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் முக்கிய ஊடகமாக ஆசிரியர்கள் திகழ்கின்றனர்.

இதற்கேற்ப ஒருவரிடம் சமூகம் எதிர்பார்க்கின்ற நல்ல பண்பாடுகளாக,

1.உடலியல் ரீதியான முன்னேற்றம். (சுத்தம், சுகாதாரம், சத்துணவு, நல்ல பழக்கங்கள், உடல்பராமரிப்பு, ஒழுங்குடன் வாழ்தல் முதலியன)

2.அறிவாற்றல் ரீதியான முன்னேற்றம். (நன்கு பேசுதல், அடிப்படைத் திறன்கள் செயல்கள் சூழலைப் புரிந்து கொள்ளுதல் , காரண காரிய மறிதல், செயல் திறன் முதலியன)

3.நீதி நெறி முன்னேற்றம் (பணிவுநேர்மைஉண்மை, உழைப்பின் மேன்மை போன்ற பண்புகளை உருவாக்குதல் வழக்கம், மரபு , சடங்குகளில் பயிற்சி , கடமை உணர்வு முதலியன)

4.சமூகப் பண்பு வளர்ச்சி. (சமூகத்தில் ஈடுபடுதல் , ஏற்கத்தக்க உழைப்பு, கூட்டுறவு , ஒருவருக்கொருவர் மதித்தல்போன்ற பண்புகளை உருவாககுதல் முதலியன).

5.பண்பாட்டுப் பரிமாற்றம் (நம் விலை மதிப்பற்ற பண்பாட்டுப் பரிமாற்றத்தைப் பாதுகாத்தல் , வளர்த்தல் பயிற்சியளித்தல் முதலியன)

6.தனியாள் ஆளுமை வளர்ச்சி (ஒரு பயனுள்ள, பொறுப்புள்ள, சமூக உறுப்பினராக உருவாக்க ஆற்றலை வளர்த்தல்)

இவ்வாறான சகல பண்பாட்டு அம்சங்களையும் வழங்கக் கூடிய ஒரே நிறுவனம் பாடசாலை ஆகும். பாடசாலை என்ற நிறுவனம் சமூகம் என்ற சூழலிலே தொழிற்படுகின்றது. சமூக நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே பாடசாலைகளை சமூகங்கள் அனுமதிக்கின்றன, குடும்பங்களால் நிறைவேற்ற முடியாத சில இலக்குகளை பிள்ளைகள் தொடர்பாக நிறைவேற்றுவதற்கு பாடசாலை அவசியமாக இருப்பதால் சமூகம் பாடசாலைகளை ஆதரிக்கின்றன. இதன் காரணமாக சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கும் ஒரு அங்கமாகப் பாடசாலைகள் விளங்குகின்றன.

சமூகத்திலே தன்னியல்புடன் இயங்கும் நிறுவனமாக பாடசாலைகள் தொழிற்படுவதில்லை. அவை சுயாதீனமாக இயங்க முடியாது சமூகத்தின் இயல்பை மீள மீள உருவாக்கிக் கொண்டிருக்கும்தொழிற்பாடுகளையே நடைமுறையில் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

“சமூகம் எவ்வழி கல்வியும் கல்வி நிலையங்களும் அவ்வழி” என்பதே நடப்பியல். சமூகத்தின் பண்பாட்டு இயல்புகளிற்கு ஏற்றவாறு மாணவர்களைத் தயார்ப்படுத்தலும், இசைவுள்ளவர்களாக உருவாக்கித் தருதலும் பாடசாலைகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக பாட சாலைகள் மாண வரிடத்தே

- ❖ சமூக உண ர்வை அல்லது பரிக்ஞையை வளர் த்தல்.
- ❖ சமூகப் புலக்காட்சியை உருவாக்குதல்.
- ❖ சமூக நடத்தைகளுடன் இசைவுபடுத்தல்.
- ❖ சமூகக் கட்டுப்பாடுகளுக்குக்கீழ்படிய வைத்தல்.
- ❖ சமூக விழுமியங்களைப் புகட்டுதல்.
- ❖ பண்பாட்டுக் கோலங்களை அறிவுறுத்தி மீள வலியுறுத்தல்.
- ❖ சமூகம் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள அறிவையும் அனுபவங்களையும் கையளித்தல்.
- ❖ சமூகம் உருவாக்கிக் கொள்ளும் புதிய தொழில்நுட்ப விசைகளுக்கு இசைவுபட வைத்தல்.
- ❖ சமூகப் பாத்திரங்களை ஏற்பதற்குரிய ஆற்றலை வழுங்குதல்.
- ❖ சமூக ஊடாட்டங்களையும் தொடர் பாடலையும் வளமாக்கிக் கொள்ள உதவும்.
- ❖ சமூகத்துக்குரிய அரசியல் மற்றும் பொருண்மிய இயல்புகளைப் புரிய வைத்தல்.
- ❖ சமூகக் கட்டமைப்பைப் பராமரிப்பதற்கு அறிகை நிலையிலும், நடத்தை நிலையிலும் உதவுதல்.

மாணவர்கள் சமூகத்துடன் இசைந்து வாழத்தக்க அறிவையும், அனுபவங்களையும், வரன் முறையான கல்விச் செயற்பாடுகள் வாயிலாகவும், வரன் முறை சாரா செயற்பாடுகள் வாயிலாகவும், கையளித்தல் பாடசாலைகளினால் வழங்கப்படுவதனால், ஒரு சமுதாயத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இடங்கள்ாக பாடசாலைகள் திகழ்கின்றன என்பது நிச்சயப்படுத்தப்படுகின்றது. பாடசாலைகள் வலிமையுடன் வளர்த்து சமுதாயத்தின் பண்பாடுகளுடன் ஒன்றிணைந்து பல்துறைகளிலும் சமூகங்களை மேம்படுத்த வேண்டும். சமூகங்களுக்கான முன்னேற்றம் முழுவதும் வெளியிலிருந்து நகர்த்தக் கூடியதல்ல. சமூகங்களுக்கிருந்தே பாடசாலைகளுடன் சேர்ந்து முனைப்புடன் வெடித்துப் பரவ வேண்டியதாகும்.

ந.ரமணன்-ஆசிரியர்
யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி

# சேவைநலன் பாராட்டும் மணிவிழாவும்



### அதிபரின் வாழ்த்து

புகழ்பூத்த இணுவில் இந்துக் கல்லூரி அன்னையின் ஓர் மூத்த புதல்வி திருமதி சகலகலாவாணி தேவகரன் அவர்கள் 20.06.2016 இன்று ஓய்வு பெறவுள்ளார். இவரின் ஓய்வு கல்லூரிக்கு பேரிழப்பாகும். இக்கல்லூரியில் பத்தொன்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவையாற்றி பல மாணவர்களை பல்கலைக்கழகம் செல்வதற்கும் தேசிய கல்வியியற் கல்லூரியில் அனுமதி பெறவும் வழிவகுத்த உயரிய ஆசான். உயர்தர மாணவர்கள் மற்றும் சாதாரண தர மாணவர்களுக்கு தமிழ்மொழியைக் கற்பித்து உயர் சித்திகளைப் பெற வழிகாட்டிய ஓர் திறன்மிக்க ஆசிரியர். இவர் கல்லூரியின் பல நெருக்கடியான காலகட்டங்களில் கல்லூரியை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றிய செயல் வீரராவார். பல அதிபர்கள் மாற்றலாகிச் செல்லும் போது புதிய அதிபர் நியமிக்கப்படும்வரை பல மாதங்கள் கல்லூரியைத் தாங்கி வழிநடத்தியவர். ஆசிரியராக, பிரதி அதிபராக, பொறுப்பாசிரியராக பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு கல்லூரியில் சிறப்பான சேவையாற்றிய ஓர் உத்தமஜீவன். ஆசிரியர்களுடன் பிரச்சினைகள், பிணக்குகள் ஏற்பட்டாலும் சிறிது நேரத்தில் மீண்டும் அவர்களுடன் கலகலப்பாக பழகும் சிறந்த பண்பாளர். அதிபரான என்னுடன் பிரதி அதிபராக தோள் கொடுத்து பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவு வழங்கல், பௌதீக வளத்தேவைகள், கல்வி முன்னேற்றம் என பல்வேறு செயற்பாடுகளில் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள், அதிகாரிகள் என்போரை. தொடர்ந்து களைப்பின்றிச் சந்தித்து அவர்களின் உதவி பெற்று பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக இப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் ஓர் அன்னைபோல் செயற்பட்டவர். இவரின் ஓய்வு பாடசாலைக்கு பெரிய இழப்பாகும்.

இவரின் ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்தி நிற்கின்றேன்.

தி.தேவதயாளன், அதிபர்



### வாழ்த்துமடல்

திருமதி சகலகலாவாணி தேவகரன் அவர்கள் தமது ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். மிகப்புனிதமான இந்த ஆசிரியப் பணியில் ஒழுங்காகவும் சிறப்பாகவும் பணியாற்றி இருக்கின்றார். தமது ஆசிரியப் பணியில் எங்கள் இணுவில் இந்துக் கல்லூரியிலேயே பத்தொன்பது வருடம் பணியாற்றி இருக்கின்றார். எனவே அவரது சேவைக் காலத்தின் பெரும்பகுதியை எங்கள் கல்லூரியிலேயே கழித்து ஓய்வு பெறுவதென்பது எங்கள் கல்லூரி செய்த பாக்கியம் என்றே கூறவேண்டும். மேலும் கண்டிப்பான சுபாவம் கொண்டவர். ஒருவரிடம் கோபித்துக்கொண்டால் மறுகணமே அதனை மறந்து அமைதியாகி விடுவார். மிகுந்த கடவுள் பக்தி கொண்டவர். பல கோயில்களிலும் அபிஷேக ஆராதனைகளையும் செய்து மனம் மகிழ்வார். அவர் நீண்ட காலம் வாழ்ந்து இன்புற்றிருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.


சிவஶ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
இணுவில் ஶ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில்



யா/இணுவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் நலன்புரிக் கழகத்தின் வாழ்த்துச் செய்தி

கல்விக்கு கலங்கரை விளக்காக விளங்கிய கலாவாணியே... ஆசிரியராய், பகுதித் தலைவராய், பிரதி அதிபராய், பதில் அதிபராய், எமது கல்லூரியின் பல்வேறு தடங்களில் கால்பதித்து இன்று ஓய்வுபெறுகின்ற திருமதி சகலகலாவாணி தேவகரன் (பிரதி அதிபர்) எமது கல்லூரியில் கல்வி கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகி 15.02.1982 முதல் நியமனம் பெற்று ஆசிரியராகி தொடர்ந்து 19 வருடங்களாக எமது பாடசாலையில் பல்வேறு பதவிகளில் பணியாற்றி பாடசாலை பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தபோது அதிபராகவும் (பதில்) பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையில் பல்வேறு செயற்பாடுகளிலும் ஆசிரியர் குழாம், பாடசாலைச்சமூகம் என்பவற்றோடு இணைந்து கல்லூரித்தாயின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட பிரதி அதிபரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல பரராஜசேகரப்பெருமான், முருகன் அருளை வேண்டி நிற்கின்றோம்.

தி.சசீதரன், தலைவர், ஆசிரியர்
நலன்புரிக்கழகம், யா/ இணுவில் இந்துக் கல்லூரி




முழுப்பெயர்: திருமதி சகலகலாவாணி தேவகரன்
பிறந்ததிகதி: 21.06.1956
பிறந்த இடம்:இணுவில்
கல்வி கற்ற பாடசாலை: யா/ இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம்
யா/இணுவில் சைவமகாஜன மகா வித்தியாலயம்
யா/இராமநாதன் கல்லூரி

கல்வித்தகைமை:BA 2nd Class பொதுக்கலைப்பட்ட தாரி (1977-1980)
தொழிற்றகைமை: பட்டப்பின் கல்வி டிப்ளோமா (1990-1991)
முதல் நியமனத் திகதி: 15.02.1982
முதல் நியமனப் பாடசாலை: க/புசல்லாவ சரஸ்வதி மகா வித்தியாலயம்
தற்போதைய ஆசிரியர் தரம்- தரம் I

### ஆசிரியர் சேவை விபரம்

| பாடசாலை | தொடக்கம் | வரை |
|---|---|---|
| க/புசல்லாவ சரஸ்வதி மகா வித்தியாலயம் | 15.02.1982 | 13.01.1983 |
| க/பெண்கள் உயர்தரப் பாடசாலை | 14.01.1983 | 23.03.1988 |
| யா/இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம் | 24.03.1988 | 12.01.1989 |
| யா/இராமநாதன் கல்லூரி | 13.01.1989 | 16.05.1992 |
| யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை | 17.05.1992 | 01.01.1995 |
| யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை | 02.01.1995 | 30.09.1998 |
| யா/இணுவில் இந்துக் கல்லூரி | 06.10.1998 | 01.01.2010 |
| பிரதி அதிபர், கடமை நிறைவேற்று அதிபர் | 01.01.2010 | 21.06.2016 |



### எனது இதயத் துடிப்பில் இருந்து...

கல்விக்கே இலக்கணமாக திகழ்ந்தவர் சகலகலாவாணி

எமது கல்லூரியில் 18 வருடங்களுக்கு மேலாக மாணவர்களுக்கு கல்வியுடன் ஒழுக்கத்தையும் பாசத்தையும் ஊட்டியவர். அத்துடன் 3 தடவைகள் கடமை நிறைவேற்று அதிபராக பாடசாலையை பேணிப்பாதுகாத்தவர். தமிழையும் சைவத்தையும் மாணவர்களுக்கு ஊட்டியவர். இன்று பிரதி அதிபராக இளைப்பாறுகின்றார். அவரையும் அவரது குடும்பத்தவரையும் சீரும் சிறப்புமாக கல்விச் செல்வங்களோடு வாழவேண்டும் என்று வாழ்த்துவதோடு இறைவனையும் பிரார்த்தித்து அமைகின்றேன்.

வாழி நலம் சூழ
ஆசிரியர் திருமதி நகுலேஸ்வரி சண்முகநாதன்



### சேவை மிக்க ஆசிரியர்

யா/ இணுவில் இந்துக் கல்லூரியின் மிகவும் புகழ்பெற்ற ஆசிரியை திருமதி ச.தேவகரன் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த பெருந்தகை. இவரது சேவைக்காலத்தில் பல்வேறு அதிபர்களின் கீழ் சேவையாற்றியவர்.

ஒவ்வொரு அதிபருக்கு ஏற்ப தன்னை மாற்றி சிறந்த உப அதிபராகக் கடமையாற்றியவர். அது தவிர கல்லூரியின் பல்வேறு வழிவகையிலும் தனது சேவையை வழங்கியிருந்தார். மாணவர்களின் நலன்களில் மிகுந்த அக்கறை கொண்டவர். பதில் அதிபராகவும் பலமுறை கடமையாற்றியவர். இவரின் சேவையை மிகவும் பாராட்டுகின்றேன். சிறப்பாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு.சண்முககுலகுமாரன் (M.Ed,BA,Dip. In. Edu.Sc.Trd S.L.P.S)
கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில்



### அன்பால் அரவணைக்கும் ஆசிரியர்

யா/இணுவில் இந்துக் கல்லூரி உப அதிபர் திருமதி சகலகலாவாணி தேவகரன் அவர்கள் அகவை அறுபது நிறைவையொட்டி எனது எல்லையில்லா மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் உப அதிபராகவும் பணியாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய திருமதி தேவகரன் அவர்கள் பாடசாலைச் சமூகத்தால் நன்கு மதிக்கப்பட்டவர் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அவரின் அர்ப்பணிப்பான சேவையால் மாணவர்களின் கல்வியும் ஒழுக்கமும் மேம்பட்டமையை யாவரும் அறிவர். இணுவில் இந்துக் கல்லூரி 150 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடிய வேளையில் திருமதி தேவகரன் அவர்களின் ஒத்துழைப்பை எல்லோருமே பாராட்டியமையை நானறிவேன். அவரின் அயராத உழைப்பால் வளர்ச்சி பெற்ற யாழ். இணுவில் இந்துக் கல்லூரி திருமதி தேவகரன் அவர்களின் சேவைநலனை என்றுமே மறக்கமாட்டாது என்பதனைக் கூறுவதுடன் அவர் வாழ்வில் உடலாரோக்கியத்துடனும் மகிழ்வுடனும் வாழ எல்லாம் வல்ல பரராஜசேகர விநாயகனை இறைஞ்சுகின்றோம்.

பேராசிரியர் க.தேவராசா
தலைவர்/வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்



சைவப் பண்பாட்டையும் தமிழையும் பேணி வளர்க்கும் இணுவையம்பதியிலே விளங்கும் இந்துக் கல்லூரி 150 ஆவது நிறைவு செய்து மகிழும் இக்காலத்தில் திருமதி சகலகலாவாணி தேவகரன் ஆசிரியர் அவர்கள் இக்கல்லூரியின் மாணவர்களுக்கு கல்வியெனும் அறிவை வளர்ப்பதிலும் மாணவர் ஒழுக்க விழுமியங்களை சிறப்பாகப் போதிப்பதிலும் 19 அண்டுகள் பெரும்பணியாற்றிஇன்றுஓய்வுபெறுகின்றார்அவர்நீண்டஆயுளும் சீரும் சிறப்பும் பெற்று வாழ இணுவை கந்தப்பெருமானைப் பிரார்த்தித்து எனது நல் ஆசிகளை வழங்குகின்றேன்.

சிவஶ்ரீ. உ.அபராஜிதக்குருக்கள், பிரதம குரு
இணுவில் கந்தசுவாமி கோயில்

# சமவுரிமைக்காக போராட தலைப்பட்ட சமூகம் இன்று மூன்றாம் தரப் பிரஜைகளாகத் தள்ளப்பட்டுள்ளது

## வடக்கு மாகாண முதலமைச்சர் ஆதங்கம்







சம உரிமைக்காகப் போராடத் தலைப்பட்ட சமூகம் இன்று மூன்றாம் தரப் பிரஜைகளாக வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீந்திக் கடந்த நெருப்பாறு எனும் நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்ற விருந்த உரையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவரதுஉரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

காலத்தின் தேவை அறிந்து உருவாக்கப்படும்இவ்வாறான படைப்புக்கள் எமது இளைஞர் யுவதிகளின் உணர்வலைகளையும் மக்கள் பால் அவர்கள் கொண்டிருந்தஅதீதபாசம், பற்றுக்களையும்,சுதந்திரகாற்றை சுவாசிப்பதற்காக மேற்கொண்ட உச்ச முயற்சிகளையும்எமது எதிர்கால சந்ததிக்கு எடுத்துச் செல்லக் கூடிய பெறுமதி வாய்ந்த ஆவணங்களாக அமைவன.

இன்றைய சமூகமானது எந்தவொரு விடயத்தையும் உற்றுநோக்கி ஆழ்ந்து ஆராயாது அதுபற்றிய ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறது. அல்லது அவைபற்றிஅறியாமலே இருந்துவிடுகின்ற ஒருதன்மை பலராலும் உணரப்பட்டுள்ளது.

நாம் எவ்வளவுதான் கல்வி அறிவல் வளர்ச்சியடைந்தாலும் இந்தப் பின்னடைவான நிலையில் மாற்றம் பெற முடியாமல் சிக்கித் தவிக்கின்றோம்.

தமிழர் என்றஒரு இனம் உண்டு தனியே அவருக்கொரு குணம் உண்டு என்று முன்பு கூறி வைத்தார்கள். தமிழ் இனம் தனக்கே உரிய ஒருதனித்துவத்துடன் சட்டத்தை மதிப்பவர்களாக, நாட்டின் நற்பிரஜைகளாக ஏனையோருக்கு முன் மாதிரியானதாகவுமுள்ள ஒரு சமூகமாக வாழ்ந்த காலம் மாறி இன்று மிகப் பின்தங்கிய ஒரு சமூகமாக மாற்றப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது.

அன்று கல்வியால் உயர்ந்த சமூகம் இன்றுகாடைத் தனத்தில் உயர்ந்திருக்கின்றது. பண்பாட்டு ஒழுக்கநெறியுடன் வாழ்ந்தபலரின் பிள்ளைகளும்குடும்பங்களும்இன்று ஒழுக்கநெறி தவறி போதைப் பழக்கங்களுடன் தமதுபோக்கில் வாழத் தலைப்பட்டதன் விளைவே எமது சமூகம் இவ்வளவு பின்னடைவுகளை சந்திக்க வழி வகுத்துள்ளது.

எமது மக்கள் எவ்வாறு வாழ வேண்டும், விடுதலை பெற வேண்டும்என்றநோக்கங்களுக்காக போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதோ அவை அனைத்தும் மழுங்கடிக்கப்பட்டு சம உரிமைக்காக போராடத் தலைப் பட்ட சமூகம் இன்று மூன்றாம் தரப் பிரஜைகளாக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந் நிலை மாற்றப்படவேண்டியது மிகவும் அவசியமானதும் அவசரமானதொன்றுமாகும். இம் மாற்றம் தனியொருவராலோ அல்லது அரசியல் மட்டத்திலோ சட்டத்தின் இறுக்கத்தினாலோ முழுமையாக களைந்து விடமுடியாது. மாறாகநாம் ஒவ்வொருவரும் எம்முடையஉயர் நிலைபற்றி எமக்கிருக்கக் கூடிய கௌரவம் பற்றி வாழ்வில் சாதனையாளர்கள் படைத்த சாதனைகளும் அவற்றிற்காக அவர்களின் கடின உழைப்புக்கள் பற்றியும் அறிந்து கொள்வது மூலமும் சிந்திப்பதன் மூலமும் அவ்வழியில் ஒழுகத் தலைபடுவது மூலமுமே இம் மாற்றத்திற்கான வழிமுறையை ஏற்படுத்தலாம்.

எப்படியும் வாழலாம் என்ற நிலை மாற்றப்பட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்றவரையறைக்குள் மனக்கட்டுப்பாடுகளையும் தூய சிந்தனைகளையும் நிலைநிறுத்தி வாழ முற்படுகின்ற போது எமது வாழ்வு சிறக்கும். தூயசிந்தனைகள் உதயமாவன. அவற்றின் வழியில் பல சிறப்புக்களும் எம்மை வந்தடையும் எனத் தெரிவித்து சுபீட்சமானதும் நிம்மதியானதும் பயமற்றதுமானஒரு இயல்புவாழ்க்கை எமக்கு விரைந்து கிட்டவேண்டும் என அவர் உரையில் தெரிவித்துள்ளார்.

(2-9-271-307-15-309)




## மக்கள் வாழ்ந்த காணிகள்; அவர்களை வெளியேற்றாதீர்கள் பற்றைகள் வளர்ந்தமையால் சொந்தம் எனக் கூறாதீர்கள்

### வன இலாகா அதிகாரிக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் விபரிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் மக்கள் நீண்டகாலமாக வாழும் பிரதேசங்களையும் வன இலாகாவினர் தமது எல்லைக்குட்பட்டதாக தெரிவித்து எல்லைக்கற்களை போட்டு அடையாளமிடுவதாக அபிவிருத்திகுழு கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது, கருத்து தெரிவித்த வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி லிங்கநாதன், மக்கள் நீண்டகாலம் வாழும் பிரதேசங்களில் எல்லை போடுவதாக மக்களுடன் முரண்படுகின்றனர்.

குறிப்பாக தமிழ்மொழி தெரியாத அதிகாரிகள் செல்வதால் மக்களுடனான முரண்பாடுகள் வலுவடைவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வவுனியா வடக்கில் மேய்ச்சல் தரைக்கு, காணி பிரதேச செயலாளர் அடையாளப்படுத்திய போதிலும் அதனை வன இலாகா பிரிவினர் தமக்கு உரியது என வழங்க மறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த வன இலாகா அதிகாரி, காடுகளை பாதுகாப்பதே எமது கடமை எனவும் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய அடையாளப்படுத்திய இடங்களில் தாம் கற்களை போடுவதாக தெரிவித்துள்ளார்.

மேலும், மக்களுடன் முரண்பாடுகள் நடந்த வேலங்குளம் பகுதிக்கு நேரடியாக தாம் சென்றிருந்ததாகவும் இனிவரும் காலங்களில் அவ்வாறான நிலை ஏற்படாது எனவும் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் குறித்த பகுதிகளில் சிலரது காணிகளுக்கு ஆவணங்கள் இல்லை எனவும் வன இலாகா அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்தவடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் காணிக்கச்சேரி நடைபெறவில்லை.

இவ்வாறான நிலையில் அவர்கள் ஆவணங்களை எவ்வாறு பெறுவது. எனினும் அவர்கள் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடியேறியவர்களாக உள்ளனர். இவை அவர்கள் வாழ்ந்த காணிகள்.

எனவே அவர்களை வெளியேற்றாதீர்கள். அன்று காணிகளாக காணப்பட்ட இடங்களில் இன்று பற்றை வளர்ந்ததற்காக அவை வன இலாகாவுக்கு சொந்தமான காடுகள் என கூறமுடியாது என தெரிவித்தார்.

அதேவேளை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறினார். "வேலங்குளம் பகுதியல் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான காடுகளை வான்படை தமக்காக துப்புரவு செய்கின்றது. அதனை தடுத்து நிறுத்துங்கள். அதனை தடுக்க பாருங்கள். அங்கு கொண்டு சென்று எல்லைக்கல்லை போடுங்கள் என வலியுறுத்தினார்.

(2-250)

## 361 கி.மீற்றர் நீளமான வீதிகளில் 76 கி.மீற்றர் வீதிகள் புனரமைப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான 361 கிலோமீற்றர் நீளமான வீதிகளில் 76 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளன என வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான வீதிகளாக சுமார் 361 கிலோ மீற்றர் வீதிகள் காணப்படுகின்றன.

இதில் நடந்த மீள்குடியமர்வின் பின்னர் 76 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர இவ்வாண்டு 30 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளன என வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த வீதிகள் புனரமைக்கப்படாமையினால் இந்த வீதியை அன்றாடம் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதுடன் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான கூடுதலான பாலங்கள் சேதமடைந்து போக்குவரத்து செய்ய முடியாது மிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(2-15)

## தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு ஆய்வு வேலைத்திட்டம்



( பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்திய தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு ஆய்வு வேலைத்திட்டம் கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சி சோலைவனம் விடுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள் பங்குபற்றிருந்தனர்.

(2-281)

## பிரதிநிதிகள், பணியாளர்கள் பங்கேற்ற பயிற்சிப்பட்டறை

கரித்தாஸ் நிறுவனத்தின் தேசிய மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் வட கிழக்கு மறை மாவட்டங்களை சேர்ந்த கிராமிய சமாதான நல்லிணக்க குழுக்களின் பிரதிகளுக்கும் சமாதான நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு பணியாளர்களுக்கு மான ஒருநாள் பயிற்சிப் பட்டறை ஒன்று கடந்த 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு தொடக்கம் மாலை 5 மணி வரையும் வவுனியா தவசிக்குளத்தில் உள்ள சேவா லங்கா கருத்தரங்கு வளாகத்தில் இடம் பெற்றது.

இக் கருத்தரங்கில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான விசாரணை ஆணைக்குழு LLRC தொடர்பாகவும் அதன் உள்ளடக்கங்கள், அதன் சிபார்சுகள் மற்றும் அவ் ஆணைக்குழுவின் முடிவுகள் தொடர்பிலும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இதில் வளவாளராக தேசிய சமாதான மத்திய நிலையத்தில் பணியாற்றும் எம்.எம். பாசால் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(2-310)

# கிளிநொச்சி பொதுச்சந்தை மீன் விற்பனையில் பொருத்தமான நிறுவைத் தராசுகள் மாற்றம்

## கரைச்சி பிரதேச சபையினரின் நடவடிக்கையை அடுத்து

(மல்லாவி)



கிளிநொச்சி பொது சந்தையில் மீன் விற்பனையில் ஈடுபடும் பகுதியில் முறையற்ற தராசுகள் பயன்படுத்துவது தொடர்பில் வலம்புரி பத்திரிகையில் செய்தி பிரசுரித்திருந்தது.

குறித்த செய்தியை பார்வையிட்டதன் பின்னர் கரைச்சி பிரதேச சபையினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

குறித்த சந்தையில் மீன் விற்பனைசெய்யம் இடத்தில் பொருத்தமற்ற தராசுகள் பயன்படுத்துவது தொடர்பில் வலம்புரி செய்தியொன்றை அண்மையில் வெளியிட்டிருந்தது. குறித்த பகுதியில் நுகர்வில் ஈடுபட்டுள்ள மக்கள் தம்மால் வழங்கப்படும் பணத்திற்கு சரியான எடையில் மீன்கள் வழங்கப்படுகிறதா என சந்தேகம் வெளியிட்டிருந்தனர். படி கற்களிற்கு பதிலாக வேறு பொருட்கள் எடைக்கு பயன்படுத்துவதாக தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் செய்தி வெளியிடப்பட்டதை அடுத்து, உடனடி நடவடிக்கை மேற்கொண்ட கரைச்சி பிரதேச சபையினர் தராசுகளை சரி செய்வதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர். தற்போது குறித்த பகுதியில் நுகர்வோர் தமது பணத்திற்கு பெறுமதியான மீன்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பில் சந்தேகம் நிலவாதவாறு எடைகள் அளக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த செய்திக்கு உடனடி நடவடிக்கை மேற்கொண்ட கரைச்சி பிரதேச சபையினர், மக்களின் எதிர்பார்ப்புக்கள் கேள்விகளாகுமுன்னர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பிரதேச மக்கள் பிரதேச சபை செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)




### பற்றை மறைவுகளின் மத்தியில்

# மதுப்பிரியர்களின் நடமாட்டம்;கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரிப்பு

கிளிநொச்சி ஜெயந்தி நகர் இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் அருகிலும் மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு பின்புறமாகவும் உள்ள பெரியளவிலானபரப்பளவைக்கொண்ட பராமரிப்பற்ற காணி ஒன்று நீண்ட நாட்களாக துப்புரவு ஏதும் செய்யப்படாது காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இக் காணியின் பற்றை மறைவுகளின் மத்தியில் மதுபிரியர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் நடைபெறுவதுடன் பகல், இரவு வேளைகளில் இனம் தெரியாதவர்கள் நடமாட்டமும் இவ்வளாகத்திற்குள் அதிகரிப்பதாகவும் இது தொடர்பாக பலமுறை இக்கிராமத்தின் கிராம அலுவலகர், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றிற்கு தெரியப்படுத்தியும் இதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இவ் வீதியால் இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் சென்று வருகின்றனர். கிளி/இந்துக்கல்லூரி கிளி/இந்து ஆரம்ப வித்தியாலய மாணவர்கள்பெரும்அச்சத்துடனேயே இவ்வீதியால்சென்றுவருவதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

ஆகையினால் இவ் விடத்திற்கு கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச்சங்கத்தினர், சமுர்த்தி உத்தியோகத்தினர்,ஏனைய பொது அமைப்பினர் இக் காணியை பார்வையிட்டு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு மிக விரைவாக துப்புரவு செய்யும் நடவடிக்கையைமேற்கொள்ளவில்லையெனில் கலாசார சீரழிவுகள் ஏற்படவாய்ப்புள்ளதாக கிராமத்தின் சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் ஆகியோர் சுட்டிக் காட்டுகின்றனர். (2-271)







மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலைக்கு கல்வி அமைச்சால் 40 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள வகுப்பறை மற்றும் கேட்போர் கூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற பிரதிக் குழுக்களின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோருடன் கல்வி அமைச்சின் தமிழ் மொழி மூல தேசிய பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிப்பாளர் எம்.முரளீதரன், மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.செபஸ்ரியன், மன்னார் கோட்டக் கல்வி அதிகாரி மரியான் கூஞ்ச ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்: மல்லாவி ,பரந்தன் செய்தியாளர்கள்)

# தோணிக்கல் கிராமத்தின் எல்லையில் மீன்சந்தை புதிதாக திறக்கப்பட்டுள்ளது

## ஆட்சேபனை இருப்பின் வவு.பிரதேச சபை செயலாளருடன் தொடர்பு கொள்க

(குருமன்காடு)

வவுனியா தெற்கு பிரேதச சபைக்கு உட்பட்ட தோணிக்கல் கிராமத்தில் பல சரக்கு கடைகளில் மரக்கறிகள் விற்க தடை செய்யப்பட்டுள்ளதுடன் வீதியோரங்களில் உள்ள மீன் கடைகளில் மீன் விற்கவும் தடை விதிக்கப்படுவதாகவும் அவ்வாறு விற்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக இக்கிராமத்தை சேர்ந்த பொது மக்கள்,வர்த்தகர்கள் ஆகியோர் விசனம் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

தோணிக்கல் கிராமத்தின் எல்லை பகுதியில் வவுனியா தெற்கு பிரதேச சபையினால் மரக்கறி மற்றும் மீன் சந்தை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அவ்விடத்திலே மரக்கறிகள் மற்றும் மீன்கள் விற்கப்படவுள்ளதாகவும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்த பிரதேச சபை இனி பலசரக்கு கடைகளில் மரக்கறி மற்றும் வீதியோரங்க ளில் மீன்கள் விற்பதற்கு தடை விதிப்பதாகவும் அவ்வாறு மீறி விற்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிராம வர்த்தகர் ஒருவரிடம் வினவிய போது,

மரக்கறி வியாபாரம் பிரதான வியாபாரமாக காணப்படுகின்றது. அதனை வைத்தே மற்றைய வியாபாரங்களை மேற்கொள்வதாகவும் தெரிவித்த வர்த்தகர் அதனை உடனடியாக நிறுத்துமாறு கூறுவது ஏற்புடையதல்ல என தெரிவித்தார்.

இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அக்கிராமத்தை சேர்ந்த பொது மகன் ஒருவர் தெரிவிக்கையில்,

பல சரக்குகடைகளில் மரக்கறியும் மற்றும் வீதியோர மீன் கடைகளில் மீனும் விற்கக்கூடாது எனவும் புதிதாக அமைக்கப்பட்ட சந்தையில் அவை விற்கப்படும் எனக் கூறுவது நீதியற்ற செயல்.

இது பற்றி வவுனியா தெற்கு பிரதேச சபை செயலாளர் சுகந்தி கிஷோரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, வவுனியா தெற்கு பிரதேச சபையினால் தோணிக் கல்லில் புதிதாக சந்தை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அச்சந்தையிலிருந்து ஆயிரம் மீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் பிரதேச சபையின் சட்ட பிரகாரம் மரக்கறி மற்றும் மீன் இறைச்சி விற்க முடியாது எனவும் அதற்கப்பால் விற்பதற்கு எந்த தடையும் இல்லை என தெரிவித்தார். அத்துடன் தோணிக்கல் கிராமம் பெரிய கிராமம் என்பதனால் சந்தை ஒன்று அமைக்க வேண்டிய தேவை காணப்பட்டிருந்தது.இவ்வளவு காலமும் பொருத்தமான இடம் கிடைக்காத காரணத்தினால் சந்தை அமைக்க முடியாமல் இருந்தது. இப்போது சந்தை அமைக்கப்பட்டுள்ளது எனவும் ஆயிரம் மீற்றருக்கு உட்பட்ட கடைக்காரர்களும் புதிதாக அமைக்கப்பட்ட சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்ய முடியும். மக்களுக்காகத்தான் நாங்கள் என கூறிய பிரதேச சபை செயலாளர் இக்கிராமத்தில் அமைந்துள்ள கடை உரிமையாளர்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் தன்னை தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (2-250)

### ஊடகவியலாளர்கள் கூட்டங்களுக்கு

# மாவட்ட செயலகத்தால் அழைப்பு விடுக்கப்படின் சமுகமளிக்கலாம்

## வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப் படாத நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களை ஊடகவியலாளர்கள் தொடர்புகொண்டு விடயத்தை தெரியப்படுத்திய பின்பு ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இச் செயற்பாடு குறித்து ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி. றோகண புஸ்ப குமார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் யார் யார் பங்குபற்றலாம் என்கிற விதிமுறையுள்ளது என குறிப்பிட்ட அவர் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், எதிர்க்கட்சி தலைவர்கள், மாகாணசபை அமைச்சர்கள், மாகாண சபை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற அமைச்ச ர்கள், மாகாண முதலமைச்சர்கள், இணைத்தலைவர்களான நான்கு அமைச்சர்கள், அரச திணைக்கள தலைவர்கள், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் இந்த அமர்வில் கலந்து கொள்ள முடியும் என சுட்டிக் காட்டிய வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஊடகவியலாளர்கள் மாவட்ட செயலகத்தால் அழைப்பு விடுக் கப்பட்டால் மட்டுமே சமுகமளிக்க முடியும். அமைச்சர்களுடன் வரும் ஊடகவியலாளர்கள் மட்டுமே ஒருங்கிணைப்பு க்குழு கூட்டங்களுக்கு அனுமதிக்கப்படுவர் என தெரிவித்தார்.

அரசாங்க அதிபரின் இக் கூற்று குறித்து கருத்து தெரிவித்த ஊடகவியலாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் இல்லாத எதிர்க்கட்சி தலைவர்கள் எவ்வாறு கூட்டத்தில் பங்கெடுக்க முடியும் என கேள்வியெழுப்பியதுடன் ஊடகவியலாளர்கள் ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களுக்கு அனுமதிக்க முடியாது என்ற அரசாங்க அதிபரின் கூற்றானது இந்த நல்லாட்சியில் ஜனநாயக விரோத செயல் என தங்கள் கண்டனங்களை பதிவு செய்தனர்.

ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அமர்ந்திருந்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோர் அரசாங்க அதிபரின் கருத்திற்கு ஆதரவாக மௌனம் சாதித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-250)

# கடலில் தத்தளிக்கும் தமிழர்களை மனிதாபிமானத்துடன் நடத்துங்கள்

## இந்தோனேசிய ஜனாதிபதிக்கு டக்ளஸ் எம்.பி. அவசரக் கடிதம்



இந்தோனேசியாவின் ஆச்சே மாகாண கடலில் தத்தளிக்கும் தமிழ் மக்களின் அவலங்கள் சொல்லில் அடங்காதவையாகும். அவர்களில் பெண்கள், குழந்தைகள் ஆகியோர் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள்.

அவர்களின் நிலைமையை கவனத்திலெடுத்து மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க இந்தோனேசியா அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவுக்கு அவசரக் கடிதம் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுதியுள்ளார்.

கடல்வழியாக அவுஸ்திரேலியாவுக்கு பயணம் செய்வது ஆபத்தானது என்றும் அப்படி செல்கின்றவர்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் அகதிகளாக ஏற்றுக் கொள்ளாது என்றபோதும், ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி எமது மக்கள் தமது பூர்வீகச் சொத்துக்களையெல்லாம் விற்றும், பெருந்தொகையான கடன்களை வாங்கியும் ஆபத்தான கடல்வழிப் பயணத்திற்கு தயாராகின்றார்கள்.

எனவே படகில் பயணம் செய்து கடலில் பல ஆபத்துக்களை சந்தித்து இந்தோனேசிய கடற்பரப்பை அடைந்திருக்கின்றார்கள். இப்படியாக ஆபத்தான கடற்பயணத்தை செய்தவர்களில் பல ஆயிரம் பேர் கடலிலேயே பலியாகிப் போயிருக்கின்றார்கள். பலர் அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்து அகதிகளாக முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

எனவே எமது மக்களின் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளையும், அத்தியாவசிய உதவிகளையும் இந்தோனேசிய அரசாங்கம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதாக அந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தோனேசியாவின் குடியகல்வு சட்டங்களை மீறியும் ஆட்களை பொய் வாக்குறுதிகளைக் கூறி அழைத்துவந்த ஆட்கடத்தல் காரர்களுக்கு எதிராகவும், அதற்குத் துணையாக செயற்பட்டவர்களுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கைகளை இந்தோனேசிய அரசாங்கம் எடுக்க வேண்டும். ஆனால் கடலில் தத்தளிக்கும் எமது மக்களின் அவலத்தையும், அழுகையையும் மனிதாபிமான ரீதியாகவே அணுகவேண்டும் என்றும்கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# தென் கிழக்குப் பல்கலையில் பகிடிவதைக்கு முற்றுப்புள்ளி

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீட மாணவர்கள் இனி ஒருபோதும் பகிடிவதை செய்வதில்லை என பிரகடனம் செய்து உறுதியளித்துள்ளனர். இந் நிகழ்வு கடந்த புதன்கிழமை (15%) தென் கிழக்குப் பல்கலைக் கழக ஒலுவில் வளாக கலை, கலாசார பீட கேட்போர் கூடத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் முன்னிலையில் இடம் பெற்றது. இதில் பல்கலைக் கழக சட்டங்களுக்கு மதிப்பளித்து இரண்டாம் வருட மாணவர்களாகிய எமது பொறுப்புடமையினை புரிந்து கொண்டு எமது பீடத்தில் புதிதாக இணைந்து கொண்டுள்ள முதலாம் வருட மாணவர்கள் எதிர் கொள்ளும் சிரமங்களை அறிந்து கொண்டும், இரண்டாம் வருட மாணவர்களாகிய நாங்கள் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதியாகிய இன்றைய நாளில் எமது கலை கலாசார பீடத் தினை பகிடிவதையுள்ள பீடமாக பிரகடனம் செய்து உறுதியளிக்கின்றோம். தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் அரபு மொழி பீட மாணவர்கள் கடந்த வாரம் முதல் வருட மாணவர்களுக்கு பகிடிவதை செய்வதில்லை எனப் பிரகடனப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-5)

# அந்தியேட்டி நாள் நினைவஞ்சலி



தோற்றம்
08.02.1936

மறைவு
19.05.2016

அமரர் திரு.கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை (SKP)
(பிரபல புகையிலை வர்த்தகர்- கண்டி)

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன் நல் வாழ்வுக்கு வழி காட்டிய
எம் அன்பு தெய்வமே என்றென்றும் உம் நினைவுடன்....

அன்னாரின் அந்தியேட்டி கிரியை 20.06.2016 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்
திருமதி கி.கிருஷ்ணலீலாவதி
திருமதி ந.பத்மாவதி (Swiss)

மருமக்கள்
திரு.சி.கிருஷ்ணமூர்த்தி (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் தேசிய நீர் வழங்கல் சபை)
திரு.வ. நடராஜதாசன் (Swiss)

பேரப்பிள்ளைகள்
திரு.கி.ஜெயானந்தன் (Dispensing Officer General Hospital, Kilinochchi), திருமதி ஜெ.சொப்னா, திரு.கி.கிருஷ்ணரூபன் (UK), திரு. ந.கிருபானந்தன் (Swiss), திருமதி கி.பிரவீனா (Swiss), திருமதி உ.யாழினி (Pre School, Teacher), திரு ச.உமைமைந்தன் (T/O), திருமதி ம.சர்மிலி (Swiss), திரு பா.மயூரன் (Swiss), செல்வி ந.நிவேதா (Swiss),

மற்றும் பூட்டப்பிள்ளைகள்
சஞ்ஜய்குமார், சஜோனா, வர்ணிகா, அபிநயன், அக்ஷய், அக்ஷரா.

தேன்புளியடி, கரணவாய், கரவெட்டி.

(4973)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber

# பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் சங்கமம் சஞ்சிகை வெளியிடும் நாளை காலை 9.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்களான


திரு.ந.சந்திரராஜா


திரு.சோ.சிறிஸ்கந்தராசா


திரு.க.கௌரிஹாசன்


திரு.த.யுகேஸ்

ஆகியோர் அதிபர் தரம் III போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர்களாகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு இவர்களைப் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(4967)

பாடசாலைச் சமூகம், யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.




பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின்
நெல்லியடி சேவை நிலையம் மற்றும் கிளிநொச்சி
கிளை ஆகியன வட பகுதி வாழ் மக்களின் நிதித் தேவைகளை
பூர்த்திசெய்வதற்காக புதுப்பொலிவுடன் புது முகவரியில்...

வாடிக்கையாளர்களின் நிதித் தேவைகளை மிகவும் சௌகரியமாக பூர்த்தி செய்வதற்காக எதிர்வரும் 2016 ஜூன் மாதம் 20 திகதி நெல்லியடி சேவை நிலையம், இல: 148, யாழ்ப்பாணம் வீதி, நெல்லியடி, கரவெட்டி எனும் புதிய இடத்திலும், 2016 ஜூன் மாதம் 21 திகதி கிளிநொச்சிக் கிளை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் புதிய இடத்திலும் சுபநேரத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

**எமது சேவைகள்**

- லீசிங் வசதி
- தனிநபர் கடன்
- பெக்டரின் (Factoring)
- வியாபாரக் கடன்
- இஸ்லாமிய நிதிச் சேவைகள்
- மார்ஜின் டிரேடிங் (Margin Trading)

நெல்லியடி சேவை நிலையம்
இல: 148, யாழ்ப்பாணம் வீதி
நெல்லியடி, கரவெட்டி
அழையுங்கள்: 0212 262809

கிளிநொச்சி கிளை
கண்டி வீதி, கிளிநொச்சி,
அழையுங்கள்: 0212 283867/0212 283868
தொலைநகல்: 0212 285308

PLC பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
(மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனம்)

இல.1161, மருதானை வீதி, கொழும்பு 08
தொ.பேசி. : 0112 631 631

2011 இலக்கம் 42 நிதி தொழில் சட்டமூலத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய நிதியத்தின் கீழ் அனுமதி பெற்ற ஓர் நிதி நிறுவனமாகும். 1995 ஒகஸ்ட் 22இல் கட்டிணைக்கப்பட்டது. பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா AA (lka), ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் B+/B, :பிட்ச் ரேட்டிங்ஸ் இன்டர்நெஷனல் B+ மற்றும் AA தரப்படுத்தப்பட்டது.


# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

1. **The Chairman, University Procurement Committee,** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for "**Supply of labour for daily works, of University of Jaffna.**"
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered as manpower supply agency / Community based organizations / Civil work contractors.
4. Interested bidders may obtain further information from the **Senior Assistant Registrar, Administration, University of Jaffna, Jaffna,** and inspect the Bidding Document at the same address on any working day from **9.00 hrs to 16.00 hrs.**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Senior Assistant Registrar, (Administration) University of Jaffna (T.P No 021 2226517),** from **20th June 2016** until **4th July 2016** from **9.00 hrs, to 15.00 hrs,** upon payment of a non-refundable fee of **Rupees One thousand (Rs. 1,000/=) at the Shroff counter of the University of Jaffna.**
6. Bids shall be delivered or sent by registered post to the **Registrar, University of Jaffna P.O.Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 10.00 hrs** on **5th July 2016 Bids** will be opened soon after closing at the **Registrar's office, University of Jaffna,** in presence of the bidder's representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of **60 Days** from the date fixed for Closing of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security for an which shall be;
   - In the form included with the Bidding document.
   - In favour of **Vice - Chancellor, University of Jaffna**.
   - For an amount of **Rs. 15,000.00, Valid up to 3rd October 2016.**
   - Issued by one of the agencies
   - A bank operating in Sri Lanka;
   - A bank based in another country but the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;

**Chairperson,**
**Department Procurement Committee**
**University of Jaffna.**
**P.O.Box 57, Thirunelvely, Jaffna.**

(C-4935)

உ
ஓம்சக்தி



முல்லைத்தீவு வட்டுவாகல்

## அருள்மிகு ஸ்ரீ சப்தகன்னிமார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சபம் - 2016

| ஆரம்பம்<br>13.06.2016<br>தீர்த்தம் எடுத்தல் | [illegible] | நிறைவு<br>20.06.2016<br>திங்கட்கிழமை |
|---|---|---|

அம்பிகை அடியார்களே!

இந்து சமுத்திரத்தில் வளம் பொருந்திய முல்லைமாநகரில் எழில் கொஞ்சும் வெட்டுவாய்க்காலும் நந்திக்கடலும் ஒருங்கேபெற்று வயல்வெளிகளும் இயற்கை சூழலும் பொருந்திய வட்டுவாகல் பதியிலே கோயில் கொண்டு ஜீவராசிகளுக்கெல்லாம் கல், புல் உள்ளவரை காத்தருள்வேன் என்று கூறி அமர்ந்திருக்கும் அம்பாள்களுக்கு நிகழும் மங்களகரமான துர்முகி வருட ஆனித்திங்கள் 6ம் நாள் (20.06.2016) திங்கட்கிழமை பொங்கல் உற்சபம் நடைபெறவுள்ளது. இதில் அடியவர்கள் தவறாது கலந்துகொண்டு எம்பிராட்டிகளின் திருவருளை பெற்றுய்யுமாறு அருளோடு வேண்டுகின்றோம்.

### உற்சவகால நிகழ்வுகள்

06.06.2016 அன்று பாக்கு தெண்டல் நடைபெறும்

13.06.2016அன்று இந்து சமுத்திரத்தில் தீர்த்தம் எடுக்கப்பட்டு ஏழு நாட்கள் விளக்கு எரிக்கப்படும்

7 நாட்களும் மதியம் 11.30 மணிக்கும் மாலை 07.00 மணிக்கும் விசேட பூஜைகள் இடம் பெறும்

7 நாட்களும் 2 நேர அன்னதானம் இடம் பெறும்

பொங்கல் அன்று நேர்த்திக்கடன் செயயும் அடியவர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்

**ஆலய பிரதம குரு தெ.பஜீர்தன் ஐயர்**

பக்த அடியார்கள் திருவிழாக்காலங்களில் பால், தயிர், இளநீர், பூ, பூமாலை பழவகைகள் என்பவற்றை கொடுத்துதவி எம் பெருமாட்டிகளின் இஷ்டசித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்

**இசை நிகழ்ச்சி இடம் பெறும்**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்"

இங்ஙனம்
ஆலயபரிபாலனசபை
கிராம மக்களும்

# யுத்தத்திற்குப் பின்னர் கல்விவளர்ச்சி வீழ்ச்சி

## சாவகச்சேரியில் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



யுத்தம் முடிவடைந்த பின்னரே யாழ்.மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி பெறுபேறுகளின் அடிப்படையில் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டியது மிக அவசியம் என கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

"அருகில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை" என்ற வேலைத் திட்டத்தின் கீழ் வகுப்பறை கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்.

"அருகில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை" என்ற திட்டத்தின் கீழ் இலங்கையில் 7 ஆயிரம் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கடந்த கால அரசு கல்வி அமைச்சுக்கோ அபிவிருத்திக்கோ பெருந்தொகையான பணத்தை செலவிடவில்லை. ஆனால் எமது அரசு கோடிக்கணக்கான ரூபாவை கல்விக்காக செலவழித்து வருகின்றது. புதிதாக பாடசாலைகள் அபிவிருத்தி செய்தால் மாத்திரமே சமூகத்தில் அபிவிருத்தியை காண முடியும் என்ற நோக்கத்தில் கல்விக்கான சகலவசதிகளையும் திட்டங்களையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

கல்விக்கான திட்டங்களை வடமாகாணத்தில் செயற்படுத்தும் போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே கொழும்பில் இருந்து மட்டும் முடிவுகளை எடுக்காமல் பிரச்சினைகள் எழுகின்ற இடத்துக்கு விஜயம் செய்து எதிர்கால பிரச்சினைகளை ஆராய திட்டமிட்டுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதற்காக வெளிமாவட்டங்களுக்கு செல்லும் போது பல கஷ்டங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். எதிர்காலத்தில் அவர்களுக்கென ஆசிரியர் விடுதி அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். அந்ததந்த மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகளை அணுகி நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பாடங்களை தவிர வேறு பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இல்லை. சில பாடசாலைகளில் அளவுக்கதிகமாக இருக்கிறார்கள். வடமாகாண ஆளுநருக்கிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற போது இது தொடர்பில் ஒரு ஒப்பந்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது.

அதாவது மாகாண பாடசாலைகளில் அதிகமாக இருக்கும் ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களில் நிரப்புவதற்கான யோசனைகளை முன் வைத்துள்ளோம். அதற்கு கல்வி அமைச்சரும் தனது இணக்கப் பாட்டினை தெரிவித்துள்ளார். இத் திட்டத்தினை எழுத்து வடிவில் செய்து எதிர்காலத்தில் செயற்படுத்தவுள்ளோம்.

முன்னைய காலங்களில் யாழ் மாவட்டத்தில் கல்வி பெறுபேறுகள் புள்ளிவிபரத்தின்படி ஏனைய மாவட்டங்களைவிட குறையவில்லை. ஆனால் யுத்தம் முடிவடைந்த பின்னர் கடந்த சில ஆண்டுகளாக கல்வி வளர்ச்சி பெறுபேறுகளின் அடிப்படையில் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்க வேண்டியது மிக முக்கியம். அது தான் இப்போது எமக்கு தேவையாக உள்ளது.

ஆசிரியர்கள் கற்பிக்காமல் உள்ளார்களா? மாணவர்கள் கல்வி கற்காமல் உள்ளார்களா? அல்லது நிர்வாகம் ஒழுங்காக செய்யவில்லையா என்பது பற்றி கண்டறிய வேண்டும். உலகமயமாக்கப்பட்ட பின்னர் தொழில்நுட்பம் வளர்ந்த பின்னர் இவ்வாறான வீழ்ச்சி என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் ஆகும்.

யாழ் மாவட்டத்துக்கு வெளிநாட்டில் வாழும் தமிழர் உதவு கின்றனர். அமைச்சுக்களால் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் தொடர்ச்சியாக அபிவிருத்திகள் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன. இந்த நிலையில் கல்வியில் மாத்திரம் பின்தங்கிய நிலை ஏற்பட்டுள்ளமை தொடர்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

# விளையாட்டு நிகழ்வு முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ணன் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம் , நல்லூர், கோப்பாய் ஆகிய மூன்று கோட்டங்களையும் சேர்ந்த தரம் 3,4,5 மாணவர்கள் மத்தியில் கோட்ட ரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் மூன்று பிரிவுகளிலும் வெற்றி பெற்ற முதல் மூன்று அணிகளும் இந்தப் போட்டியில் பங்குபற்றின. அத்துடன் ஆரம்பப்பிரிவில் ஆண்மாணவர்கள் மட்டும் கல்வி கற்கும் ஐந்து பாடசாலைகள தனி ஒரு பிரிவாகவும் பெண் மாணவிகள் மட்டும் கல்வி கற்கும் ஐந்து பாடசாலைகள் தனி ஒரு பிரிவாகவும் மொத்தம் மூன்று பிரிவுகளாக இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஆண்,பெண்மாணவர்கள்இணைந்து கல்வி கற்கும் பாடசாலைகளுக்கிடையிலான தரம் மூன்று பிரிவில் முதலாமிடத்தை யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையும் இரண்டாமிடத்தை யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயமும் யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை பெற்றன.

தரம் நான்கு பிரிவில் முதலாமிடத்தை யாழ்.கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயமும் இரண்டாமிடத்தை கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயமும் மூன்றாமிடத்தை அச்சுவேலி ஆரம்பப்பாடசாலையும் தரம் ஐந்து பிரிவில் முதலாமிடத்தை யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயமும் இரண்டாமிடத்தை கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயமும் மூன்றாமிடத்தை யாழ்.கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

அடுத்து ஆண்மாணவர்கள் மட்டும் கல்விகற்கும் தரம் மூன்று பிரிவில் முதலாமிடத்தை யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியும் இராண்டாமிடத்தை யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மூன்றாமிடத்தை யாழ். மத்திய கல்லூரியும் தரம் நான்கு பிரிவில் முதலாமிடத்தை யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. மூன்றாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது. தரம் ஐந்து பிரிவில் முதலாமிடத்தை யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் இரண்டாமிடத்தை யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மூன்றாமிடத்தை யாழ்.மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

அடுத்து பெண்கள் மட்டும் கல்வி கற்கும் பாடசாலைக்களுக்கிடையிலான போட்டியில் தரம் மூன்று பிரிவில் முதலாமிடத்தை யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையும் இரண்டாமிடத்தை யாழ். சுண்டுக்குளி மகளிர்கல்லூரியும் மூன்றாமிடத்தை சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையும் தரம் நான்கு பிரிவில் முதலாமிடத்தை யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் இரண்டாமிடத்தை யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையும் மூன்றாமிடத்தை யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையும் தரம் ஐந்து பிரிவில் முதலாமிடத்தை யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் இரண்டாமிடத்தை சென்ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையும் மூன்றாமிடத்தை யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையும் பெற்று வெற்றி வாகை சூடியுள்ளன என யாழ்ப்பாண கல்வி வலய ஆரம்பக்கல்வி விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி அறிவித்துள்ளார். (இ-5)

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு தீர்த்தத் திருவிழா



### நித்தம் கடலில் உதிக்கும் அன்னை

அலைகடலில் புனல் எனவே ஆடிவரும் அன்னை
பாதம் தொட்டு பணிந்திடவே உன்னை நாடி வந்தேன் அம்மா
முக்கண்ணன் முதல்வனையே உன்னருகில் கண்டு
வானுயர கரம் தூக்கி தொழுது நின்றேன் அம்மா
எல்லையில்லா கருணை வெள்ளம் தந்து எம்மை காப்பாள்
பொலிவானம் கொண்டு நித்தம் கடலினிலே உதிப்பாள்
உன் அருளை பெறுவதற்கு கடல்கடந்து வந்தோம்
உன் கழலை பணிந்து நின்று கவி பாடி மகிழ்ந்தோம்

நி.கவிஅழகன்- தாவடியூர்

### புதுமை பூத்துப் பவனிகாண்

சந்தனமும் குங்குமமும் பால் பழமுடன்
தேன் தயிர் சேரபிசேகப் பூசை சிறக்க
செந்தூரப் பொட்டிட்டு பட்டாடை போர்த்து
சிங்காரம் செழிக்கும் சோபனம் விளங்கும்
எந்தாயே நயினைப் பதிமேவும் பூஷணியே

கலாபூஷணம் சிவ-சிவநேசன்

### காத்திட வருவாயம்மா

கருணை மழையே கயல் விழித்தாயே
காருண்ய கடலன்னையே காத்திட வருவாயம்மா
ஓடமதில் ஏறிவந்தோம் ஓரக்கண்ணால் பாருமம்மா
ஓயவில்லை எமது துயர் ஓடிவந்துகாருமம்மா

மல்லை-கலா

### அருள் மணம் வீசும் நயினைக்கு வாரும்

அருள் மணம் வீசும் நயினைக்கு வாரும்
அளப்பெரும் கருணைதனை ஒரு தரம் பாரும்
கொடி விட்டு வந்து போகும் அடியார்கள் கூட்டம்
கோவிலில் தெரியும் அந்த அற்புதக்கோலம்

சி.ஜெகன்-பெரியபுலோ

### வேப்பிலைக்காரியம்மா

வேப்பிலை தடவி வெந்துயர் தீர்க்கும் நாச்சியாரே
காப்பிய நாயகி மணிமேகலையின் மரகதமேடே
வாட்டிடும் நோய் பிணி மனத்துயர் நீக்கிடும் மாதவமே
ஆட்சியில் அமர்த்தியே ஆளுமை செய்திட அருள் தாராயோ

ஏ.வீரசிங்கம்-அரியாலை

### பல்லவ மணித் தாயே

நாகபூஷணியே! நயினையின் காவல் தேவதையே
பாவரட்சகியே! பரமன் அருட்சக்தியே
ஆயிரம் மணிகள் நாத ஒலி நயினை வீதியிலே
பல்லாயிரம் பக்தர்கள் பாடி பணிந்தனர் பல்லவத்திலே

பாலையூரான்-தம்பாலை

### அன்னையவள் நாகபூஷணி

அழகு மிளிர் கலை வண்ண மாபெரும் கோவிலிலே
அன்னையவள் நாகபூஷணி சிங்காரமாய் ஏற்றிருந்து
நாடித்தேடிச் செல்லும் அடியார்க்கு திருவருள் சொரிந்து
அன்னையவள் பூசித்த நாகமும் குளிர்ந்து படம் எடுத்தாட
அடியார்களும் ஆடி ஆடி பாடிப்பாடி தொழுது உயர்ந்தனரே

சி.குலராஜ்
சென்.ஜோன்ஸ் கல்லூரி,யாழ்ப்பாணம்

# அமெரிக்காவில் ஒருநாளில் 90 பேர் துப்பாக்கிச் சூட்டில் பலி

## துப்பாக்கி கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டும்

### ஹிலாரி கிளின்டன் வலியுறுத்தல்


"துப்பாக்கி கட்டுப்பாடு சட்டங்களை மிக கடுமையாக்க வேண்டும்" என்று அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் வலியுறுத்தி உள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டில் மட்டும் ஒரு நாளைக்கு சராசரியாக 90 பேர் பலியாகின்றனர்.

இதைத் தடுக்க சட்டங்களில் உள்ள ஓட்டைகளை நீக்க வேண்டும். துப்பாக்கி கட்டுப்பாட்டு சட்டங்களில் ஓட்டைகள் இருப்பதை பயன்படுத்தி. சட்டவிரோத நடவடிக்கைகளில் சிலர் ஈடுபடுகின்றனர். புதிதாக துப்பாக்கி வாங்க வருவோரின் பின்னணி குறித்து 3 நாட்களுக்குள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அதை சரிவர பார்க்காததால் சார்ல்ஸ்டன் சர்ச் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது. அதில் ஈடுபட்டவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.



அதை பற்றி ஆராயாமல் விட்டதால். புதிதாக துப்பாக்கி வாங்கியுள்ளார். எனவே, துப்பாக்கி வாங்குவதற்கான விதிமுறைகளை கடுமையாக்க வேண்டும்.

இவ்வாறு ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார். (இ-5)

## வங்கதேசத்தில் இந்து பேராசிரியரை தாக்கிய தீவிரவாதி சுட்டுக்கொலை

வங்கதேசத்தில் இந்து பேராசிரியர் தாக்கப்பட்ட வழக்கில் தொடர்புடைய தீவிரவாதி ஒருவன், துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டான்.

தென்மேற்கு வங்கதேசத்தின் மதரிபூரில் உள்ள நஜிமுத்தின் அரசு பல்கலைக்கழக கல்லூரியில் கணிதத் துறை உதவி பேராசிரியராக பணியாற்றி வருபவர் ரிபன் சக்கரவர்த்தி (வயது50).

இவர் மீது கடந்த புதன் கிழமை 3 இளைஞர்கள் கொலைவெறி தாக்குதல் நடத்தினர். இதில் ரிபன் சக்கரவர்த்தி படுகாயம் அடைந்தார். இதனிடையே தாக்குதல் நடத்திய மூவரில் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்.

கொலம் பைசுல்லா பாகிம (வயது 17) என்ற இந்த இளைஞர் பாக்காவை சேர்ந்த கல்லூரிமாணவர் என்றும் ஹிஸ்புத் தஹ்ரிர் என்ற தீவிர்வாத அமைப்பின் உறுப்பினர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாகிமை பொலிஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்நிலையில் சக தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் இடத்தை காட்டுவதற்காக பாகிமை புறநகர் பகுதிக்கு பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

இந்நிலையில் அங்கு நடைபெற்றதுப்பாக்கிச்சண்டையில் பாசிம் காயம் அடைந்ததாகவும், அவர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது. அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்ததாகவும் பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர். (இ-5)

## எகிப்து முன்னாள் ஜனாதிபதி மோர்சிக்கு 40 ஆண்டுகள் சிறை

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஆவணங்களை கட்டார் நாட்டுக்கு வழங்கியதாக தொடரப்பட்ட வழக்கில் எகிப்து முன்னாள் ஜனாதிபதி முகமது மோர்சிக்கு 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து, கெய்ரோ நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும். மோர்சியின் ஆட்சிக் காலத்தில் கட்டாருக்கு முக்கிய ஆவணங்கள் சென்று சேருவதற்கு உதவியாக இருந்த. அல்-ஜசிரா தொலைக்காட்சி நிறுவனப் பணியாளர்கள் இருவர் உட்பட, 6 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



அல்-ஜசிரா தொலைக் காட்சியின் செய்தி தயாரிப்பாளர் அலா ஓமர் முகமது மற்றும் செய்தி ஆசிரியர் இப்ராகிம் முகமது ஹிலால் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் அவர்களுக்கு எதிரான தீர்ப்பு வழங்கப்பட்டது.

கடந்த, 2013 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட மோர்சி, மற்றொரு வழக்கில் ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

## அதிரடி தாக்குதல் நடத்த சதி 12 பயங்கரவாதிகள் கைது!

(பிரசல்ஸ்)

அதிரடி தாக்குதல் நடத்த சதி செய்த 12 பயங்கரவாதிகள் பெல்ஜியத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீசில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி மும்பைத் தாக்குதல் பாணியில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டது உலகமெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த தாக்குதலில் முக்கிய குற்றவாளி என கருதப்படுகிற சலா அப்தே சிலாம், பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிரசல்ஸ் நகரில் கைது செய்யப்பட்டான்.

அதைத் தொடர்ந்து பிரசல்ஸ நகரில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தும் அபாயம் இருந்து வந்தது. இந்த நிலையில் தான் அங்கு கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி விமான நிலையத்திலும். மெட்ரோ ரயில் நிலையத்திலும் ஒரே நாளில் அடுத்தடுத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த தாக்குதல்களில் தமிழ்நாட்டை சேர்ந்த இன்போசிஸ் நிறுவன அதிகாரி ராகவேந்திரன் கணேசன் உட்பட 32 பேர் கொல்லப்பட்டனர்.

**மீண்டும் தாக்குதல் அச்சுறுத்தல்**

இந்த நிலையில், கடந்த சில நாட்களாக அங்கு மீண்டும் பயங்கரவாதிகள் தாக்குதலில் ஈடுபடக்கூடும் என அச்சுறுத்தல்கள் வந்த வண்ணம் இருந்தன. சிரியாவில் இருந்து ஐ.எஸ். இயக்கத்தினர் ஒரு குழுவாக வெளியேறி ஐரோப்பா செல்லும் வழியில், பெல்ஜியம் பிரான்ஸ்நாடுகளில் புதிய தாக்குதல்களுக்கு திட்டமிட்டிருப்பதாக தெரிய வந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் பிரதமர் சார்லஸ மிச்செல் மற்றும் 3 மத்திய அமைச்சர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் உச்சக்கட்ட பொலிஸ்பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

**அதிரடி வேட்டையில் 12 பேர் கைது**

மேலும், பிரசல்ஸ் தாக்குதல் நடந்து 3 மாதங்கள் முடிகிற தறுவாயில். அங்கு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை அந்த நாட்டு அரசு அதிரடியாக முடுக்கிவிட்டது.

குறிப்பாக பிரசல்ஸ் நகரை சுற்றிலும் உள்ள 16 நகர சபை பகுதிகளில் பயங்கரவாதிகளை தேடும் வேட்டை நடத்தப்பட்டது. இந்த வேட்டையின் போது, 40 பேர் பிடிக்கப்பட்டனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. அந்த விசாரணையில் அவர்களில் 12 பேர் சந்தேக பயங்கரவாதிகள் என கண்டு. நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். (இ-5)

## ஒரே முயற்சியில் 20 செயற்கைக்கோள்கள் இஸ்ரோவின் அடுத்த சாதனை விரைவில்

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான. "இஸ்ரோ" சொந்த தேவைகளுக்காகவும். வணிக ரீதியான செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஜூன், 22 காலை, 9:25 மணிக்கு, "பி.எஸ்.எல்.வி. சி-34" ராக்கெட் மூலம், 20 செயற்கைக் கோளகள் விண்ணில் செலுத்தப்படுகின்றன.

இந்தியாவின் அதிநவீன "கார்டோசாட் 2 "சத்தியபாமா பல்கலையின் - சத்தியபாமா சாட், புனே பொறியியல் கல்லூரியின் - ஸ்சுவயம் செயற்கை கோள்கள் உட்பட், 20 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த, இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

"கார்டோசாட் 2 "இந்த செயற்கைக்கோள், பூமியை படமெடுக்கவும், கடல் வழி போக்குவரத்தை கண்காணிக்கவும், நீர்வள மேம்பாடு, காடுகள் அழிக்கப்படுவதை தடுக்கவும்உதவும் செயற்கைகோளின் எடை 727.5 கிலோ. பூமியில் இருந்து, 505 கி.மீ., உயரத்தில் நிலை நிறுத்தப்படும். இதன் ஆயுட் காலம், 5 ஆண்டுகள் என மேலும் தெரிய வருகிறது. (இ-5)

## பழம்பெரும் திரைப்பட இயக்குநர் திருலோகசந்தர் காலமானார்

எம்.ஜி.ஆர்,சிவாஜி, ரஜனி ஆகியோரின் படங்களை இயக்கிய பழம் பெரும் திரைப்பட இயக்குநர் ஏ.சி.திருலோக சந்தர் கடந்த வியாழக்கிழமை சென்னையில் காலமானார்.

அவருக்கு வயது 85. திருலோக சந்தரின் சொந்த ஊர் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆற் காடு ஆகும்.

எம்.ஜி.ஆர். நடிப்பில் உருவான அன்பேவா, சிவாஜி கணேசனின் நடிப்பில் டாக்டர் சிவா, பாரத விலாஸ் தெய்வமகன் உள்ளிட்ட பல படங்களை இயக்கியவர். சிவாஜியுடன் இணைந்து சுமார் 25 படங்கள் பணியாற்றியுள்ளார்.

1962 இல் வெளி வந்த வீரத்திருமகன் இவருடைய முதல்படம். 1987 ஆம் ஆண்டு வெளிவந்த அன்புள்ள அப்பா இவரது கடைசிப்படம். திருலோக சந்தரின் மறைவுக்கு இந்திய திரையுலகைச் சேர்ந்த பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (இ

## விஜயசாந்தி வீட்டில் வைரநகைகள் திருட்டு

நடிகை விஜயசாந்தியின் பங்களா வீட்டில் தங்கம், வைர நகைகள் திருடப்பட்டுள என.

இதுகுறித்து பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

தமிழ், தெலுங்கு பட உலகில் 1980 மற்றும் 90களில் முன்னணி கதாநாயகியாக இருந்தவர் விஜயசாந்தி. 'மன்னன்' படத்தில் ரஜினி காந்த் ஜோடியாக நடித்தார். 'வைஜயந்தி ஐ.பி.எஸ்' படத்தில் அதிரடி நாயகியாக நடித்தார். இந்த படம் தமிழகத்திலும் ஆந்திராவிலும் வசூலை அள்ளியது. சிவப்பு மல்லி, ராஜாங்கம், கல்லுக்குள் ஈரம், மஞ்சள் நிலா உட்பட பல படங்களில் நடித்துள்ளார்.

பின்னர் அரசியலில் ஈடுபாடு கொண்டு 'எம்.பியாகியுள்ளார். தற்போது ஐதராபாத் பஞ்சாரா ஹில்ஸ் பகுதியில் உள்ள பங்களா வீட்டில் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார்.

அரசியல் பணி காரணமாக விஜயசாந்தி வெளியில் சென்று இருந்த போது, அவரது வீட்டில் திருட்டு நடந்துள்ளது. மர்ம மனிதர்கள் அவரது வீட்டின் கதவை உடைத்து உள்ளே புகுந்துள்ளனர்.

திருடர்கள், வீட்டில் இருந்த விலை உயர்ந்த வைர மோதிரம் மற்றும் தங்க சங்கிலி உள்ளிட்ட நகைகளை திருடிச் சென்றுள்ளனர். (இ-5)

## பதவிக்காலம் முடிந்தவுடன் என்னைச் செல்ல விடுங்கள்

### இந்திய மத்திய வங்கி ஆளுநர் வலியுறுத்து

இந்திய மத்திய வங்கியான "ரிசர்வ்" இன் ஆளுநராக பதவி வகிக்கும் ரகுராம்ராஜன் தனது பதவிக்காலம் முடிந்தவுடன் விலகிச் செல்வதாகவும், தன்னை இரண்டாவது முறையாக நியமிக்க வேண்டாம் எனவும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இந்திய மத்திய வங்கியின ஆளுநராக மீண்டும்பணியாற்ற மாட்டேன் எனவும் மீண்டும் பழைய தொழிலான விரிவுரையாளர் தொழிலுக்கே செல்லவுள்ளதாகவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



அவரது பதவிக்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. இதனைத்தொடர்ந்தும அவர் மீண்டும் ரிசர்வ் வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பைச் செய்துள்ளார்.


இவர் இந்தியாவின் பணவீக்கத்துக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இவர் அமெரிக்காவின் பிரஜாவுரிமை பெற்றவர் என்பதனால், இந்தியாவில் அக்கறையின்றி செயற்படுகின்றார் எனவும் சில அரசியல் வாதிகளினால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவரை விடவும் துறை சார்ந்தவர்கள் உள்நாட்டில் இன்னும் காணப்படுவதாகவும் அவர்களை இப்பதவிக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் இவருக்கு எதிரான விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ரகுராம் ராஜன் அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக் கழகப் பேராசிரியராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



# சிறுவர் அரங்கம்

1462



# ஒரு தேவதையும் மயிலும்!

முற்காலத்தில் பறவைகள், விலங்குகள் யாவும் மனிதர்களைப் போலவே பேசும் திறன் படைத்திருந்தன. ஒருநாள் காட்டில் அவைகளுக்குள் ஒரே சண்டை. காரணம் தங்கள் தங்கள் அழகைப் பற்றிய பெருமை. அழகை ஆராதிக்காதவர்கள் யார்?

இவைகளின் சண்டையை மிகவும் சுவாரஸ்யமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு தேவதை, "ஓ இவைகள் ஏன் இப்படி மனித குலத்தைப் போல் அடித்துக் கொள்கின்றன? இருக்கட்டும் நான் போய் என்னாலான உதவிகளை இவைகளுக்கு செய்து, இவைகளின் சண்டையை தீர்த்து வைக்கிறேன்!' என்று நினைத்து நல்ல மனதுடன் அவைகளின் முன் ஆஜராயிற்று.

"நண்பர்களே! நான் தேவலோக வாசி. உங்களுக்கு உதவுவதற்காகவே வந்துள்ளேன். உங்களில் யாருக்கேனும் உங்கள் அழகில் திருப்தியில்லையென்றால் என்னால் உங்களுக்கு நிச்சயமாக உதவ முடியும். உங்கள் முகத்தை, ஏன் உங்கள் உடலைக் கூட என்னால் திருத்தி அமைக்க முடியும்.

உங்களில் யாருக்கு என்ன உதவி வேண்டுமோ தயங்காமல் சொல்லுங்கள். நான் மனமார உதவுகிறேன்!" என்றது.

"யார் இவள்? யார் இவள்? இவள் யார் எங்களின் அழகைப் பற்றி கேள்வி கேட்க?' என்ற திமிர் அவைகளுக்குள் துளிர்விட, சட்டென அவைகள் மவுனமாயின. ஆனால், அந்த நல்ல உள்ளம் படைத்த தேவதை அதையெல்லாம் லட்சியம் செய்யலாமல், தன் அருகில் இருந்த குரங்கைப் பார்த்தது.

"சகோதரா! உன்னை எல்லாரும் பரிகாசம் செய்கிறார்களே, உனக்கு வருத்தமாக இல்லையா? நீ சரி என்று சொல். கண் இமைக்கும் நேரத்தில் உன்னை மிக அழகானவனாக மாற்றி விடுகிறேன்!" என்றது.

இதைக் கேட்ட குரங்கின் முகம் சிவந்தது, "அட யார் வேண்டுமானாலும் சிரிக்கட்டும். எனக்கு அதைப் பற்றி அக்கறை இல்லை. எனக்கு மிக அழகிய கால்கள், அதற்கு இணையாக இரண்டு கரங்கள்.

மேலும், என் அழகிற்கு மெருகூட்டுவது என் நீண்ட வால். என்னைப்போல மரத்திற்கு மரம் மிக லாவகமாகத் தாவ யாரால் முடியும்? அந்த வேகத்திற்கு ஈடாக ஒரு பறவை யால் கூட முடியாது.

"இதோ என் அருகில் கோரத்தின் மொத்த உருவாக நிற்கிறானே இந்த குதிரை, இவனை விட எத்தனை மடங்கு அழகானவன் நான் தெரியுமா? இவன் என்னைவிட பல மடங்கு விகாரமாக பெரிய உருவம் கொண்டவன். என் அழகிய வாலை விட மிக கோரமான தடிமனான அடர்த்தியான வாலை மிக ஜம்பமாக ஆட்டிக் கொண்டிருக்கிறானே. இவனின் இந்த இரண்டு அடி நீள அசடு வழியும் முகத்தை வேண்டுமானால் திருத்தி அமையேன் பார்க்கலாம்!" என்றது மிக ஜம்பமாக.

"ஏய்! ஏய்! அயோக்கிய பதரே! என்னைப் பற்றி என்னடா சொல்றே?" என்று சீறிய குதிரை தன் பலம் கொண்ட மட்டும் குரங்கை உதைத்து நொறுக்கியது. பின் தேவதையைப் பார்த்து, "சிநேகமான நண்பனே! சொல் என் அழகிற்கு என்ன குறைச்சல்? நான் மிக பளபளப்பாக, மிகவும் அழ காக இருக்கிறேன். என் அழகிய வாலால் ஈக்களை மட்டும் அல்ல, வேண்டாதவர்களையும் விரட்டி அடிக்கிறேன். ஆகையால் உன் உதவி எனக்குத் தேவையில்லை.

"வேண்டுமானால் கோரத்தின் மொத்த உருவான என் இனிய நண்பன் இந்த யானையை திருத்தி அழகாக்கு.

(தொடரும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

20 06.2016

- 1631 - பால்ட்டிமோர் என்ற ஐரிய ஊர் அல்ஜீரிய கடற்கொள்ளைக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டது.
- 1756 - கல்கத்தாவில் நவாப்புகளினால் பிரித்தானியப் படைவீரர்கள் சிறைப்பிடிக்கபபட்டனர்.
- 1791 - பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனும் அவனது குடும்பமும் வரெனெஸ் நகருக்குத் தப்பியோடினர்.
- 1837 - விக்டோரியா பிரித்தானியாவின் அரசியாக முடி சூடினார்.
- 1858 - இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சி, 1857 முடிவுக்கு வந்தது.
- 1862 - ருமேனியாவின் பிரதமர் பார்பு கட்டார்ஜியூ படுகொலை செய்யப்பட்டார்.
- 1863 - மேற்கு வேர்ஜீனியா ஐக்கிய அமெரிக்காவின் 35ஆவது மாநிலமாக சேர்க்கப்பட்டது.
- 1877 - அலெக்சாண்டர் கிரகாம் பெல் உலகின் முதலாவது வர்த்தக தொலைபேசிச் சேவையை கனடாவின் ஹமில்ட்டன் நகரில் ஆரம்பித்தார்.
- 1900 - பொக்சர் படைகள் பீக்கிங்கில் நூற்றுக்கணக்கான ஐரோப்பியர்களைக் கொன்றனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன் கடல் சமர் அமெரிக்கக் கடற்படையின் பெருவெற்றியில் முடிவடைந்தது.
- 1960 - மாலி, செனகல் ஆகிய நாடுகள் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தன.
- 1978 - கிறீசில் 6.5 றிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவானது.
- 1990 - யூரேக்கா என்ற சிறுகோள் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1991 - ஜெர்மனியின் தலைநகரம் பொன் இலிருந்து பேர்லினுக்கு மீண்டும் மாற்ற பாராளுமன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.
- 2001 - பாகிஸ்தானின் அதிபராக பெர்வேஸ் முஷாரஃப் பதவியேற்றார்.
- 2003 - விக்கிமீடியா அமைப்பு உருவானது.

**பிறப்புகள**

- 1861 - ஃபிரடரிக் கௌலாண்ட் ஹாப்கின்ஸ், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய மருத்துவர். (இ. 1947)
- 1939 - ரமாகாந்த் தேசாய், இந்தியத் துடுப்பாட்ட வீரர். (இ. 1998)
- 1941 - சிலோன் சின்னையா, இலங்கைத் தமிழத் திரைப்பட நடிகர். (இ. 2011)
- 1952 - விக்ரம் சேத், இந்திய எழுத்தாளர்.
- 1954 - அலன் லேம்ப், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர்.
- 1967 - நிக்கோல் கிட்மேன், ஆத்திரேலிய-அமெரிக்க நடிகை.
- 1971 - ஜோஷ் லுகாஸ், அமெரிக்க நடிகர்.
- 1978 - பிராங்கு லம்பார்டு, ஆங்கிலேய காற்பந்து வீரர்.
- 1984 - நீத்து சந்திரா, இந்திய நடிகை.

**இறப்புகள்**

- 656 - உதுமான், முசுலிம் காலிப். (பி. 577)
- 1837 - ஐக்கிய இராச்சியத்தின் நான்காம் வில்லியம். (பி. 1765)
- 1966 - ஜார்ஜஸ் இலமேத்ர, பெல்ஜிய இயற்பியலாளர், வானியலாளர். (பி. 1894)
- 1971 - மகாகவி உருத்திரமூர்த்தி, ஈழத்துக் கவிஞர். (பி. 1927)
- 2005 - ஜாக் கில்பி, இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர். (பி. 1923)
- 2006 - சுரதா, தமிழகக் கவிஞர்

**சிறப்பு நாள்**

- உலக அகதிகள் நாள்.
- ஆர்ஜெண்டீனா - கொடி நாள்.

# உலக அகதிகள் நாள்

உலக அகதி நாள் (World Refugee Day) ஆண்டுதோறும் ஜூன் 20ஆம் நாளன்று நினைவு கூரப்பட்டு வருகின்றது. 2000 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் சிறப்புத் தீர்மானமொன்றின்படி, அகதிகளுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தும் முகமாக, உலக அகதிகள் தினமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆபிரிக்க அகதிகள் நாள் ஜூன் 20 இல் கொண்டாடப்படுவதால் இந்நாள் உலக அகதிகள் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பல்வேறு மோதல்களுக்குள் சிக்கி அகதிகளாக தாம் வசிக்கும் நாட்டினுள், பிற நாடுகளிலென இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி வாழ்ந்துவரும் அகதிகள் பற்றிய விழிப்புணர்வினை உலக மக்களிடத்தில் ஏற்படுத்துவதே இந்நாளின் முக்கியமான நோக்கமாகும். அன்றைய நாள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் பல்வேறு போர்களால் அரசியல், சமூகச் சூழல்களால் அகதிகளாக அல்லலுறும் அகதிகளை நினைவு கூரும் வகையில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங் குகள், இசை நிகழ்ச்சிகள், நினைவஞ்சலி நிகழ்வுகளெனப் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் (UNHCR) ஒவ்வோர் ஆண்டும் இந்நிகழ்வுக ளுக்கான கருப்பொருளைத் தீர்மானிக்கிறது.

## இந்த ஆண்டின் இறுதிக்குள்

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்படும்

(கொழும்பு)

**உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இந்த ஆண்டில் நிறுவப்படவுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு வார இறுதி பத்திரிகையொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இறுதிக்கட்ட போரின் போது குற்றச்செயல்கள் இடம்பெற்றனவா என்பது குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்று இந்த ஆண்டு நிறைவிற்குள் நிறுவப்படவுள்ளது.

இதற்கான உறுப்பினர்களை நியமிக்கும் பணிகள் இன்னும் ஒரு சில வாரங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

போரின் போது காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கவும் ஓர் பொறிமுறைமை உருவாக்கப்படவுள்ளது.

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த நீதிமன்றமொன்று நிறுவப்பட்டால் அதில் உள்நாட்டு நீதவான்களே அங்கம் வகிப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# லசந்த விக்கிரமதுங்க கொலை குறித்து இராணுவ அதிகாரிகளிடம் விசாரணை

## பொன்சேகாவிற்கு சிக்கல்



சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில், அப்போதைய இராணுவ தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் அதிகாரிகள் குறித்த தகவல்களை குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு வழங்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

கல்கிஸ்ஸை நீதிமன்றம் இதற்கான உத்தரவுகளை பிறப்பித்துள்ளது

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சரத் பொன்சேகாவின் படையினர் மீது குற்றச்சாட்டை சுமத்தி வருகிறார். எனினும் அதனை சரத் பொன்சேகா மறுத்து வருகிறார்.

இந்தநிலையிலேயே கல்கிஸ்ஸை நீதிமன்றம் இதற்கான உத்தரவுகளை இராணுவத்தினருக்கு பிறப்பித்துள்ளது.

இதன் அடிப்படையில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் நாளாந்த குறிப்பு புத்தகத்தையும் குற்றப் புலனாய்வுத்துறையினரிடம் வழங்க வேண்டும் என்று கல்கிஸ்ஸை நீதிமன்றம், இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இராணுவத்துக்கு எதிரான இந்த உத்தரவுகளை தடுக்க இராணுவத் தலைமை முயற்சித்த போதும் சட்டமா அதிபர் அதற்கு இடம்கொடுக்க வில்லை என்று சண்டேலீடர் செய்தித்தாள் தெரிவித்துள்ளது. (இ-5)

# 40நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜீப் ரக வாகனம் வழங்க நடவடிக்கை

40 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜீப் ரக வாகனங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சுக்களின் கண்காணிப்பு பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு ஜீப்கள் வழங்கப் படவுள்ளன.

இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரம் அண்மையில் நாடாளுமன்ற விவகார அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குத்தகை அடிப்படையில் இந்த வாகனங்கள் வழங்கப் படவுள்ளன.

வாகனங்கள் வழங்கப் படும் வரையில் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் தலா இரண்டு இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

இதற்கு மேலதிகமாக காரியாலய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக இதுவரையில் வழங்கப்பட்ட மூன்றரை இலட்சம் ரூபா ஐந்து இலட்சமாக உயர்த்தப் படவுள்ளது.

மொத்த தொகையில் 20 வீதத்தை மீள அறவீடு செய்யும் அடிப்படையில் இந்த கொடுப்பனவு வழங்கப்பட உள்ளதாக வார இறுதி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு சொகுசு வாகனங்கள் கொள்வனவு செய்வது குறித்து அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனக் கணைகள் தொடுக்கப் பட்டுள்ள நிலையில் இவ்வாறு அரசியல்வாதிகளுக்கு நல்லாட்சி அரசாங்கம் மேலும் சலுகைகளை வழங்க முன்வந்துள்ளமை சர்ச்சையை எற்படுத்தியுள்ளது. (இ-5)

# நுரைச்சோலை அனல்மின் நிலையம் அடிக்கடி செயலிழக்க காரணம் என்ன?

## இலங்கை அதிகாரிகள் மீது சீனா குற்றச்சாட்டு

நுரைச்சோலை அனல் மின் நிலையம் அடிக்கடி செயலிழந்தமைக்கு இலங்கை அதிகாரிகளே காரணம் என சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மின் உற்பத்தி நிலையம் தொடர்ச்சியாக செயலிழந்தமைக்கு இலங்கை மின்சார சபையின் சில அதிகாரிகளின் நடவடிக்கைகளே காரணம் என தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை உருவாக்கிய சீனாவின் சிமெக் என்ற நிறுவனம் இலங்கை அரசாங்கத்திற்கு 16 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

சில மின் பொறியியலாளர்களின் நடவடிக்கைகள் மட்டுமன்றி அனுபவம் இல்லாத பயிற்சி எதுவும் இல்லாத ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வாறான அறிக்கை வெளியிடப்பட்டமை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என மின் பொறியியலாளர் தொழிற் சங்கத் தலைவர் அதுல வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளுக்கு இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டமை குறித்து தெரியாது எனவும் அவ்வாறு குற்றம் சுமத்தியிருந்தால் அது பிழையானது எனவும் அவர் சிங்கள பத்திரிகையொன்றிடம் தெரிவித்துள்ளார்.

எனினும், நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் பயிற்றப்பட்ட ஊழியர்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவது உண்மையே என அவர் தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

# பெயரைச் சொல்லலாமா?

மனைவி கணவன் பெயரைச் சொல்லக் கூடாது என்பது தமிழகப் பண்பாடு. ஆனால் ஆபத்துக்குப் பாவமில்லை.ரேஷன்காரர் உங்கள் கணவரின் பெயர் என்ன? என்று கேட்டால் அசடுவழியாமல் மெதுவாய்ப் பெயரைச் சொல்லலாம். அதில் விருப்பமில்லாதவர்கள் சட்டென்று ஒரு தாளில் எழுதி நீட்டிவிட வேண்டும். பல குறிப்புக்களைச் சொல்லிப் பெயரை உணர்த்தும் அளவிற்குப் பிடிவாதம் வேண்டியதில்லை.

தனக்குக் கீழே உள்ள ஊழியர்களைப் பெயர் சொல்லி அழைக்கலாம்.தவறில்லை. சிடுமூஞ்சிக் கேஸ் என்றால் மிஸ்டர் சேர்த்துக் கொள்ளவும்.தனக்கு இணையான ஊழியர்களை அவர் பழகும் விதத்தைப் பொறுத்து மிஸ்டர் சேர்ப்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்யுங்கள்.

பெண்ணாயிருந்தால்?

கணவன் கூப்பிடுகிற மாதிரி, விசாலம்! என்று கூப்பிடாமல் மிஸஸ் இராமலிங்கம் என்று கணவன் பெயரால் கூப்பிடலாம்.தன் கணவர் பெயரால் கூப்பிடப்படுவதைப் பெண்கள் மிகவும் விரும்புவார்கள். திருமணமாகாத பெண்ணாயிருந்தால் அப்பா பெயரைச் சேர்த்து இராமலிங்கம் என்று கூப்பிடலாம்.

கூடப் பிறந்தவர்களை அதிக வயது வித்தியாசம் இல்லாத வரையில் பெயர் சொல்லி அழைக்கலாம். அதைவிட உறவு முறையைச் சொல்லி அழைப்பது (அப்படியில்லை தங்கச்சி! வா தம்பி போகலாம் – இப்படி) நெருக்கத்தை ஏற்படுத்தி பாசத்தைக் கூட்டும் மூத்தவர்களாய் இருந்தால் பெயரோடு அவசியம் உறவை ஒட்ட வேண்டும். எப்படி? சண்முகண்ணன், வசந்தாக்கா – இப்படி.

குடும்ப நண்பர்களின் வீட்டில் உள்ள வயதுக்கு வந்த பெண்களைப் பெயரைச் சொல்லி (என்னவோ நாளைக்குத் தாலிகட்டப் போகிற மாதிரி!) அழைக்கக் கூடாது. உங்க சிஸ்டர், உங்கடாட்டர் என்று சம்பந்தப்பட்டவர்களிடம் பேசலாமே தவிர, பெயரைச் சொல்லக் கூடாது. அந்தப் பெண்ணிடமே பேசும் போது பெயரைத் தப்பித் தவறிக் கூடச் சொல்லக் கூடாது. இந் தப் பெண்ணிடமே பேசும் பெயரைத் தப்பித் தவ றிக் கூடச் சொல்லக் கூடாது. நம்மீதான மதிப்புக் குறையும். அதேபோல் பெண்களும் அவசியம் மிஸ்டர் என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பொது இடத்தில்,தெரிந்த , அதிகம் நெருக்கமில்லாத கிட்டத் தட்ட சமவயதுடைய அல்லது சற்று முன்பின் ஒருவரைச் சந்திக்கிறீர்கள். முதல்முறை மட்டும் ஹலோ மிஸ்டர் அண்ணாமலை என்று சொல்ல வேண்டும். அப்புறம் பெயரே வெளிவரக் கூடாது. சார் சார் தான். முதல் முறை ஏன் பெயர் ? உங்கள் பெயர் என் மனத்தில் பதிந்துவிட்டது என்பதைக் காண்பித்துக் கொள்ளத்தான்.

நெருங்கிய நண்பர்களிடமும் மனைவியிடமும் அடிக்கடி பெயர் சொல்லியபடியே பேச வேண்டும். இல்லை மோகன், போகலாம் நல்லியப்பா, ஒ.கே. மாசிலாமணி –இப்படி இங்கே முடிந்தால் நீளமான பெயர்களை நாமே சுருக்கிச் செல்லமாக அழைக்க லாம். உதாரணமாக திருநாவுக்கரசு என்றால் திருநா என்றோ அரசு என்றோ அழைக்கலாம். ரொம்பவும் விரும்புவார்கள்.

மிகுந்த மரியாதைக் குரியவர்களை , வயதில் மிக மூத்தவர்களை பதவியாலும் உறவாலும் அழைக்கலாம் , பெயரை அடியோடு விட்டுவிட வேண்டியது தான்.பெயரைச் சொல்வதை அருமையாகப் பயன்படுத்தி இதயக் கதவுகளை அற்புதமாகத் திறந்துவிடலாம். நாம் இழுக்கும் இழுப்புக்கு அவர்களை வரவழைக்கலாம் முயன்று பாருங்கள்.

ஆனால் ஒன்று.

இதில் பொது விதிகள் பொருந்தாது.பழகும் ஒவ்வொருவரின் மன நிலையைப் புரிந்து கொண்டு பெயரைச் சொல்வதா வேண்டாமா என்பதை முடிவு செய்வதில் மிகச் சிறந்த நீதிபதி நீங்கள் தான்!

**லேனா தமிழ்வாணன்**

# நாடாமன்ற உறுப்பினர் கம்மன்பில திடீரென கைது செய்யப்படவில்லை

## அமைச்சர் ஹரிசன் விளக்கம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில திடீரென கைது செய்யப்படவில்லை என அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர் ஹரிசன், நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய பிரஜை ஒருவர் கொள்வனவு செய்த ஒரு இலட்சம் அவுஸ்திரேலிய டொலர் பெறுமதியான தனிப்பட்ட பங்குகளை மோசடியான முறையில் விற்பனை செய்துள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு நடத்திய விசாரணைகளுக்கு அமைய உதய கம்மன்பில, ஜயம்பதி கிளரி பெரேரா ஜயசிங்க ஆகியோர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த சந்தேக நபர்கள் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் உதயகம்மன்பில கைது செய்யப்பட்ட விதம் சட்டரீதியானதல்ல என கூட்டு எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர். (இ-5)

# 16 பங்களாதேஷ் பிரஜைகள் கைது

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த 16 பங்களாதேஷ் பிரஜைகள் குருநாகல் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாணாந்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், குறித்த சந்தேகநபர்கள் கூலி நிமித்தம் குருநாகல் பகுதியின் பல்வேறு இடங்களில் வேலை செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை இவர்களை பாணாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியவேளை, எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணாந்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 90 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 160 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 400 | 500 | 1000 | 400 |
| தக்காளி | 220 | 200 | 180 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 100 | 70 |
| கோவா | 180 | 200 | 120 | 200 | 180 |
| கரட் | 250 | 400 | 250 | 400 | 200 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 | 70 |
| புடோல் | 90 | 200 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 140 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 400 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 200 | 100 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 200 | 100 | 160 | 100 |
| பயற்றங்காய் | 150 | 300 | 140 | 160 | 180 |
| லீக்ஸ் | 220 | 300 | 150 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 150 | 200 | — |
| கறிமிளகாய் | 300 | 400 | 220 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 400 | 600 | 800 |
| போஞ்சி | 180 | 400 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 80 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 120 | 300 | 120 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | — | — |
| முள்ளாங்கி | 80 | 200 | — | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 50 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 120 | — | 80 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கண்ணி வெடிகள் அகற்றுவது குறித்து உடன்பாடு 208

யாழ்ப்பாணத்துக்கு நிலைமைகளை நேரில் அறிய வந்த அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டத்துடன் தங்களது சந்திப்பை முடித்து கொண்டனர் என்றும் துது குழுவிடம் அவர் புகார் தெரிவித்தார் .

வடகிழக்கு பகுதியில் சுமார் 10 இலட்சம் பேர் குடிபெயர்ந்துள்ளளர். அவர்களை மீண்டும் குடியமர்த்துவது குறித்து பேச்சு நடத்திய போதிலும் அது தொடர்பாக முடிவு ஏதும் எட்டப்படவில்லை.

**தாராளமாக நடமாட**

நாட்டில் வடகிழக்கு பகுதியில் மட்டும் அல்லாமல் அனைத்து பகுதிகளிலும் மக்கள் மட்டும் அல்லாமல் விடுதலை புலிகளையும் தாராளமாக நடமாட அனுமதிக்க வேண்டும் என்று புலிகள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

சோதனை சாவடிகளை அப்புறப்படுத்துவது உட்பட பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால் இந்த கோரிக்கையை அரசு முழுமையாக ஏற்று கொள்ளவில்லை.

**முஸ்லிம்கள்**

துதுகுழுவில் இடம் பெற்று இருக்கும் துறைமுகம் மற்றும் முஸ்லிம் விவகாரத்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறும்போது யாழ்ப்பாணத்தில் 1990 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் முஸ்லிம்கள் குடிபெயர்ந்து சென்று இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் அங்கு குடியமர்த்த வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

விடுதலைப்புலிகள் வைத்த கண்ணி வெடிகள் அனைத்தையும் அப்புறப்கடுத்தினால் மட்டுமே கண்டி- யாழ்ப்பாணம் இடையே பேருந்து போக்குவரத்தை தொடர முடியும் என அவர் கூறினார்.

**12 மணி நேரம்**

விடுதலை புலிகளுக்கும் அரசுக்கும் இடையே தாய்லாந்து நாட்டில் சட்டாகிப் நகரில் நடைபெற்ற முதல் கட்ட சமரச பேச்சு வார்த்தை 18-09-2002 அன்று பிற்பகல் முடிவடைந்தது . 3 நாட்களாக 12 மணி நேரம் இந்த பேச்சு வார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தை முடிந்ததும் நோர்வே வெளியுறவுத் துறை துணை அமைச்சர் விதார் கெல்கேசன் அமைச்சர் ஜி.எல்.பீரீஸ் விடுதலை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது அரசும் விடுதலைப்புலிகளும் கையெழுத்திடப்பட்ட கூட்டறிக்கை ஒன்றை நோர்வே அமைச்சர் ஹெசன் வெளியிட்டார். அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

தமிழர் பிரச்சனையில் தீர்வு ஏற்பட வேண்டும் என்று இருதரப்பினரும் ஆர் வம் காட்டினார்கள். போர் நிறுத்த ஒப்பந்தத்தை நீடிப் பதிலும் பரஸ்பர நம்பிக்கை யைவிரிவு படுத்திகொள்வதிலும் உறுதியுடன் இருக்கிறார்கள்.

**மேலும் 3 சுற்று பேச்சு**

தற்போது நடந்த பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் 3 சுற்று பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

2002ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி முதல் நவம்பர் 3ஆம் திகதி வரை இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தையும் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை 3 ஆவது சுற்று பேச்சு வார்த்தையும், 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை 4 ஆவது சுற்று பேச்சு வார்த்தையும் நடைபெறும்.

**கூட்டு நடவடிக்கை குழு**

ஒக்டோபர் 31ஆம் திகதி 2ஆவது சுற்று பேச்சு வார்த்தை தொடங்கும் முன்னதாக அரசு மற்றும் விடுதலை புலிகள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கை குழு உருவாக்கப்படும்.

நாட்டில் தமிழர்கள் வசிக்கும் வடக்கு -கிழக்கு பகுதிகளில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் அங்குள்ள தமிழர்களின் மறுவாழ்வு உரிமைக்கு ஏற்பாடு செய்யவும் இந்த கூட்டு நடவடிக்கை குழு நடவடிக்கை எடுக்கும். மறுவாழ்வு பணிகளுக்கான நிதி ஆதாரங்களையும் இந்தக் குழு ஆராயும் நாட்டில் போர் நிறுத்தம் தொடர்ந்து நீடிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு நோர்வே அமைச்சர் ஹெல்கேசன் கூறினார்.

விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் கூறியதாவது,

**விவாதிப்போம்**

தமிழர்கள் வசிக்கும் வடக்கு-கிழக்குப் பகுதி களில் இடைக்கால அரசு அமைப்பது குறித்தே முக் கியமாக விவாதிக்கப்பட்டது. என்றாலும் மனிதாபிமான அடிப்படையில் சீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப்பணிகளுக்கு முக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக அரசு அமைப்பதுதான் பேச்சு வார்த்தையின் இறுதித் தீர்வு என்பது தவறு. அதுதான் தமிழ் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றக் கொண்டு வரப்படும் முதல் நடவடிக்கை. தாயகம் என்ற ரீதியில் சுயாட்சியைப் பெறுவோம்.





(தொடரும்)

# அகதிகளை அந்தரிக்கவிடும் திட்டத்தில் மாற்றமேயில்லை

(கொழும்பு)

**தரையிறங்க அனுமதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளை, மீண்டும் அனைத்துலக கடற்பகுதிக்கு கொண்டு சென்று விடும் திட்டம் கைவிடப்படவில்லை என்று இந்தோனேசியா தெரிவித்துள்ளது.**



அவுஸ்திரேலியா நோக்கிச் செல்லும் வழியில். படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறினால், இந்தோனேசியாவில் தரைதட்டிய, அகதிகள் படகு கடந்த ஒரு வாரமாக கடலில் தத்தளித்து வந்தது. படகில் இருந்த அகதிகளை தரையிறங்க விடாது இந்தோனேசிய அதிகாரிகள் தடுத்து வந்தனர்.

அகதிகளை மீண்டும் அனைத்துலக கடற்பகுதிக்கு கொண்டு செல்லும் முடிவில் இருந்த இந்தோனேசியாவுக்கு அனைத்துலக அளவில் கண்டனங்கள் எழுந்தன. இதையடுத்து. படகில் இருந்த அகதிகளை தரையிறங்க இந்தோனேசியா நேற்று முன்தினம் அனுமதி அளித்தது.

இதையடுத்து படகில் இருந்த அகதிகள் தரையிறக்கப்பட்டு, கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை அதிகாரிகள் ஒளிப்படங்கள் எடுத்து, விபரங்களைப் பதிவு செய்துள்ளனர்.

எனினும், படகில் உள்ள அகதிகளை மீண்டும் அனைத்துலக கடற்பகுதிக்குக் கொண்டு சென்று விடுவதில், தாம் இன்னமும் உறுதியாக இருப்பதாக, இந்தோனேசியாவின் ஆச்சே மாகாண குடிவரவு அதிகாரியான அகமட் சமடான் தெரிவித்துள்ளார்.

“அவர்களுக்கு கரையில் தங்குமிடவசதி அளிக்கப்பட்டுள்ளது. அவர்களை கடலுக்கு அனுப்பி வைக்கும் எமது ஆரம்பத் திட்டம் இன்னமும் நடைமுறையில் உள்ளது. படகு முழுமையாகத் திருத்தப்பட்டதும் அது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்தப் படகு பழுதடைந்துள்ளதாகவும், தமக்குப் புதிய படகு தருமாறும் அகதிகள் கோரியிருந்தனர்.

“இந்தப் படகு நல்லதல்ல. இதில் சென்றால் நாம் மரணமடைய நேரிடும். தயவு செய்து எமக்கு உதவுங்கள்” என்று இந்தப் படகில் இருந்த 34 வயதுடைய பக்கி சரீன் என்பவர், படகிற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் ஜமீலிடம் கோரியிருந்தார். இவர் தனது மனைவி மற்றும் 18 மாதக் குழந்தையுடன் படகில் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

படகின் நிலை மோசமாக இருப்பதால், தாம் அச்சமடைந்துள்ளதாகவும், அகதிகளுக்கான ஐ.நா முகவரமைப்பின் உதவி தமக்குத் தேவை என்றும், படகில் இருந்த 22 வயதான ஆர்த்திகா என்ற பெண் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தோனேசியாவின் ஆச்சே மாகாண பொதுமக்களும் அதிகாரிகளும், இலங்கை அகதிகளுக்கு அங்கு இடமளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

மியன்மாரின் ரொஹிங்யா முஸ்லிம் அகதிகளுக்கு இந்தோனேசியா அடைக்கலம் அளித்து வருகின்ற போதிலும், இலங்கை அகதிகளை அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

இவர்கள் அவுஸ்திரேலியா நோக்கிச் செல்பவர்கள் என்பதால் அவர்களுக்கு இடமளிக்கத் தேவையில்லை என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கை அகதிகளையும், ரொஹிங்யா அகதிகளையும் ஒரே வகையில் கருத முடியாது என்று ஆச்சே மாகாண அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 756

சர்மி



சசிக்குமார்

லவ்வர பைக்கில கூட்டிட்டு பறக்குறது முக்கியமில்ல!!

எங்கையும் முட்டாம மோதாம கை கால் அடிபடாம கொண்டந்து விட்டிரணும்!!

என்னதான் இருந்தாலும் அடுத்த வீட்டுக்கு வாழப்போற பொண்ணல்ல!!

சந்திரன் சிந்து




மிதுசிகா




ரமேஸ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆனி மாத இராசிபலன்கள்

## 15.06.2016~15.07.2016

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



*எல்லோரையும் நட்பாக்கிக் கொள்ள விரும்பும் துலாம் ராசி அன்பர்களே!*

துாமுகி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் வலிமை இழந்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் புதனும் வலிமை இழந்திருக்கிறார். மேலும் செவ்வாய், சனி இரண்டும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார்கள். ஏழரைச் சனியில், பாதச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உங்களைப் பொறுத்தவரை சனி உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு நட்பு கிரகமாகும். எனவே, ஏழரைச் சனி காலம் உங்களுக்கு இனிய காலமாகவே அமையும். என்றாலும் முதல் சுற்றும், மூன்றாவது சுற்றும் நடப்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. இரண்டாவது சுற்று நடப்பவர்களுக்கு திரண்ட செல்வம் வரும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் உங்கள் சுய ஜாதகத்தை வைத்துப் பரிசீலனை செய்து கொள்ளுங்கள். மேலும் தனாதிபதி செவ்வாய் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். பொருளாதார நிலை நன்றாக இருக்க வேண்டுமானால், தனாதிபதி வக்ர இயக்கத்தில் இருக்கக்கூடாது. வக்ர நிவர்த்திக்குப் பிறகு பணவசதிகள் திருப்திகரமாக இருக்கும். எனவே ஜூன் 28ஆம திகதிக்கு மேல் சந்தோஷங்களை அதிகமாக சந்திப்பீர்கள்.

உத்தியோக ஸ்தானாதிபதி குரு வக்ர நிவர்த்தியானதால், உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். சக ஊழியர்கள் உங்களைப் பாராட்டுவார்கள். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துக்கள், அதிக விலைக்கு விற்று ஆதாயத்தைக் கொடுக்கும். கட்டிடப் பணியில் இருந்த தடை அகலும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலங்கள்!**

மாதத் தொடக்கத்தில் செவ்வாய், விருச்சிக ராசிக்குள் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதன் பிறகு ஜூன் 19ஆம் திகதி துலாம் ராசிக்குச் செல்கிறார். தன சப்தமாதிபதி ராசிக்குள் வரும பொழுது கல்யாண வாய்ப்புகள் கை கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். சேமிப்பின் ஒரு பகுதியை சொத்தாக மாற்ற

## மாதத்தின் பிற்பாதியில் மகிழ்ச்சி அதிகரிக்கும்!

முற்படுவீர்கள். ஜூன் 28ஆம திகதி செவ்வாய் வக்ர நிவர்த்தியாகிறார். அதன் பிறகு உங்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். மேலும் ஜூலை முதலாம் திகதி விருச்சிக ராசிக்குச் செவ்வாய் செல்லப் போகிறார். வக்ர நிவர்த்தியாகித் தன் சொந்த வீட்டில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது, அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். சிக்கல்கள் தீரும். அரசியலில் உள்ளவரகளுக்கு தக்க விதத்தில் பொறுப்புகள் அமையும்.




**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜூன் 20ஆம் திகதி மிதுனத்திற்கு புதன் வரப்போகிறார். பிறகு ஜூலை 6ஆம திகதி முதல் கடகத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இந்த இரண்டு பெயர்ச்சிகளும் உங்களுக்கு யோகம் தரும் பெயர்ச்சிதான். மிதுன புதனின் சஞ்சாரத்தின் பொழுது, தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். கடகத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது, வெளிநாட்டு பயணம் கூட எண்ணிய படி வாய்க்கும். புண்ணிய காரியங்களுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள்.

**சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

ஜூலை 8ஆம திகதி கடக ராசிக்குச் சுக்ரன் செல்கிறார். ராசிநாதன் 10இல் சஞ்சரிக்கும் பொழுது, எடுத்த காரிய த்தை எளிதில் செய்து முடிப்பீர்கள். தங்கம், வெள்ளி போன்ற விலை உய ர்ந்த பொருட்களை வாங்க நேரிடும். பெண் வழிப்பிரச்சினைகள் அகலும்.

இம்மாதம் வைரவர் வழிபாடு உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வளர்ச்சி கூடும் மாதம் இது. வரன்கள் வாசல் கதவைத் தட்டும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். உத்தியோக மாற்றங்களையும், ஊர் மாற்றங்களையும் எதிர்பார்த்திருப்பவர்களுக்கு அவர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறப்புகளின் வழியே வந்த பகை மாறும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக் கும். இடம், வீடு வாங்குவது சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. வாக்கு ஸ்தானத்தில் செவ்வாயும், சனியும் இணைந்திருப்பதால், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக் கொள்ளுங்கள். குழந்தைகள் படிப்பில் தேர்ச்சி பெற்று பாராட்டுகளைப் பெறுவர். நடராஜர் வழிபாடு நலம் சேர்க்கும்.



*எதையும் யோசித்தும், இறைவனைப் பூஜித்தும் காரியங்களைத் தொடங்கும் விருச்சிக ராசி அன்பர்களே!*

துர்முகி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சப்தமஸ்தானத்தில் புதனும், சுக்ரனும் பரிவர்த்தனை பெற்றுச் சஞ்சரிக்கிறார்கள். லாப ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், உங்கள் ராசியைப் பார்ப்பது யோகம்தான். தொழிலில் லாபம் திருப்திகரமாக இருக்கும். துணையாக இருக்கும் தோழர்களும், இணையாக இருக்கும் இல்லத்தினர்களும் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

தன பஞ்சமாதிபதியான குரு வக்ர நிவர்த்தியாகி விட்டார். எனவே இந்த மாதத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் தீர்ந்து, பஞ்சாயத்துக்கள் மூலம் நல்ல முடிவு ஏற்படும்.

பெற்ற பிள்ளைகள் கற்ற கல்வியால் பெருமை சேர்க்க, உற்ற விதத்தில் கல்வி நிறுவனங்களில் சேர்த்து விடுவீர்கள். வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். குரு பார்க்கும் 2,4,6 ஆகிய இடங்கள் புனிதமடைவதால், அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

அரைகுறையாக நின்ற பணிகள் அனைத்தும் துரிதமாக நடைபெறும். வெளியூரில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும், உத்தி யோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிக்கு தகவல்கள் வந்து சேரும். மேல் அதிகாரிக ளின் ஆதரவு கிடைத்து, நல்ல மாற்றத்தை காணப்போகிறீர்கள். அரசி யல் மற்றும் பொது நலத்தில் இருப்ப வர்களுக்கு உரிய அங்கீகாரமும், உயர் பதவிகளும் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகிறது.

ஜென்மச் சனிக்குப் பரிகாரமாக சனிக் கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபட்டு வருவதன் மூலம், ஆனந்த வாழ்க்கையை நிலையாக அமைத்துக் கொள்ள இயலும்.

## செவ்வாய் பலத்தால் செல்வாக்கு மேலோங்கும்!

**செவ்வாய் பெயர்ச்சி பலன்!**

உங்கள் ராசிநாதன் செவ்வாய் இம் மாதம் வக்ர நிவர்த்தியாவது யோகம்தான். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அக்கறை செலுத்திய காரியத்தில் ஆதாயம் கூடுதலாகக் கிடைக்கும். உங்கள் உடன் பிறப்புகள், பக்கபலமாக் இருந்து பணிக்கு ஒத்துழைப்பு கொடுப்பார் கள். இடம், பூமி வாங்குவதில் வெற்றி கிடைக்கும். ஒரு சிலருக்கு இல்லம் கட்டி குடியேறும் வாய்ப்பு ஏற்படும். ஜூன் 19ஆம் திகதி துலாம் ராசியில் செவ்வாய் வக்ரம் பெற்றாலும், விபரீத ராஜயோக அடிப்படை யில் நல்ல மாற்றங்களைக் காணலாம். புதிய வாகன சேர்க்கை உண்டு. ஜூன் 28ஆம் திகதி செவ்வாய் வக்ர நிவர்த்தி யாகிறார். அதன்பிறகு எடுத்த காரியங் களில் எளிதில் வெற்றி கிடைக்கும். தொழிலில் புதிய பங்கு




தாரர்கள் வந்தி ணைந்து பொருளாதாரத்தை பெருக்கிக் கொடுப்பர். ஜூலை முதலாம் திகதி செவ்வாய், விருச்சிக ராசியில் சஞ்சரிக்கப் போவதால் முனனேற்றப்பாதையில் அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜூன் 20ஆம் திகதி மிதுனத்திலும், ஜூலை 6ஆம் திகதி கடகத்திலும் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டம லாபாதிபதியான புதன் 9இல் சஞ்சரிக்கும் நேரம் உன்னதமான நேரமாகும். புதிய பாதை புலப் படும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அரசியல் பிரமுகர்களால் ஆதாயம் கிடைக் கும். உறவினர்கள் பகையை மறந்து உற்சாகத்தோடு செயற்படுவர். அஞ்சல் வழியில் அனுகூலமான தகவல் வந்துசேரும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூலை 8ஆம் திகதி கடக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். சப்தம விரயாதிபதி கடகத்தில் சஞ்சரிக்கும் பொழுது, கல்யாணக் கனவுகள் நனவாகும். கடை திறப்பு விழாக் கள், கட்டிடத் திறப்பு விழாக்களை நடத்த முடிவெடுப்பீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் தீரும். பிரகாச மான எதிர்காலத்திற்கு அஸ்தி வாரம் அமைத்துக் கொள்வீர்கள்.

இம்மாதம் ஆனைமுகப் பெருமான் வழிபாடு ஆனந்தம் வழங்கும். நடராஜர் வழிபாடு நன்மைகளைச் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

உங்களுக்கு வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும் மாதம் இது. பொன், பொருட்கள் வாங்கப்போட்ட திட்டம் நிறை வேறும். ஆரோக்கியத் தொல்லை. அகலும். சுபவிரயங்கள் அதிகரிக்கும் நேரம் என்பதால், சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கண வன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப் படும். குழந்தைகள் உங்கள் குணமறி ந்து நடந்து கொள்வர். செவ்வாய் வக்ர நிவர்த் தியாவதால் செல்வாக்கு மேலோங்கும். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். உத்தியோக த்தில் உள்ளவர்கள், உயர் அதிகாரிகளின் பாராட்டுக்கு ஆளாவார்கள். முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும். (தொடரும்)

# இலங்கை சுற்றுலா கல்வியகத்தின் 37ஆவது பட்டமளிப்பு விழா

நாட்டின் தேசிய சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ கல்வியகமான இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்துக்கான கல்வியகமானது (SLITHM), கடந்த 17ஆம் திகதி BMICH பிரதான மாநாட்டு மற்றும் கலைநிகழ்ச்சி அரங்கில் அதன் 37 ஆவது பட்டமளிப்பு விழாவினை முன்னெத்தது.

இதன்போது ஏறத்தாழ 100 மாணவர்களுக்கு பட்டம் அளிக்கப்பட்டது.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ கல்வியகமான இக்கல்வியகம் 1966ஆம் ஆண்டு முதல் விருந்தோம்பல் துறைக்கு தேவையான தொழில்முறை மனித வளங்களை விருத்தி செய்வதில் முதுகெலும்பாக செயற்பட்டு வருகிறது. SLITHM ஆனது அரசுக்குச் சொந்தமானதாகவும், சுற்றுலாத் துறை அபிவிருத்தி, கிறிஸ்தவ மத அலுவல்கள் மற்றும் காணி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டும் வருகிறது.

இந்த வருட பட்டமளிப்பு விழாவில் இக்கல்வியகத்தின் மூன்று மற்றும் நான்காண்டு கற்கை நெறியை பூர்த்தி செய்த தலைமைத்துவ மற்றும் கல்வி சாதனைகளை ஈட்டிய மாணவர்களுக்கு ஹோட்டல் மற்றும் உபசரிப்பு செயல்பாடுகளில் முகாமைத்துவ டிப்ளோமா வழங்கி கௌரவிக்கப்பட்டது.



சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான இலங்கை கல்வியகத்தின் தலைவர் சுனில் திசாநாயக்க கருத்து தெரிவிக்கையில்,

"SLITHM கல்வியகத்தின் 37 ஆவது பட்டமளிப்பு விழாவாக இது அமைந்துள்ளதுடன் வளர்ந்துவரும் சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் துறையில் எமது பட்டதாரிகள் உள்நாடு, பிராந்தியம் மற்றும் சர்வதேச ரீதியில் சிறப்பான தொழில்களை பெற்றுக்கொள்வதற்கான தகைமையை கொண்டுள்ளனர்". என்றார்.

"ஹோட்டல் மற்றும் உபசரிப்பு துறையில் திறன்மிக்க மனித சக்தியை விருத்தி செய்வதும், உபசரிப்பு துறையில் மக்கள் மத்தியில் மேம்படுத்தல்களையும் நாம் மேற்கொண்டு வருகிறோம். எமது Alumni சிரேஷ்ட முகாமைத்துவ ஸ்தானத்தில் இருப்போர்கள் நாட்டின் விருந்தோம்பல் துறைக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கி வருவதுடன், உபசரிப்பு கற்கைக்கான மிகச்சிறந்த கல்வியகமான எம்மை நிலைப்படுத்த வழிவகுத்துள்ளனர்" என்றார்.




# செலிங்கோ குடும்ப சவாரி டுபாய், சிங்கப்பூர் சுற்றுலா

ஆயுட் காப்புறுதி முன்னோடியான செலிங்கோ லைப் இன் குடும்ப சவாரி 9 ஊக்குவிப்புத் திட்டம் நிறைவடைய இருக்கும் இவ்வேளையில் காப்புறுதிதாரர்களும் அவர்களது குடும்பத்தினரும் சிங்கப்பூர், டுபாய் ஆகிய நாடுகளுக்கு அண்மையில் சுற்றுலாவுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

50 காப்புறுதிதாரர் குடும்பங்கள் இந்தப் பயணத்தின் போது செலவுகள் எதுவுமின்றி 3 நாட்கள் சிங்கப்பூரில் பல இடங்களை சுற்றிப் பார்த்தனர். செந்தோசா தீவில் கேபிள் கார் சவாரி, Madam நீரின் கீழான உலகம், டொலபினின் சாகசக் காட்சிகள், Wings of Time, நகர சுற்றுலா ஆகியவற்றுடன் சுற்றுலாப்பயணிகள் கடைத்தெருக்களில பொருட் கொள்வனவையும் செய்தனர்.

10 காப்புறுதிதாரர்களுக்கான 4 நாள் டுபாய் சுற்றுலாவின் போது உலகின் அதிஉயர் கட்டிடமான Burj Khalifa பார்வையிட்டதுடன் இராப்போசனத்துடன் Rustar Dhow Cruise விஜயம் பாலைவன Dubai Gold Souk விஜயம் ஆகியன இடம்பெற்றன.

5 காப்புறுதிதாரர் குடும்பங்கள் இந்த வருட மாபெரும் பரிசான ஜேர்மனிக்கு இம்மாதம் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவதோடு செலிங்கோ லைப இன் இவ்வருட குடும்ப சவாரி 9 நிறைவடையும். ஆயுட் காப்புறுதி வழங்கலை அதிகரித்து காப்புறுதிப் பத்திரங்களை ஒழுங்காக பேணுவோருக்கு பரிசுகளை அளித்து வரும் நிலை யில் செலிங்கோ லைப் இன் குடும்ப சவாரி ஊக்குவிப்புத் திட்டம் இலங்கை காப்புறுதித் துறையில் மிகப் பெரும் ஊக்குவிப்புத் திட்டமாக கருதப்படுகிறது.

இந்த வருட குடும்ப சவாரித் திட்டத்தில் செலிங்கோ லைப் இலிருந்து மொத்தம் 2,260 பேர் வெளிநாட்டு சுற்றுப் பயணங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இன்றுவரை இத்திட்டத்தினால் மொத்தம் 17,000 பேருக்கும் அதிகமானோர் அனுகூலம் பெற்றுள்ளனர்.

இலங்கையின் ஆயுட் காப்புறுதித் துறையில் 2004-ம் ஆண்டிலிருந்து சந்தை முன்னோடியாக விளங்கி வரும் செலிங்கோ லைப் ஒழுங்கு முறையாக பேணப்பட்டு வரும் சுமார ஒரு மில்லியன் ஆயுட் காப்புறுதிகளை வழங்கியுள்ளது.







# கார் இறக்குமதிக்கு கட்டுப்பாடு!



இலங்கை, புதிய கார்களை இறக்குமதி செய்ய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. எஸ்யூவி ரக கார்களுக்கு அதிக இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது.

1,300 சிசி திறனுக்குக் கீழான கார்களுக்கான இறக்குமதி வரியைக் குறைத்துள்ள அரசு, 1,500 சிசிக்கு அதிகமான கார்களுக்கான வரியை 2 மடங்காக உயர்த்தி யுள்ளது.

சாலை வசதிகள் மேம்படுத்தப்படும் வரை கார்களுக்கு கூடுதலாக இறக்குமதி வரி விதிக்கத் திட்டமிட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

காரில் பயணம் மேற்கொண்டால் வாகன நெரிசல் காரணமாக மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. சாலை வசதிகள் மேம்படுத்தும் வரை புதிய கார்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனால் இறக்குமதி வரி 2 மடங்காக உயர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2014-ம் ஆண்டு இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 45,000 ஆகும். 2015-ம் ஆண்டில் இது இரு மடங்காக உயர்ந்து 90,100-ஐத் தொட்டுள்ளது. இறக்குமதி வரியை அதிகரிப்பதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான கார்களின் வரத்து குறையும் என்று அரசு நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெரிய வாகனங்களுக்கு (எஸ்யூவி) வரியை 2 மடங்காக உயர்த்தியுள்ளதால் அத்தகைய கார்கள் இறக்குமதி செய்வது குறையும். அதேசமயம் சிறிய ரகக் கார்களுக்கான வரி குறைக்கப்பட்டுள்ளதால் அரசுக்கு கணிசமான வருவாய் கிடைக்கும் என அரசாங்கம் நம்புகிறது.

இலங்கை அரசின் கட்டுப்பாடு கார் உற்பத்தி நிறுவனங்களுக்கு சற்று பாதகமாக அமைந்துள்ளது. அதேசமயம் 1300 சிசி-க்கு குறைவான சிறிய ரகக் கார்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு இது சாதகமாகும்.

ஆட்டோக்களுக்கான இறக்குமதி வரியையும் இலங்கை அரசு உயர்த்தியுள்ளதால் ஆட்டோ இறக்குமதியும் பாதிக்கப்படும்.?

# முகநூல்: சில வியத்தகு தகவல்கள்

மனிதனின் உற்ற நண்பனாக தற்போது பேஸ்புக் எனும் முகநூல் மாறிவிட்டது. சந்தோஷம், துக்கம், கருத்து, விமர்சனம் என அனைத்தையும் வெளிப்படுத்தும் விதமாக பேஸ்புக் இன்று உலக மக்களிடையே மாறிவிட்டது.




சொல்லப்போனால் ஒரு சமூக புரட்சியை பேஸ்புக் செய்துள்ளது எனக் கூறலாம். முடங்கி கிடந்த ஒரு சமூகத்தை பொதுத் தளத்திற்கு கொண்டு வந்ததில் பேஸ்புக்கின் பங்கு மிகப் பெரியது.

சின்னதாக ஒரு கல்லூரிக்குள் ஆரம்பிக்கப்பட்ட சமூக வலைதளம் இன்று தகவல் தொழில்நுட்பத்தில் அடுத்தக் கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத்தில் புரட்சியை ஏற்படுத்திய பேஸ்புக் பற்றிய சில தகவல்கள்

2003-ம் ஆண்டு

மார்க் ஜுகர்பெர்க் ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தபோது பேஸ்மாஸ்என்று அழைக்கப்பட்ட பேஸ்புக் இணையதளத்தை உருவாக்கினார்.

காப்புரிமை, தனிநபர் சுதந்திரம் ஆகியவற்றில் தலையிடுவதாக இந்த தளத்தினை ஹார்வேர்டு பல்கலைக்கழக நிர்வாகம் மூடியது. மேலும் ஜுகர்பெர்க் மீது நடவடிக்கை எடுத்தது.

2004-ம் ஆண்டு

பெப்ரவரி 4-ம் தேதி ஹதி பேஸ்புக்' என்ற வலைதளத்தை தொடங்கினார். தொடங்கப்பட்ட 24 மணி நேரத்தில் 1,500 பயனாளிகள் உறுப்பினராக இணைந்தனர்.

2006-ம் ஆண்டு

13 வயதுக்கு மேல் உள்ள அனைதது நபர்களும் பேஸ்புக்கில் உறுப்பினராகலாம் என்று நிறுவனம அறிவித்தது.

2012-ம் ஆண்டு

மே மாதம் பொதுப் பங்கு வெளியீட்டினை பேஸ்புக் மேற்கொண்டது. இதன் மூலம் 1,600 கோடி டொலர் திரட்டியது.

பேஸ்புக்கின் முகப்பு பக்கத்தில் முதன் முதலில் வைக்கப்பட்ட படம் அல்பாஸினோ. இவர் ஹாலிவுட் நடிகர்.

2014-ம் ஆண்டு வாட்ஸ் அப் அப்ளிகேஷனை 22 பில்லியன் டொலர் மதிப்புக்கு பேஸ்புக்நிறுவனம்வாங்கியது.

சமீபத்தில் மார்க் ஜுகர்பெர்க் அறிவித்த அறிவிப்பு ஒன்று எல்லோரையும் ஆச்சரியப்படுத்தியது. மார்க் ஜுகர்பெர்க் பேஸ்புக்கின் 99 சதவீத பங்குகளை தனது தொண்டு நிறுவனத்திற்கு அளித்துவிட்டார். இதன் மதிப்பு 45 பில்லியன் டொலர்.

மார்ச் 31ம் தேதி வரை பேஸ்புக் கணக்கு வைத்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 165 கோடி

# 2016-ம் ஆண்டு மார்ச் 31 தேதி வரை பேஸ்புக் நிறுவனத்தில் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 13,598

# ஒவ்வொரு நொடிக்கும் ஐந்து புதிய பேஸ்புக் கணக்குகள் தொடங்கப்படுகின்றன.

#2015-ம் ஆண்டு நிலவரப்படி பேஸ்புக் நிறுவனத்தின் மொத்த வருமானம்1,792.8 கோடி டொலர், நிகர வருமானம் 368.8 கோடி டொலர்.

# பேஸ்புக் நிறுவனத்தின் மொத்த சொத்துமதிப்பு 4,940.7 கோடி டொலர்

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,530.50 | 6,465.99 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,423.82 | 3,402.21 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,443.877 |

**உயர்வைக் காட்டிய பங்குகள்(ரூ.)** ரன்கிறின்(71.00), லைற்ஹவுஸ் ஹோட்டல்(59.50), சிகிரியா விலேஜ்(73.00), மொரிசன்(379.80), களனி வேலி(61.80).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** செவரோன்(165.00), சிலோன் பிறின்டேர்ஸ்(90.50), மிலேனியம் ஹவுஸ்(7.00), சிரஸ் ஹிக்கடுவ(14.40), நேசன் லங்கா(1.40).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 142.87 | 146.61 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.96 | 210.21 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.88 | 166.28 |
| சுவிஸ் பிராங் | 147.08 | 153.27 |
| கனேடிய டொலர் | 109.84 | 114.43 |
| அவுஸ்திரேலிய டொலர் | 104.60 | 109.52 |
| சிங்கப்பூர் டொலர் | 105.46 | 109.56 |
| ஜப்பான் யென் | 1.35 | 1.41 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.14 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.36 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

## 187 தூக்குத்தூக்கியில் சிவாஜியின் ஜனரஞ்சக நடிப்பு

நான் படைத்த மனோகரன் பாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார் சிவாஜி கணேசன் என்று கண்களில் நீர் கசியப் பாராட்டினார்.

தமிழ் மொழிக்கு எவ்வளவு சக்தி உண்டு என்பதை வசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன என்று கல்கிப் புகழ்ந்தார்.

பராசக்திக்குப்பின்னர் சிவாஜி நடித்த மகத்தான படமான மனோகரா பல ஊர்களில் வெள்ளி விழா கொண்டாடியது.

1954 ஆம் ஆண்டில் மனோகரா தவிர இல்லற ஜோதி, அந்த நாள், கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி, துளி விஷம், கூண்டுக்கிளி, துக்குத் துக்கி, எதிர்பாராதது ஆகிய படங்கள் வெளிவந்தன.

இவற்றில் தூக்குத்தூக்கி வெற்றிகரமாக ஓடிய ஜனரஞ்சகமான படம். கொண்டு வந்தால், சகோதரி, கொலையும் செய்வாள் பத்தினி, உயிர் காப்பான் தோழன் என்ற பொன் மொழிகளை உண்மை என்று நிருபிக்கும் வகையில் எழுதப்பட்ட கதை.



மனோகராவைப் போலவே இக்கதையும் எல்லா நாடகக் கம்பனிகளும் நாடகமாக நடித்து வந்தன.

**புதிய பரிணாமம்**

நவரசங்களும் கலந்த ஜனரஞ்சகமான படங்களிலும் தன்னால் நடிக்க முடியும் என்பதை சிவாஜி இப்படத்தில் நிரூபித்தார்.

இப்படத்தில் லலிதா, பத்மினி, ராகினி ஆகியோர் சிவாஜியுடன் நடித்தனர். முக்கியமான வேடத்தில் (லலிதாவை மயக்கும் சேட்ஜி) டி.எஸ்.பாலையா நடித்தார்.

இது அருணா பிலிம்ஸ் தயாரிப்பு. வசனத்தை ஏ.கிருஷ்ணசாமி, வி.என்.சம்பந்தம் ஆகியோர் நகைச்சுவை கலந்து எழுதினார்கள். பாடல்களை மருதகாசி, உடுமலை நாராயணகவி, தஞ்சை ராமையாதாஸ் ஆகியோர் எழுத ஜி.ராமநாதன் இசையமைத்தார். ஒலிப்பதிவையும் டைரக்ஷனையும் ஆர்.என்.கிருஷ்ணசாமி கவனித்தார்.

அரச குமாரனாகத் தோன்றும் சிவாஜி பல மாறு வேடங்கள் போட்டு பிரமாதமாக நடித்தார்.

குறிப்பாக குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்ற பாடலை பத்மினி, ராகினியுடன் சேர்ந்து அவர்களுக்கு இணையாக ஆடினார். பாட்டும் நடனமும் ரசிகர்களின் கைதட்டலைப் பெற்றன.

அபாய அறிவிப்பு, வாத்தியார் ஐயா! என்ற பாடலை வாத்தியாராக நடிக்கும் ஜதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளையிடம் சிவாஜி பாடுவார். இந்த ஜதார்த்தம் பொன்னுசாமியின் நாடக சபாவில்தான் சிவாஜி முதல் முதலாக சேர்ந்து நடிப்புப் பயிற்சி பெற்றார்.

**டி.எம்.சவுந்தரராஜன்**

இப்படத்தில் சிவாஜி கணேசனுக்கான பாடல்கள் அனைத்தையும் டி.எம்.சவுந்தரராஜன் பாடினார். சிவாஜிக்கு அவர் குரல் வெகுவாக பொருந்தியது.

இந்தப் படத்திற்குப் பிறகு தான் சிவாஜிக்காக டி.எம்.எஸ்.தொடர்ந்து பாடலானார்.

பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த தூக்கு தூக்கி பொருளாதார ரீதியில் பெரிய வெற்றிப்படமாக அமைந்தது.

(தொடரும்)

# தமிழ் மக்களுக்கு சர்வதேசம் நீதி பெற்றுத்தரப்போவதில்லை

2009 ஆம் ஆண்டின் பின்னர் ஒவ்வொரு ஆறு மாதங்களிலும் இலங்கையில் அடிக்கடி உச்சரிக்கப்படும் சொல்லாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை காணப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த சொல் உச்சரிக்கும் அளவு குறைந்துள்ளது. இலங்கை தொடர்பில் ஐ.நா கொண்டுள்ள நிலைப்பாடு ஆட்சி மாற்றத்துடன் மாறியுள்ளமையே இந்த நிலைமைக்கு பிரதான காரணம் என கூறலாம்.

இவ்வாறான பின்னணியில் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் 32 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகி உள்ளது. ஜூலை முதலாம் திகதி வரை நடைபெற இருக்கும் இந்த அமர்வில் இலங்கை விவகாரம் குறித்து பெரிதாக விவாதிக்கப்படாது என்ற போதிலும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செய்யத்அல்ஹுசைன் கடந்த பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்போது ஐ.நா பிரேரணையை நிறைவேற்றும் விடயத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து திரட்டிய விடயங்கள் தொடர்பான வாய் மூல அறிக்கை ஒன்றை முன்வைப்பார். அதே சமயம் இலங்கை அரசாங்கமும் தமது தரப்பில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை விளக்கும் வகையில் வாய் மூல அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும். இதனை விட அண்மித்த காலப்பகுதியில் இலங்கைக்கு வந்து சென்றிருந்த ஐ.நாவின் விசேட அறிக்கையாளர்களின் கருத்துக்களும் இங்கு முன்வைக்கப்படலாம். இதற்கு அப்பால் இலங்கை விவகாரம் இம் முறை ஐ.நா அமர்வுகளில் பெரிதாக எடுத்துக்கொள்ளப் போவதில்லை. கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அல்ஹுசைன் இடை மாற்றுக்கால நீதியை நிலைநாட்டுவது தொடர்பில் இலங்கை வழங்கிய உறுதிமொழியை நடை முறைப்படுத்தும் போது சகல இலங்கையரும் உள்ளடக்கப்படுவதுடன் அவர்களின் அர்த்தமுள்ள பங்களிப்புத் தொடர்பில் வலியுறுத்தியிருந்தார். 30/1 பிரேரணையில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை அமுல்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளில் இடைமாற்ற கால நீதி தொடர்பில் விரிவான திட்டம் ஒன்று தேவையாகவுள்ளது எனவும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இது வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

2015 ஆட்சி மாற்றத்தை தொடர்ந்ததான இலங்கை பற்றிய சர்வதேசத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் தென்படுகின்றபோதும் இலங்கையின் அனுசரணையுடன் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய பொறுப்புக் கூறல் செயற்பாடுகளை வழங்கிய உறுதிமொழிக்கு அமைய அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்பதில் சர்வதேசம் ஓரளவு பற்றுறுதியுடன் இருப்பது போலதான் தெரிகிறது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இவ்வாறு கூறியிருக்கும் நிலையில் இலங்கையில் பொறுப்புக் கூறல்செயற்பாடுகள் மதிக்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருப்பதாக தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் நிஷாபிஸ்வால் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் பொறுப்புக் கூறல் செயற்பாடுகள் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றுக்கு உரிய மதிப்பு அளிக்கப்படவேண்டும். இலங்கை அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகள் சிலவற்றை எடுத்துள்ள போதும் மேலும் பல நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது என்பது அவரது கருத்தாக காணப்படுகிறது.

> **எந்தவொரு நாடும் தமது சொந்த நலனுக்கும் அப்பால் சென்று மற்றொரு நாட்டுக்கு உதவப்போவதில்லை என்பது அரசியலில் எழுதப்படாத விதியாக உள்ளது.**

அமரிக்கா உதட்டளவில் இது போன்ற கருத்துக்களை கூறினாலும் இலங்கை விவகாரத்தில் கடந்த காலங்களில் காட்டி வந்த இறுக்கமான நிலைப்பாட்டை தளர்தி உள்ளமை தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. பொறுப்புக் கூறல் செயற்பாட்டில் கலப்பு நீதிமன்றம் இருக்க வேண்டும் என்ற ஆரம்ப நிலைப்பாடு பின்னர் விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் விசாரணையாளர்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதாக குறைந்தது. அந்த நிலைப்பாடும் மாற்றப்பட்ட தேசிய பொறிமுறையில் முன்னெடுக்கப்படும் விசாரணையில் சர்வதேசத்தின் தொழிநுட்ப உதவி என்ற அளவில் வந்துள்ளது. சர்வதேசத்தில் இந்த நிலைப்பாடு மாற்றமானது தமக்கு சாதகமாக அமைந்திருக்கும். அரசாங்கத்தை காப்பாற்றுவதற்கு ஏதுவாகி உள்ளது என்றே எண்ணத்தோன்னியுள்ளது. குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ நிர்வாகம் சீனாவுடன் பேணி வந்த நெருக்கம் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேலைத்தேய நாடுகளின் நிலைப்பாடுகளுடன் ஒத்துப் போகாமல் உள்ள காரணங்களில் அந்த நிர்வாகத்தை மாற்றி தமக்கு சாதகமான ஆட்சியாளரைக் கொண்டு வரவேண்டும் என்பதில் அமெரிக்கா மிகவும் தெளிவாக உள்ளது. இலங்கையின் சீன சார்பு கொள்கையால் விரக்தியுற்றிருந்த அயல் நாடான இந்தியாவையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு ஆட்சி மாற்றம் ஒன்றுக்கான வேலையை அமெரிக்கா முன்னெடுத்துள்ளது. இவ்வாறு தமது ஒத்துழைப்புடன் வந்த அரசாங்கத் துடன் ஐ.நா மனித உரிமை பேரவையிலும் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு அமெரிக்காவுக்கு இருந்தது. இதனாலேயே இலங்கை பற்றி கடும் போக்கான பார்வையைத் தகர்த்தி மைத்திரி-ரணில் அரசா ங்கத்தின் அனுசரணையுடனேயே பிரேரணை ஒன்றையும் நிறை வேற்றியிருந்தது.

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கை பற்றிய கடும் நிலைப்பாட்டை தளர்த்தி மெத்தனப்போக்கொன்றை கடைப்பிடிப்பது தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் அமைந்திருப்பதாகவே கொள்ள முடியும். இருந்தாலும் சர்வதேசம் நீதியைப் பெற்றுக்கொடுக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை ஒன்று தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மக்களின் இந்த நம்பிக்கை நிறைவேறுமா? இல்லையா? என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். எனினும் எந்தவொரு நாடும் தமது சொந்த நலனுக்கும் அப்பால் சென்று மற்றொரு நாட்டுக்கு உதவப் போவது என்பது அரசியலில் எழுதப்படாத விதியாக உள்ளது. இவ்வாறான நிலையில் ஈழத்தமிழர் விவகாரத்தில் மாத்திரம் சர்வதேசம் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களை கைவிட்டுத் தமிழர்களுக்குத் தீர்வைப்பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. மறுபக்கத்தில் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என கூறிக்கொள்ளும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் கால கட்டங்களில் நீதிப்பொறிமுறை, சர்வதேச விசாரணை என்ற கருத்துக்களை வலுத்துக்கூறத் தொட ங்குவது, சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்கப் போகிறோம் என கூறிக் கொண்டு ஜெனிவா நோக்கி செல்வது என்பது கடந்த காலங் களில் நாம் பார்த்து வரும் விடயங்களாகும்.

32ஆவது ஐ.நா மனித உரிமை பேரவை அமர்வுகள் ஆரம்பிக்கப் பட்ட நிலையில் வழமையான பாணியை கூட்டமைப்பினர் தொடங்கியுள்ளனர். கூட்டமைப்பின் இவ்வாறான நடவடிக்கைகள் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு எந்தளவு தாக்கம் செலுத்தும் என்பது கேள்விக் குறியே.

**பிரசாத்**

உங்களுக்கு சரியான ஆலோசனை வழங்கக் கூடிய மனிதர் யார் இருக்கிறார்?
அவர் நீங்களேதான்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்தியப் பிரதமர் மோடிக்கு முதல்வர் விக்கியின் தத்துவ உபதேசம்

சின்முத்திரை என்றொரு குறியீட்டு உபதேசம் இந்து சமயத்தில் உண்டு. குறியீட்டு மொழிகளே மிகப்பெரும் தத்துவங்களாக–தத்துவ சாரங்களாக இருந்து வந்துள்ளன.

சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமரர் என்ற நான்கு முனிவருக்கும் சிவபெருமான் கல்லால் மர நிழலின் கீழ் இருந்து ஞான உபதேசம் செய்கிறார்.

உபதேசம் என்பதால் சிவபெருமான் தெட்சணாமூர்த்தி வடிவத்தை தாங்கிக் கொள்கிறார். உபதேசம் சின்முத்திரையாகவே இருக்கின்றன. ஆக, சின்முத்திரைகள் மிகப் பெரும் தத்துவத்தைத் தருவன. ஆடலரசனாகிய நடராசப் பெருமானின் திருநடனம் குறியீட்டு வழி பொருள் உணர்த்துவதாகும்.

ஆக, மனித மொழிகளில் உலகம் முழுவதையும் இணைக்கக் கூடியது குறியீட்டு மொழி.

குறியீட்டு மொழியின் உணர்தன்மை எல்லோருக்கும் பொருத்துடையதன்று. சின்முத்திரைகளை புரிந்து கொள்ளாதவர்கள் குறியீட்டு மொழிகளை புரிதலில் இடர் படுவர்.

எதுவாயினும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மிகச் சிறந்த இறை பக்தி உடையவர். நவராத்திரி காலத்தின் போது அமெரிக்கா சென்ற அவர், வெறும் பச்சைத் தண்ணி தவிர்ந்த வேறு எதையும் உண்டிலர். அந்தளவிற்கு கடும் விரதம் அனுஷ்டித்தவர்.

எனவே அவருக்கு சின்முத்திரை நன்கு புரியும் – அதன்வழியான தத்துவங்களும் நன்கு விளங்கும்.

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கின் மீள் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்கேற்றிருந்தார். இந்திய அரசின் நிதி உதவியில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு புனரமைப்புச் செய்யப்பட்டதால் இந் நிகழ்வுகள் யாவற்றையும் இந்தியப் பிரதமர் மோடி தன் அலுவலகத்தில் இருந்தவாறு காணொலி மூலம் கண்டு கொண்டிருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் அரங்கேறிய வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கால் இடறி தடக்கி கீழே விழுகின்ற நிலைமைக்குச் சென்றிருந்தார்.

முதலமைச்சரின் இந்த நிலைமை அங்கிருந்த ஜனாதிபதி உள்ளிட்ட பலரையும் பதற்றமுறச் செய்தது.

இருந்தும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கால் இடறல் இந்தியப் பிரதமருக்கு மிகப் பெரியதொரு தத்துவத்தை குறியீட்டு மொழியாக உணர்த்துவதாகும்.

அதாவது இந்தியாவை நம்புங்கள் என்று முன்பு நீங்கள் சொன்னீர்களே! உங்கள் வார்த்தைக்கு என்னவாயிற்று? தமிழன் பிடிமானம் இல்லாததால் கால் இடறி விழவேண்டியதாயிற்றுப் பார்த்தீர்களா?

காணொலியில் இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் நீங்கள் எப்படி நாங்கள் விழாமல் பிடிக்கமுடியும்.

இங்கு நடப்பதை நேரில் வந்து பார்க்க வேண்டும். காணொலி பிடிப்பதைத்தான் காட்டும். நான் மேடையில் தடக்கி விழுவதால் தமிழனின் நிலைமை தற்செயலாக உங்களுக்குத் தெரிகிறதே தவிர எம் இனம் வீழ்ந்தது பற்றி நீங்கள் முழுமையாக அறியவில்லை.

ஆகையால் எந்தப் பிடிமானமும் இல்லாத ஈழத் தமிழனுக்கு விளையாட்டரங்கிலும் விழுகை தான் முடிவு.

எனவே, முதலில் உரிமையைப் பெற்றுத் தாருங்கள். அதன் பின் இந்த அரங்கில் தமிழன் விழாமல் விளையாடுவான் என்பதை உணருங்கள் என்ற தத்துவத்தை பிரதமர் மோடிக்கு உணர்த்துவதே வடக்கு முதல்வரின் கால் இடறலாகும் என்று உணர்க.

### வேண்டும் வரம் தந்திடுவாள்



பொன்னிகரும் நெல் விளையும்
சென்னியூரின் குண திசையில்
அலை கடலினிசை மகிழ்ந்து
ஆலயம் கொண்டமர்ந்தருளும்
மாதரசி கண்ணகியாள் பொங்கலன்று
மலர்க்கழல்கள் தேடிவர
வேண்டும்வரம் தந்திடுவாள்–எம்
வேதனைத் தீ அணைத்திடுவாள்

சிரபுரத்தான்
மண்டைதீவு–01

## இந்தியப் பிரஜைகள் நால்வர் கைதாகினர்

சட்டவிரோதமாக தங்கியிருந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் இந்திய பிரஜைகள் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்த இவர்கள், கடந்த சில காலமாக இலங்கையின் பல பாகங்களிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந் துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ–5)

## விழுமியங்கள் பற்றிய விவாத போட்டிக்கான கருத்துகள்-02 ஒற்றுமையை நிலைநாட்டல்

அடிப்படையில் நாம் யார் என்ற உண்மையை மறந்து வாழ்வதாலேயே பிறரும் நம்மை விட வேறுபட்டவர்கள் என்ற மாயத்தோற்றத்தை நமக்கிடையே ஒரு தடுப்புச் சுவராக எழுப்பிக் கொள்கிறோம். அதன் விளைவாக, வெளிப்படையின் வேறுபாடுகள் நமது மனக்கண்ணை உறுத்துகின்றன.

இனத்தாலும், நிறத்தாலும், மதத்தாலும், மொழியாலும் நாம் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் ஒரே மரத்தில் தோன்றிய இலைகளும் கிளைகளும் மலர்களும் அல்லவா? எவ்வளவுக்கு நான் யார் என்ற சரியான புரிந்துணர்வு நமக்கு ஏற்படுகிறதோ அவ்வளவுக்கு நம்மால் பிறரையும் அவர்களாகவே ஏற்றுக் கொள்ள முடியும். நாம் உயிர் வாழும் சரீரங்களும் பிரதேசங்களும் வேறுபட்டிருந்தாலும், நம் அனைவருடைய மூலமும் ஒன்று தான். அவ்வகையில் உலகம் முழுவதுமே ஒரே குடும்பம். நாம் அனைவரும் இறைவனுடைய குழந்தைகள், சகோதரர்கள்.

நம் அனைவருடைய தந்தையும் இறைவன் ஒருவனே என்ற உணர்வு நமக்கிடையே உள்ள பல பிளவுகளை அடைக்கிறது. ஒரு குடும்பத்து சகோதரர்களுக்கிடையிலே எத்தனை மனக்கசப்புகள் இருந்தாலும், குடும்ப ஒற்றுமையின் நிமித்தம் அவற்றை எப்படியாவது தீர்த்துக் கொள்ளவே பார்ப்பார்கள். அதில் பெற்றோருடைய பங்கே அதிகமாக இருக்கும். சகோதரர்களை இணைக்கும் பாலமாக பெற்றோரே இருப்பார்கள். இன்றைய உலகத்திலும் இத்தனை பிளவுகள், யுத்தங்கள், பிரிவினை வாதங்கள் அனைத்தையும் இல்லாதொழித்து ஒற்றுமையை ஓங்கச் செய்ய நம்மைப் பெற்றவரால், படைத்தவராலேயே சாத்தியம்.


நம்மை நாம் உணரும் போது, இறைவனை உணர முடியும். இறைவனை உணரும் போது என்னால் எனது சகோதரர்களை உணர முடியும். உலகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு ஓர் மிகச் சிறந்த வழியாக இப் புரிந்துணர்வு விளங்குகிறது.

சுகதாமம் (கலட்டிச் சந்திக்கு அருகே பிறவுண வீதியில்) மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம் பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிக்கு மாணவர்கள் தம்மைத் தயார் செய்யும் பொருட்டு இக்கருத்துகள் பிரசுரிக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 077 261 2088, 077 221 5102 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்புமற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை மணிவரை யாழ் பிரதேசத்தில் வெள்ளாம் போக்கட்டி, கச்சாய் தெற்கு, பாலாவி, கெற்பலி, அல்லாரை, நவிண்டில் VC, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை, நாவலடி உடுப்பிட்டி, வன்னிச்சி கோவிலடி, பழைய பொலிஸ் நிலையம், VVT, தொண்டைமானாறு, கெருடாவில், மயிலியதனை, கெருடாவில், சிதம்பரா, வல்லை வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தோணிக்கல் சிவன் கோவில், பெரிய உளுக்குளம் ஆகிய பிரதேசங் களிலும் மின் தடைப்படும். (இ–9)

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



இன்று தீர்த்தத் திருவிழா (20.06.2016)

தீர்த்தமாடிவரும் எங்கள் ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகரே
தீர்த்திடுவீர் எங்கள் தீவினைகள் எல்லாமே
பார்த்திடுவீர் கடைக்கண்ணால் பக்தர்குறை போக்கிடவே
பார்த்திருப்போம் உமது பார்போற்றும் அழகினையே
வேர்த்து விறுவிறுக்கும் எங்கள் வேதனை போக்கிடையா
நேர்த்திகள் பலவைத்து உம்மை கும்பிட்டோம் கணபதியே
திருவீதி வலம் வந்தே திருக்கோலம் காட்டுமையா
பணிந்தோம் உன்பாதம் ஞானம் முதல்வனே சரணம் சரணம்

த.தவப்பிரியா

## அனுர சேனநாயக்க ஒப்புதல் வாக்குமூலம்!

(கொழும்பு)

மேல்மாகாண முன்னாள பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை அளிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் நீதிமன்றில் அனுர சேனநாயக்க வாக்குமூலம் ஒன்றை அளிக்க உள்ளார்.

அடுத்த வழக்கு விசாரணைகளின் போது இவ்வாறு விசேட வாக்கு மூலம் ஒன்றை அவர் அளிப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த மே மாதம் 23ம் திகதி அனுர சேனநாயக்கவை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் பிணை கோரி தாக்கல் செய்த அவரது மனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் நாரஹேன்பிட்டி குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க ஏற்கெனவே இவ்வாறான வாக்குமூலமொன்றை நீதவான் முன்னிலையில் அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ–12)

## தீ மிதிப்பும் தீர்த்தோற்சவமும்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீநாக கன்னி அம்பாள் ஆலய மஹோற்சவத்தின் நிறைவு நாளான இன்று திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு அபிஷேக பூசை நடைபெற்று 11 மணிக்கு சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன், சைவப் புரவலர் க.நித்தியதசீதரன் ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம் பெறும்.

தொடர்ந்து தீ மிதிப்பும் தீர்த்தோற்சவமும் நடைபெற்று 2 மணியளவில் கொடியிறக்க வைபவம் இடம்பெறவுள்ளது. (செ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### இறைவனின் கருவி



இறைவனுடைய எந்திரமாகவே இருக்கக்கூடிய மனிதனிடம்–இறைவ னுடைய கருவியாகவே இருக்கக் கூடிய மனிதனிடம் - முழுமையாக ஆறாவது அறிவு வந்து விட்டதால், இறைவனோடேயே கலக்க் கூடிய அளவுக்கு மனிதனிடம் ஆற்றல் இருப் பது தெரியவரும். அந்த ஆற்றலைக் கொஞ்சம் வளர்த்துக் கொண்டால் போதும். நீங்கள் இனிமேல் இறைவனிடம் போய் எதுவும் தனியாகக் கேட்க வேண்டியது இல்லை. உங்களுடைய மனத்தின் அடித்தளத்தில் இறைவனே அமர்ந்திருக்கின்றான். அதைத் தெரிந்து கொள்ளாதது தான் உங்களுடைய தவறு. அந்தத் தவறு தான் அவனை மறைத்துக் கொண்டு இருக்கிறது.

சும்மா ஒரு தட்டு தட்டிவிட்டால் போதும் உங்கள் அறிவு பிரகாசிக்க ஆரம்பித்து விடும். அப்படித் தட்டிவிடும் வேலை தான், “நான் என்ன செய்ய வேண்டும்? என்னிடம் என்ன இருக்கிறது? அதை எந்த அளவு வேண்டுமோ அந்த அளவு எப்படிப் பெருக்கிக் கொள்ள முடியும்?“ என்ற ஊக்கம்.

ஒரு குடும்பமானாலும் சரி, தனி மனிதன் ஆனாலும் சரி அல்லது சமுதாயம் ஆனாலும் சரி, எல்லோருமே ஆக்கத் துறையில் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்க முடியும். இந்தத் தத்துவம் விஞ்ஞானத்திற்கு ஒத்தது. இந்த எனது விளக்கம் உளவியல் தத்துவத்திற்கும் சரி அல்லது வாழ்க்கைக்கும் சரி, எதற்கும் முரண்படாது. உலகத்திலே இதுவரைக்கும் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய எந்த மதத்திற்கும் அது முரண்பாடானது ஆகாது.

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித் துறை நெற்கொழு கழுகுகள் விளை யாட்டுக்கழகம் நடத்தும் வடமா காண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மயிலங்காடு ஞானகலா விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து மன் னார் அந்தோனியார்புரம் விளை யாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.உதை பந்தாட்ட லீக் அனுமதியுடன் நடத் தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் திருக்குமரன் விளையாட்டுக்கழக த்தை எதிர்த்து எல்லாளன் விளை யாட்டுக்கழகமும் மாலை 4.30 மணி க்கு நடைபெறும் போட்டியில் சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

# வல்லவன் உதைபந்தாட்ட தொடர் பலாலி விண்மீன் வெற்றி




பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளை யாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதை பந்தாட்ட தொடரில் 14.06.2016 அன்று நடைபெற்ற போட்டியில் நசரேத் வி.க வெற்றிகொண்டு விண்மீன் வி.க.மூன்றாம் சுற்றில் கால் பதித்தது.

முதற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் பெற முயற்சிகள் மேற்கொண்ட போதும் முதற்பாதி ஆட் டத்தின் இறுதி நிமிடத்தில் விண்மீன் வி.க. காண்டீபன் முதலாவது கோலினை பதிவு செய்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் 58 ஆவது நிமிடத் தில் விண்மீன் வி.க. காண்டீபன் மீண்டும் ஒரு கோலினை அடித்தார். போட்டியில் வெற்றிபெற நசரேத் வி.க. கடுமையாக போராடிய போதும் அனுபவம் வாய்ந்த 4 வீரர்கள் விளையாடாமையினால் முயற்சி கள் பலனளிக்கவில்லை.

ஆட்ட நேர முடிவில் 2:0 என பலாலி விண்மீன் வி.க. வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக விண்மீன் வி.க காண்டீபன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப் பரிசு மற்றும் பதக்கத்தினை ஓய்வு பெற்ற ஆசிரியர் தா.சதாசிவம் வழங்கி கௌரவித்தார். (கு)





# ஹென்றீசியன் சவால் கிண்ணம் முல்லைத்தீவு சென்யூட் வெற்றி



ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக்சுற்று ஆட்டங்கள் புனித ஹென் றீயரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற முக்கிய ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் எதிர் முல்லைத்தீவு சென் யூட் அணிகள் மோதின.

ஆரம்பத்திலிருந்து பரபரப்பை ஏற்படுத்திய ஆட்டத்தில் 8வது நிமிடத்திலேயே சென்யூட் வீரர் மெல்னியஸ்கோலடித்து அசத்தினார்.

22 ஆவது நிமிடத்தில் யங்கம் பன்ஸ் வீரர் ரதன் பதிலடி கோடுத்து ஆட்டத்தை சமன் செய்தார். எனி னும் இரண்டாவது பாதியில் கிடை த்த வாய்ப்பினை சென்யூட் வீரர் பகிரதன் அசத்தல் கோலாக மாற்றி அணியின் வெற்றி வாய்ப்பினை உறுதிசெய்தார்.

இறுதிவரை போராடிய யங்கம் பன்ஸ் மேலதிக கோல் எதனையும் அடிக்காது போக இறுதியில் 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது முல்லை சென்யூட் அணி. போட் டியின் ஆட்டநாயகனாக சென்.யூட் அணி யின் பியூஸ்லஸ் தெரிவானார். (கு)

# நவஜீவன்ஸ் வெற்றி

புத்தூர் வி.க நடத்தும் வட மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் 13.06. 2016 நடைபெற்ற போட் டியில் யாழ். பாரதியினை 2-1 கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வெற்றிபெற்றுள்ளது. (கு)



மாகாண் மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பற்றிக்ஸ் கல்லூரி மாணவிகள் 01 வெள்ளிப்பதக்கம் உட்பட 5 பதக்கங்களை பெற்றுள்ளார்கள். இவர்களுடன் பிரதிக்கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) M. சத்தியபாலனும் கராத்தே பொறுப்பாசிரியர் P. அன்ரனி குரிஸ்ரியன், பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சேய் S. விஜயராஜ் (S.S.K.A கராத்தே கழகம்) ஆகியோரை படத்தில் காணலாம். வெற்றி பெற்ற மாணவர்கள் விபரம் 15 வயதுப்பிரிவு K. கரிஸ்ராஜ் -குறூப்காட்டா , வெண்கலம் 19 வயதுப்பிரிவு, S. சபின்-குறூப்காட்டா வெண்கலம்-தனிக்காட்டா வெண்கலம், S. சிந்துஜன் 17 வயதுப்பிரிவு தனிக்காட்டா வெள்ளி -குறூப் காட்டா வெண்கல ஆகியோரை படத்தில் காணலாம்.

# சென்.மைக்கல் வெற்றி



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் முதலாவது போட்டியில் அரியாலை ஐக்கிய கழகத்தை 1:0 கோல் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு நுழைந்து உரும்பிராய் சென்.மைக்கல் வி.கழகம். (கு)

# வைத்திலிங்கம் ஞாபகார்த்த மென்பந்தாட்ட சுற்றுத்தொடர் ரேவடி வெற்றி

லைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் மறைந்த உறுப்பினர் நட ராசா வைத்திலிங்கம் (வைத்திய ப்பா) ஞாபகார்த்தமாக 2 வது வருடமாக நடத்தும் சுழல் கிண்ண மென்பந்தாட்ட தொடர் நடைபெற்று வருகின்றது. அண்மையில் நடை பெற்ற போட்டியில் முதலில் ஆடிய ரேவடி அணி 87 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந் தது. ரேவடி சார்பாக சஞ்சீவன் 31.ஜீவா 15 ஓட்டங்களை பெற்ற னர். பந்து வீச்சில் தீருவில் சார்பாக திருக்கு மரன், மயூரன் தலா 2 விக்கெட் டுகளை வீழ்த்தினர்.

88 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய தீருவில் அணி 72 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டு களையும் இழந்தது.தீருவில் சார் பாக திருக்குமரன் 24, மயூரன் 16 ஓட்டங்களை பெற்றனர். ரேவடி சார்பாக உலகராசா 3 விக்கெட்டு களை வீழ்த்தினார். ரேவடி அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.(கு)

## 4 அமைச்சர்கள்...

பிரித்தானியா சென்றுள்ளனர்.

சுசில் பிரேமஜயந்த, ஹரின் பெர்ணான்டோ, ஹர்ச டி சில்வா மற்றும் டிலான் பெரேரா ஆகியோரே பிரித்தானியா சென்றுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை தவிர முன்னாள் அமைச்சர் ரோசி சேனநாயக்கவும் பிரித்தானிய பிரதமருக்கு ஆதரவு வழங்குவதற்காக அங்கு சென்றுள்ளார்.

பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தில்இருந்து விலக வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக இந்த கருத்து கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

பிரித்தானியா தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருக்க வேண்டும் என டேவிட் கமரூன் தரப்பினர் கூறியுள்ளனர்.

பிரித்தானிய பிரஜைகளில் பெரும்பான்மையானவர்கள் விலகக் கூடாது என்ற நிலைப்பாட்டில் இருப்பதாக முதல்கட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. (செ-12)

## ஊடகவியலாளர்...

தொடர்பாக நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியுள்ள பொலிஸார், அவருக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சிறப்பு ஊடகச் சந்திப்பில், பொலிஸ ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

பிரேசிலில் இருந்து கடத்தி வரப்பட்ட கொக்கெய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதையடுத்து அதனை ஜனாதிபதியும், நிதியமைச்சரும் பார்வையிடச் சென்றிருந்த போது அங்கிருந்த சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரி ஊடகவியலாளர்களை எச்சரித்திருந்தார்.

ஊடகத்தை எப்படிக் கட்டுப்படுத்துவதென்று தனக்குத் தெரியும் என்றும், பாதாள உலகத்தினரைப் போன்று ஊடகவியலாளர்களையும் கட்டுப்படுத்துவேன் என்றும் ரஞ்சித் பெரேரா தெரிவித்திருந்தார்.

இதனை நீங்கள் முப்படையினரிடம் செய்தால், அவர்கள் காலை முறித்து தனியாகப் போட்டிருந்திருப்பார் என்றும் அவர் ஊடகவியலாளர்களைப் பார்த்து எச்சரித்துள்ளார்.

இந்தக் கருத்தை பொலிஸ்துறையும், சிறப்பு அதிரடிப்படையும் கண்டிப்பதாகவும், இது பொலிஸ்துறையினதோ, சிறப்பு அதிரடிப்படையினதோ கருத்து அல்ல, இது அவரது தனிப்பட்ட கருத்து என்றும் பொலிஸ்மா அதிபர் சார்பில், அஜித் ரோகண தெரிவித்தார்.

இதுதொடர்பாக அனைத்து ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களிடம் உளப்பூர்வமான மன்னிப்புக் கோருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## இரு சகோதரர்கள்...

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய இளைஞர் குழுவினர் நேற்றைய தினம் நயினாதீவு நாகபூஷணி அம்மன ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவுக்கு சென றுள்ளனர்.

தேர்த்திருவிழா முடிவுற்ற பின்னர் நயினாதீவு அம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள கடற்பரப்பினுள் காணப்படும் கருடன் பாம்பு கற்களை வழிபட சென்ற பின்னர் எட்டு பேரும் அப்பகுதியில் உள்ள கடற்பரப்பில் காலை 10.30 மணியளவில் நீராடியுள்ளனர்.

இவ்வாறு குளிக்க சென்றவர்களில் மூவர் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல்போய் இருந்தனர். இதனையடுத்து அவர்களுடன் சென்றிருந்த ஏனைய இளைஞர்கள் கடற்படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

மிக நீண்ட தேடுதல் நடவடிக்கையின் பின்னர் குறித்த மூவரது சடலங்களையும் நேற்று மாலை 4 மணியளவில் கடற்படையினர் மீட்டிருந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் இருவர் சகோதரர்கள் என்பதுடன் மற்றைய நபர் அவர்களது நண்பர் என்பது பரிதாபத்துக்குரிய விடயமாகும்.

தேர்த்திருவிழாவில் கலந்து கொள்வதற்காக சென்ற சகோதரர்களான கோண்டாவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த தேவராசா சாருஜன் (வயது 23) தேவராசா சஞ்சயன் (வயது 22) மற்றும் உதயகுமார் பகிரதன் (வயது 21) ஆகிய மூவருமே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை நயினாதீவு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் மூவரது சடலங்களும பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (செ-9-30-60)

## எதிரணியை முட...

யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில பொலிஸ் விஷேட விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதையிட்டு அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பாராளுமன்ற உறுப்பினரும் தூய்மையான நாளைக்கான ஹெலஉறுமய அமைப்பின் தலைவரும் கூட்டு எதிரணியின் அங்கத்தவருமான உதய கம்மன்பில போலி குற்றச்சாட்டினை மையப்படுத்தி கைது செய்யப்பட்டுள்ளார். அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டினை தேசிய சுதந்திர முன்னணி வன்மையாக கண்டிக்கிறது.

அதேநேரம் நாட்டின் தேசிய பாதுகாப்பை முற்றாக இல்லாதொழித்து மீண்டும் தீவிரவாத சக்திகளுக்கு உயிர்கொடுக்கும் செயற்பாடுகளை இந்த அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. தேசத்திற்கு துரோகம் செய்யும் இந்த அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் மக்களும் அதிருப்தி அடைந்துள்ளனர் என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (செ-12)

# இருக்கின்ற கோவில்களை பராமரிக்காது புதிய கோவில்களை அமைப்பது பயனற்றது

## வறியோருக்கு உதவுங்கள் என முதலமைச்சர் உரை



இருக்கின்ற கோவில்களில் வழிபாடு செய்வதற்கு மக்கள் இல்லாத நிலையில் புதிது புதிதாக கோவில்களை அமைக்க முயல்வது பயனற்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்

துணைவி கலைவாணி சனசமூக நிலையத்தின் 31வது ஆண்டு விழாவும் அமரர் சி. சிதம்பரப்பிள்ளை ஞாபகார்த்த கலைவாணி கலையரங்கு திறப்புவிழாவும் நேற்றைய தினம் துணைவி,சங்கரத்தையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருந்து ஒருவேளை சோற்றிற்கே அல்லலுற்ற மக்கள் தமது ஆரம்பக் கல்வியைக்கூட தொடர முடியாது மிகச் சிரமப்பட்டு வெளிநாடுகளுக்கு சென்று அங்கே வளமான வாழ்க்கையொன்றைப் பாடுபட்டு அமைத்து அவ்வாறு சம்பாதித்த பணத்தைத் தாம் பிறந்த மண்ணிற்குச் செலவு செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றார்களே அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

பல கிராமங்களில் இருந்து மக்கள் சமூகப் பணிகளுக்காக உதவி கேட்டு எமது அலுவலகத்தை நோக்கி தினமும் வருகின்றார்கள். கோவில்கள் அமைக்க, சனசமூக நிலையங்கள் அமைக்க, முன்பள்ளிகள் அமைக்க என பல்வேறு தேவைகளுக்காக பணம் கேட்டு வருகின்றார்கள்.

இவர்களில் பலர் எந்தவித உடல் உழைப்புமின்றி சொந்தப் பங்களிப்புகள் இன்றி அனைத்து செலவீனங்களுக்கான கொடுப்பனவுகளும் பிறரிடமிருந்து அல்லது அரசிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

வேலி அருகே ஒரு சூலத்தை நட்டுவிட்டு புதிதாக கோவில் அமைக்க வேண்டும் அதற்கு முதலமைச்சர் தான் பணம் தரவேண்டும் என தினமும் வந்து நச்சரிக்கின்றனர். நாங்கள் உங்களுக்கு வாக்குப் போட்டவர்கள் என்று வேறு மறைமுகமாக அச்சுறுத்தல்களையும் விடுக்கின்றார்கள்.

இருக்கின்ற கோவில்களில் ஆறுகாலப் பூஜை செய்வதற்கும் அதில் வழிபாடு செய்வதற்கும் மக்கள் இல்லாத நிலையில் புதிது புதிதாக கோவில்களை அமைக்க முயல்வது பயனற்றது. வெறும் ஆடம்பரமான செயலாகும். முதலில் இருக்குங் கோவில்களை வினைத்திறனுடன் நடத்த முயற்சிப்போம். அதே நேரம் மக்கள் சேவைதான் இறைவனுக்கு நாங்கள் செய்யக்கூடிய தலையாய சேவை என்பதை மறக்காது மக்களின் வாழ்க்கை நிலை, கல்வி, அவர்களின் வசதிகள் போன்றவற்றை உயர்த்த முன்வருவோமாக!

ஒரு சமூகம் முன்னேற்றகரமான நிலையை அடைவதற்கு கல்வி மட்டும் போதுமானதாக இருக்கமுடியாது. கல்வியுடன் சேர்ந்து தெளிவான சிந்தனையும், விடாமுயற்சியும், மக்களிடையே காணப்படக்கூடிய ஒற்றுமையுந்தான் அவர்களை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும். இந்த வகையில் பின்தங்கிய பகுதிகளில் மிக அடிமட்ட நிலையில் வாழ்ந்த பலரும் இன்று பல வெளிநாடுகளுக்குச் சென்று தம்மை வளப்படுத்திக் கொண்டுள்ளதுடன் தாம் சார்ந்த மக்களுக்காக தமது ஒரு குறிப்பிட்ட பங்களிப்பைத்தன்னும் நல்க வேண்டும் என்பதில் குறியாக உள்ளனர். ஆனால் சிலரோ தாம் வாழ்ந்த கிராம சூழ்நிலையை மறந்து தற்போது பெற்றுள்ள செல்வச் செழிப்பினால் பெருமிதப் போக்கில் தமது நடையுடைபாவனைகளை மாற்றிக் கொண்டுள்ளனர்.

இவர்கள் காலத்தினால் திருத்தப்படவேண்டியவர்கள். ஒன்றை வெளிநாட்டில் வாழும் எம்மவர் பலர் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை. தற்போதைய நிலை என்றுந் தொடரும் என்று நினைக்கின்றார்கள். தமது மக்களின் நல்ல பழக்கவழக்கங்கள் பாதிக்கப்படுகின்றன என்று வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களை அடித்து விரட்டும் நிகழ்வுகள் ஒன்றும் சரித்திரங்களில் புதியதல்ல. உங்கள் மக்களுடன் தொடர்பு வைத்திருப்பதை நீங்கள் விரும்பினீர்கள் என்றால் தொடர்ந்து உங்கள் கொடைகளை அவர்களுக்குக் கொடுத்து வருதல் உங்கள் வருங்கால சந்ததியினருக்கும் நன்மை பயக்கும்.

எனவே இல்லாமையும், ஏழ்மையும் ஒரு மனிதனுக்கு நிரந்தரச் சொத்தல்ல. வறுமையில் பிறந்த பலர் பிற்காலத்தில் செல்வச் செழிப்புடன் மிளிர்ந்ததை நாம் அனுபவவாயிலாக அவதானித்துள்ளோம். எனவே எமது கடின உழைப்பும் விடாமுயற்சியும் எம்மை வல்லவர்களாக மாற்றும். ஏன் நல்லவர்களாகவும் மாற்றும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய மாபெரும் வருடாந்த பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று பூசைகளுடன் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். (செ-11)

## தேசிய விளையாட்டுப் போட்டி; வடக்கில் விசேட குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்திற்கான தேசிய விளையாட்டுப் போட்டியானது யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோரின் தலைமையின் கீழ் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தேசிய விளையாட்டுப் போட்டியானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நகரங்களை மையப்படுத்தி நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கூடைப்பந்து, கடற்கரை கபடி, கடற்கரை கரப்பந்து , கரம், சதுரங்கம், கால்பந்து உள்ளிட்ட பல விளையாட்டுப் போட்டிகள் யாழ் நகரில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் கிளிநொச்சியில் நீச்சல் மற்றும் தடகளப் போட்டிகள் நடத்தப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தீ விபத்துக்குள்ளான பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதியில் அமைந்துள்ள கோவில் திருவிழா ஒன்றுக்குச் சென்று வீட்டுக்கு வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் மீது தீப்பிடித்துக் கொண்டதினால் அவர் உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டான்சேனை தேவாபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயரான சீனித்தம்பி சுவாஜினி (32 வயது) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரின் கணவன் வெளிநாடு சென்றுள்ள நிலையில் தனது 13 வயது மகளுடன் வாழைச்சேனையில் அமைந்துள்ள இந்து ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற வருடாந்த கோவில் திருவிழா ஒன்றுக்குச் சென்றுள்ளார்.

திருவிழா முடிவடைந்து மாலை 4 மணியளவில் வீட்டுக்கு வந்து தேநீர் தயார் செய்வதற்காக எரிவாயு சிலிண்டர் அடுப்பை தயார் நிலைபடுத்தும்போது எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்டிருந்த கசிவுத் தன்மை காரணமாக இவர் மீது தீப் பிடித்துள்ளது.

தீக் காயங்களுக்குள்ளான இவரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலை 6.30 மணியளவில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-12)

## உதயங்க வீரதுங்க விவ...

சாத்திடப்பட்டதன் பின்னர், எதிர்வரும் 27ஆம் திகதி முதல் அது நடைமுறைக்குவரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. உக்ரைனில் மறைந்து வாழ்வதாக நம்பப்படும் ரஷ்யாவுககான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை நீதித்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உக்ரைன் பிரிவினைவாதிகளுக்கு ஆயுதம் வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக உதய வீரதுங்கவை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷ அண்மையில் மேற்கொண்ட தாய்லாந்து மற்றும் ஜப்பான் விஜயங்களின் போது உதயங்க வீரதுங்கவை சந்தித்தமைக்கு சான்றாக சில புகைப்படங்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து, தாம் உக்ரைனில் வாழ்ந்து வருவதாக உதயங்க வீரதுங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து, குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டு உக்ரைனில் தங்கியுள்ளவர்களை தாய்நாட்டிற்கு ஒப்படைக்கும் வகையிலான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவையில் கடந்தவாரம் அங்கீகாரம வழங்கப்பட்டுள்ளது. (செ-12)

## புதியகட்சி...

ஜப்பானுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட எம்.பியுமான மகிந்த ராஜபக்ஷ உட்பட பொது எதிர்க்கட்சியினை சார்ந்தோர் ஜப்பானில் வாழும் இலங்கையர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த போது, உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கட்சி ஆரம்பிக்கப்படுமென்றும்,

அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், தமது புதிய கட்சியின் சார்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அபேட்சகர்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ளதோடு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தோர் பலர் தம்மோடு இணையவுள்ளதாகவும், தேர்தலில் வெற்றி பெறுவோம் என்றும் ஜப்பானில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கேட்டபோதே அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான துமிந்த திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## "குற்றச்சாட்டை நிரூபித்...

தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் அந்த நாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் அவ்வாறு சில சந்தர்ப்பங்களில் குற்றம் சுமத்தியுள்ளதாக இதன்போது குறிப்பிட்ட மகிந்த, தான் ஒரு டொலரையாவது கொள்ளையிட்டுள்ளதாக நிரூபித்தால் கழுத்தை அறுத்து கொள்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் எதிர்கால அரசியல் வாழ்க்கை தொடர்பில் அவர் இதன்போது குறிப்பிடுகையில் அரசியல்வாதிகள் ஒருபோதும் ஓய்வுபெற மாட்டார்கள் என கூறியுள்ளார்.

அத்துடன், தான் 2015-ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தமை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை தனக்கு எதிராக திசை திருப்பியதன் காரணமாகவே எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## போராட்டம்...

கடந்த வியாழக்கிழமை என்னை விசாரணை செய்த பொலிஸார் இனி விசாரணை தேவையில்லையென தெரிவித்து அனுப்பிவைத்தனர்.

ஆனால் நேற்றுமுன்தினம் காலை என்னைக் கைதுசெய்துள்ளனர். இதன் பின்னணியில் ஏதோ நோக்கம் உள்ளது.

எப்படித்தான் கைதுசெய்தாலும் அரசுக்கு எதிரான எனது போராட்டத்தை நிறுத்தமாட்டேன். எப்படியும் இனியும் இந்தப் பதிவை பார்த்தப்பின்னர் எனது கையடக்க தொலைபேசியை பறித்துக்கொள்ளலாம். இதனால் யாரும் எனக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார்,

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட உதய கம்மன்பில, ஜூலை முதலாம் திகதி வரை விளக்கமறியலில வைக கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## 4,600 படை...

பாய்களும் 206 கடற்படையினரும் 165 விமானப்படையினரும் உள்ளடங்குவதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர சிறிசேன தெரிவித்தார்.

இதேவேளை, இம்மாதம் 13 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை குறித்த பொதுமன்னிப்புக் காலமானது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் கைவசம்
நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்
SIKARAM ACADEMY Business · Hospitality · English SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011 077 3616 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(C-4967)

## தனியார் காணிகளி...

திரிபால சிறிசேன தனியார் காணிகளில் தங்கியிருக்கும் இராணுவத்தினர் தொடர்பாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுடன் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் தனியார் காணிகளில் நீண்ட காலமாக இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இதனால் பொதுமக்கள் பெருமளவிலான பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

பலதடவைகள் இவ்விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டிய போதும முன்னைய ஆட்சியாளர்கள் இதனைக கருத்திலெடுக்க வில்லை.

இவ்வாறான நிலையில் தற்போது இப்பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொணடு வந்துள்ளேன்.

தனியார் காணிகளில் இராணுவத்தினர் தங்கியிருக்கும் இடங்கள் குறிதத விபரங்களை சமர்ப்பிக்குமாறு அவர் என்னிடம் கோரியுள்ளார். எனவே காணிகளின் விபரங்கள் விரைவில் கையளிக்கப்படும். விரைவில் இதற்கு நிரந்தரமான தர்வொன்றை ஜனாதிபதி வழங்குவார் என எதிர்பார்க்கினறேன்.

அத்துடன் தற்போது வர்த்தமானி அறிவித்தலுடன் தனியார் காணிகள் சுவிகரக்கப்பட்டு வருகின்றன. அக்காணிகளையும் விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)


நயினை நாகபூஷணி அம்பாள் தீர்த்தோற்சவம் சிறப்புற வாழ்த்துகிறோம். — யுனிலங்காஸ்
கலண்டர் உலகில் தரமான நாட்காட்டி
யுனிலங்காஸ் பஞ்சாங்க, தினத்தாள் கலண்டர்கள்
(வாக்கிய பஞ்சாங்க இரகுநாதய ஐயரால் கணிக்கப்பட்டது)
புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு
வெற்றிச்சிகரம்
மாதிரி வினாத்தாள்கள் ஆக்கம் S.கணேசலிங்கம் - திருமலை
தரம் 1 முதல் தரம் 5 வரை மாணவர்களின் பரீட்சை வழிகாட்டி
வெற்றிக்கு வழிகாட்டி
24 மாதிரி வினாத்தாள்கள் விடைகளோடு
தரம் 1 முதல் தரம் 5 வரை தவணைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்
யாழ் எக்ஸ்பிரஸ்
15க்கு மேற்பட்ட நாடளாவியரீதியில் முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில் தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், நுண்ணறிவு, இந்து சமயம், இஸ்லாம், கத்தோலிக்க திருமறை ஆகிய பாடங்கள் விடைகளோடு
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களே! எதிர்பார்க்கை வினாக்களுடன் 12 நாடளாவியரீதியில் அக்கரைப்பற்று, காரைநகர், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கொழும்பு, புசல்லாவ, ஹட்டன், பதுளை, நுவரெலியா ஆகிய பிரதேசங்களை சேர்ந்த முன்னணி ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டுள்ளது.
பூமாலை
ஒவ்வொன்றும் 16 பக்கம் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடையோடு விசேட கையேடு அடங்கியது. - (யூலை 1 முதல் கிடைக்கும்)
வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல. 10-1/1, (Trust Complex 342 Sea Street)
ஜிந்துப்பிட்டிய வீதி கொழும்பு 13. தொ.பே : 077 6258778
ஆரம்பக்கல்வி மாணவர்களே! வாங்கிப் படியுங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்.
(C-4919)

FALC FRENCH LANGUAGE CENTRE "FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.
ஆரியகுளம் →100M → பலாலி வீதி→ அப்பலோ Hospital→ FLC
(C-4922)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
❋ 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை.
❋ உணவுப்பொருட்கள், உடுப்புகள், கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
மிகக் குறைந்த கட்டணம்.


திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd.
271, K.K.S Road, Jaffna
கிளைகள்: திருநெல்வேலி, நெல்லியடி, பருத்தித்துறை, சங்கானை.
தொலைபேசி இல : 021 222 7835
(4981)

af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி

• பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது.தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
• எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
• இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
• யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்
ஆரம்பம் விரைவில், உடன் அழைத்துப் பதியவும்.
021 222 8093 61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(4968)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
• வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
• வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
• காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
☏ 021 222 3536
10, கஸ்தூரியார், வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.
(C-4966)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.